விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 30 ஞாயிற்றுக்கிழமை (16.11.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 332

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## தேர்தல் தோல்வியை தவிர்க்க பொது பல சேனாவுடன் நாமல்!

(கொழும்பு)

*ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவின் தோல்வியைத் தவிர்ப்பதற்கான கடைசி முயற்சியாக பொது பல சேனாவுடன் நாமல் ராஜபக்ஷ இணைந்து கொண்டுள்ளார்.*

நாமல் ராஜபக்ஷவின் நில் பல காய மற்றும் பொது பல சேனா அமைப்பு இணைந்து இது தொடர்பாக இன்று கொழும்பில் இளைஞர் மாநாடொன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளன. குறித்த இளைஞர் மாநாடு கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

பொதுவாக பொது பல சேனா அமைப்பு மாநாடொன்றை நடத்துவதாயின் ஒரு வாரத்துக்கு

23ஆம் பக்கம் பார்க்க....



## இந்திய மீனவர்களின் வேலைநிறுத்தம் வாபஸ்

(கொழும்பு)

இந்திய மீனவர்கள் 5 பேருக்கு, இலங்கை மேல் நீதிமன்றம் கடந்த 30ஆம் திகதி மரண தண்டனை விதித்தமைக்கு கண்டனம் தெரிவித்து, இராமேஸ்வரம் மீனவர்கள் மேற்கொண்டுவந்த வேலைநிறுத்தத்தை கைவிட்டு, நேற்று முதல் மீண்டும் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 2 வாரத்துக்கும் மேலாக அவர்கள் மீன்பிடிக்கச் செல்லாமல் வேலைநிறுத்தத்தை மேற்கொண்டு வந்த நிலையில், இராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மீனவர் சங்க கூட்டம், மீனவர் சங்க தலைவர் அல்போன்ஸ் தலைமையில் இராமேஸ்வரத்தில் நடந்தது.

இலங்கை அரசால், மரண தண்டனை விதிக்கப்பட்ட 5 மீனவர்

23ஆம் பக்கம் பார்க்க....

## புலிகளுக்கு நோர்வே நிதியுதவி வழங்கியது

### ஜனாதிபதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

நோர்வேயின் முன்னாள் அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்கியமை குறித்து விசாரணைகள் இடம்பெற வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குருணாகலயில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் நேற்று அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் முன்னைய அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்கியதை உறுதிசெய்யக் கூடிய ஆதாரங்கள் தன்னிடமுள்ளதாக குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி இதன் காரணமாக நோர்வே அரசாங்கம் இது குறித்து விசாரணை செய்ய

23ஆம் பக்கம் பார்க்க....

## எதிர்க்கட்சி வேட்பாளர் தெரிவு இறுதிக்கட்டத்தில்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகளின் சார்பில் பொதுவேட்பாளராக போட்டியிடவுள்ளவரை தெரிவு செய்யும் முயற்சிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தப் பொதுவேட்பாளர் பட்டியலில் ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த தலைவர் கரு ஜயசூரிய மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உள்ளிட்ட பலரின் பெயர்கள் பரிசீலனையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆயினும் இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள்

24ஆம் பக்கம் பார்க்க....

## இந். பாதுகாப்பு ஆலோசகர் அடுத்த மாதம் இலங்கை வருகை



(கொழும்பு)

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் அடுத்த மாத ஆரம்பத்தில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கடல்சார் பாதுகாப்புக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் நோக்குடனேயே அவர் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளதாக நாடாளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சர்

23ஆம் பக்கம் பார்க்க....

## முதலமைச்சர் மீது சீமான் காட்டம்

(கொழும்பு)

ஐயா விக்னேஸ்வரன் யார்? இவ்வளவு காலமும் அவர் எங்கிருந்தார்? என்று சீமான் இந்திய தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் கேள்வியெழுப்பியுள்ளார்.

நேர்காணலில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

இந்த ஈழ போராட்டம் எத்தனை காலமாக இடம்பெற்று வருகின்றது என ஐயா விக்னேஸ்வரனுக்கு

23ஆம் பக்கம் பார்க்க....

## சாட்சி வழங்குவது முடிவுக்கு வந்தது!

### ஐ.நா அறிவிப்பு



(ஜெனிவா)

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது புரியப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா மனிதவுரிமை ஆணையாளர் பணியகம் மேற்கொள்ளும் விசாரணைக்கான சாட்சியங்களை ஏற்றுக்கொள்வது முடிவுக்கு வந்துள்ளதாக ஐ.நா

23ஆம் பக்கம் பார்க்க....

SISIL WORLD
உங்கள் கண்களுக்கு விருந்தளிக்க 40% வரை மின்சார சேமிப்புடன் கூடிய
LED,3D LED
தொலைக்காட்சி பெட்டிகள்
இப்பொழுது எம்மிடமிருந்து!

- வட்டி இன்றிய கொடுப்பனவு
- விசேட விலைக் கழிவுகள்
- 3வருட நீடித்த உத்திரவாதம்
- பண்டமாற்று கொடுப்பனவு
- விசேட பரிசுப்பொருட்கள்
இல-10சி,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம் 021-2219291.
இல-125,கே.கே.எஸ் வீதி,சுன்னாகம் 021-2242335
இல-17/3,கண்டி வீதி,கிளிநொச்சி 021-2283755
(சி-9086)

SDB
உபஹார

ரூபா ஒரு இலட்சத்துக்கான தவணைக் கட்டணம் ரூ.1, 609 இலிருந்து*
வாழ்வாதாரமளிக்கும் - உற்சாகமூட்டும் - நிம்மதியான வாழ்க்கை
ரூபா ஒரு மில்லியன் வரையிலான கடனுதவி.*
உத்தரவாதமளிப்பவர்கள் தேவையில்லை.
ஆகக்குறைந்த வட்டி.
ஆகக்குறைந்த தவணைக் கட்டணம்.
மரணத்தின்போது தங்கி வாழ்பவருக்கு நட்டயீட்டுக் கொடுப்பனவு.*
வங்கியொன்றினால் வழங்கப்படும் அதிகூடிய ஓய்வுக் கடன்.*
*நிபந்தனைகளுக்குட்பட்டது.
ஓய்வுபெற்றவர்களான உங்களது விருத்திக்காக வேண்டி ஆகக்குறைந்த வட்டி வீதத்துடன் உங்களுக்கு பெற்றுத்தரப்படும் மாபெரும் வெகுமதி.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்*
0112 832577
Sri Lanka Pensions
ஓய்வூதியத் திணைக்களம்
பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
SDBL
சணச அபிவிருத்தி வங்கி
தேசத்தின் முன்னோடி
Reg. No: PB 62PQ
(சி-9084)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனஞ்செயன் தற்கொலை முயற்சி

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி, கதிரிப்பாயில் இடம்பெற்ற முக்கொலைக்கு காரணமானவர் என்ற சந்தேகத்தில் விளக்கமறியலில் இருந்துவரும் தனஞ்செயன் அதிக மாத்திரைகளை விழுங்கி தற்கொலைக்கு முயற்சித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர் நெஞ்சுவலி காரணமாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதன்போது வைத்தியர்கள் மேற்கொண்ட பரிசோதனைகளில் அவர் அதிக மாத்திரைகளை உட்கொண்டிருந்தமை தெரியவந்தது என்று வைத்தியசாலை தரப்பு தெரிவித்துள்ளது.

யாழ்.அச்சுவேலி, கதிரிப்பாய் பகுதியில் கடந்த மே மாதம் 4ஆம் திகதி அதிகாலை ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகன் மற்றும் மகள் என மூவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருந்தனர். மேலும் இருவர் படுகாயமடைந்திருந்தனர். இவர்களை படுகொலை செய்தார் என்ற சந்தேகத்தில் தனஞ்செயன் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்று ஊடாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)


# தென் இந்தியத் திருத்தல யாத்திரை

பாடசாலை விடுமுறையை முன்னிட்டு
தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரி
ஆகிய ஐந்து மாநிலங்களுக்கு ஊடான யாத்திரை
ஆரம்பம்: **06.12.2014** நிறைவு: **20.12.2014** நாட்கள்: **15**

தரிசிக்கும் ஆலயங்களுள் சில:-
உச்சிப் பிள்ளையார், ஆறுபடை வீடுகள், பஞ்சபூதத் திருத்தலங்கள், நவக்கிரக ஆலயங்கள், திருப்பதி, பிரம்மா கோவில், மைசூர் அரண்மனை, மதுரை மீனாட்சி, கன்னியாகுமாரி, தஞ்சைப் பெருங்கோயில் உட்பட 70க்கும் குறையாத ஆலயங்களை தரிசிப்பதுடன் சமண மகாமிஷம் ஆச்சிரமம், மணக்குழவிநாயகர், சுசீந்திரம் ஆஞ்சநேயர், சரஸ்வதி ஆலயம், பாண்டிச்சேரி பீச், மரினா பீச், பூம்புகார் என்பனவும் காணலாம்.

(8339)

எமது சேவைகள்:-
இருவழி விமான ரிக்கற், மூன்றுவேளை சைவ உணவு, கோப்பி, ரீ, நாளொன்றுக்கு 1 L தண்ணீர் போத்தல் (மினரல்), தங்குமிடங்கள், யாத்திரை முடியும்வரை A.C வாகன வசதி, யாழ்-ஏர்போர்ட் வாகன வசதி. இத்துடன் இந்த யாத்திரையில் பங்கு பெறுபவர்க்கு இந்திய வீசா விண்ணப்பப்படிவம் மற்றும் புகைப்படமும் இலவசமாக கொடுக்கப்படும்.

3 நாள் சிங்கப்பூர் சுற்றுலா Packageகளும் எம்மிடம் உண்டு.

மேலதிக தொடர்புகளுக்கு:-
**0772208344, 0770091406, 0212224665, 0776981926**
320/B, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.

**தேவை**
மேற்குறித்த நிறுவனத்துக்கு அலுவலக உத்தியோகத்தர்கள் தேவை. தகுந்தவர்கள் விண்ணப்பிக்கவும்.
**travels@jaffnaholidays.lk**


# தமிழ்க் கூட்டமைப்புடனும் பேச்சு நடத்துவோம்

## ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)



இலங்கையின் நேரடியான மற்றும் செயற்பாட்டு ரீதியான அரசியல் கட்சி என்பதால் ஜாதிக ஹெல உறுமய தமிழ்த் தேசியத் கூட்டமைப்புடன் கூட பேச்சுவார்த்தைகளை நடத்தும் என மேல் மாகாண அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுடன் ஜாதிக ஹெல உறுமயவிற்கு உள்ள புதிய கொடுக்கல் வாங்கல் என்ன என்று கொழும்பு ஊடகம் ஒன்று கேட்டபோதே அவர் இதனை கூறியுள்ளார்.

எந்த புதிய கொடுக்கல் வாங்கல்களும் இல்லை. எமது கட்சி இலங்கையின் நேரடியான மற்றும் செயற்பாட்டு ரீதியான அரசியல் கட்சி.

இதனால், நாட்டின் பிரதான அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவது போல் முக்கியமான அரசியல் பிரமுகர்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்துவோம்.

இதனடிப்படையிலேயே முன்னாள் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. எனினும் எந்த உடன்பாட்டுக்கோ, நிபந்தனைக்கோ வரவில்லை.

முன்னாள் ஜனாதிபதியுடன் மாத்திரமல்ல, நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் பேச்சுவார்த்தை நடத்துவோம் என உதய கம்மன்பில குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# ஜனாதிபதி நேபாளம் பயணம்

நேபாளத்தில் நடைபெறவுள்ள சார்க் மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 25-ம் திகதி காத்மண்டுவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்த மாநாட்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பாகிஸ்தானிய பிரதமர் நவாஸ் செரீப், ஆப்கானிஸ்தானிய ஜனாதிபதி அஸ்ரப் கானி, பங்களாதேஷ் பிரதம மந்திரி ஷேக் ஹசீனா, பூட்டான் பிரதமர் சேரிங் டப்காய், மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லா யேமன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

சார்க் மாநாட்டுக்கான அழைப்புக்களை நேபாள அரசாங்கம் உத்தியோகபூர்வமாக விடுக்கவுள்ளது. (எ-11)


## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
☛ கடிதங்கள் ☛ அன்பளிப்பு பொருட்கள் ☛ உடுபுடவைகள்
☛ CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(சி-9585)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

DHL
விரைவு! பாதுகாப்பு!! நம்பகத்தன்மை!!!
THIRUMURUGEN COM NET (PVT) LTD.

DHL இன் நேரடி அங்கீகாரம் பெற்ற ஒரே முகவராக விளங்கும்
**திருமுருகன் கொம்நெற் (Pvt) Ltd.**

தற்பொழுது உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவையினை மூன்று வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

Delivery 3 working days

இல. 271A, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(ஆல்சிலோன் புத்தகக்கடைக்கு முன்பாக)
T.P: 0212227835 / 0777554528
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது.)
(C-9010)


# மரண அறிவித்தல்

## அமரர் வேலுப்பிள்ளை தம்பு

(ஓய்வுநிலை ஆசிரியர் - இடைக்குறிச்சி, வரணி)



இடைக்குறிச்சி வரணியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தம்பு 14.11.2014 வெள்ளிக்கிழமை அன்று தனது 102 ஆவது வயதில் இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் (சடையர்)- சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கதிராசிப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிற்றம்பலம், சிதம்பரப்பிள்ளை, நமசிவாயம் ஆகியோரின் சகோதரரும், நடராசா (ஓய்வுநிலை நீதிமன்ற தட்டெழுத்தாளரும் சத்திய மொழிபெயர்ப்பாளரும்), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (நெடுங்கேணி ப.நோ.கூ.ச), காலஞ்சென்ற அகிலேஸ்வரி, சிவசுப்பிரமணியம் (கணக்காளர்-மொன்றியல் கனடா), சிவபாக்கியம் (வரணி), சிவகாமிப்பிள்ளை (கொழும்பு), கௌரி மனோகரி (ஆசிரியை-யாழ்/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்), செல்வகுமார் (கணக்காளர்-லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாதேவி, காலஞ்சென்ற ஜானகி அம்மா, சத்தியேஸ்வரி (கனடா), சிவபாதசுந்தரம் (ஓய்வுநிலை நிதி முகாமையாளர்-நியூசிலாந்து), இ.சிவபாதசுந்தரம் (ஓய்வுபெற்ற விவசாயத் திணைக்கள நிலையப் பாதுகாவலர்), காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை, விஜயகுமார் (அதிபர்- யா/நவாலி ஸ்தான அ.மி.த.க. பாடசாலை), துர்காஜினி (கணக்காளர்- லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், உதயணன், மேகலா, மேனகா, காலஞ்சென்ற தர்மேந்திரன், நிஷாந்தினி, பிரியதர்ஷினி, செந்தூரன் (நியூசிலாந்து), துவாரகன் (நியூசிலாந்து), கீர்த்திகா (நியூசிலாந்து), உபேந்திரன் (கனடா), பிரசாந் (லண்டன்), சோபினி (கொழும்பு), சுகிபன் (கொழும்பு), மதுரஷன் (லண்டன்), சியாமிலி (கொழும்பு), அனோஜன் (கொழும்பு), விதுரன் (அராலி), குபேரன் (அராலி), கரேன் (லண்டன்), இந்துமா (லண்டன்), அரண் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், தர்மிதன் (வவுனியா), அனேஷ் (நியூசிலாந்து), சந்தோஷ் (நியூசிலாந்து), சஜீஸ் (கொழும்பு), சாயூரன் (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.11.2014) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வரணி கொடிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
இடைக்குறிச்சி
வரணி
குடும்பத்தினர்
0212050862
(8340)

# மரண அறிவித்தல்

## பேரம்பலம் ஞானசூரியன்

(ஓய்வுபெற்ற உள்ளூராட்சி மன்ற எழுதுவினைஞர்)



கொக்குவில் மேற்கு, மணியர்பதி வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் ஞானசூரியன் 14.11.2014 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேரம்பலம்- பொன்மலர் தம்பதிகளின் புதல்வனும், தேவகாந்தியின் (ஆசிரியை -பெரியபுலம் மகா வித்தியாலயம்) கணவரும், ஞானகலை (யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை- ஆசிரியை), ஞானரூபா (லண்டன்) ஆகியோரின் சகோதரனும், நவரத்தினராஜா, பிரமானந்தன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், கீர்த்திகன், ரிஷிகேஷ் (லண்டன்), கிஷான் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 01.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல் :
மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு.
வே.நவரத்தினராஜா
(மைத்துனர்) 0750489697
(8341)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரு நாவல்களின் அறிமுகவிழா இன்று

(தும்பளை)

பொ.கருணாமூர்த்தியின் தேர்லி நினைவு கள் மற்றும் ஆனந்தியின் டயறி போன்ற இரு நாவல்களின் அறிமுக விழா பருத்தித்துறை ஞானலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் சிரேஷ்ட விரிவுரையாளர் கே. அருந்தாகரன், விமர்சகர் ஜி.ரி. சேதார நாதன் ஆகியோர் கருத்துக்களையும் வழங்கவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-19)

## உயிரற்ற வெற்று உடல்களால் ஜனநாயகத்தை ஏற்படுத்த முடியாது

### நந்தன குணதிலக்க

உயிரற்ற உடல்களால் ஜனநாயகத்தை பாதுகாக்க முடியாது என்று பாணந்துறை நகரசபையின் முன்னாள் தலைவர் நந்தன குணதிலக்க தெரிவித்துள்ளார். ஆளும் கட்சியில் இருந்து விலகி விட்ட தாக கூறும் அவர் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அரசாங்கத்தின் ஊழல்களுக்கு எதிராக ஏற்கனவே தாம் பதவிவிலகல் முடிவை எடுத்திருக்க வேண்டும் என்று குறிப்பிட்ட அவர். எனினும் ஊழல்களுக்கு எதிராக அனைத்து நடவடிக்கை களையும் மேற்கொ ண்டதாக தெரிவித்தார்.

இந்த நிலையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளருக்கு ஆதரவாக தீவிரமாக செயற்படப் போவதாகவும் நந்தன குணதிலக்க தெரிவித்தார். (இ-5)

ஐரோப்பா
நாட்டில் சுற்றுலாப் பயணம்
சுற்றுலாவுக்கு தேவையான சகல ஏற்பாட்டுடன், விசா சட்ட ஆலோசனை வழங்கப்படும்.
STUDY IN UK, CANADA, EUROPE, SINGAPORE, MALAYSIA
Student / Visit / Tourist / Business Visit / Special Occasions
flex Institute
Step towards a Bright Future
4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777 761 346
Tel : 2364157 Fax : 2501766
www.flexinstitute.lk
FLEX Graphic

அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின்
பிறந்ததின, பதவியேற்ற நாளை முன்னிட்டு
அவர்களின் வாழ்வு சுபீட்சம் பெறவும்
பணிகள் சிறக்கவும்
வாழ்த்துகின்றோம்.



யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பிரதேச ஆலயங்களில் காலை 10 மணிக்கு விசேட பூஜையும் மதியம் 12 மணிக்கு அன்னதானமும் இடம்பெறும். இதில் சகல மக்களும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

1. செல்வ சந்நிதி முருகன் கோவில்
2. கச்சாய் அம்மன் கோவில் (சாவகச்சேரி)
3. மூளாய் பிள்ளையார் கோவில்
4. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்
5. தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில்
6. தம்பட்டி அம்மன் கோவில் (நாரந்தனை)
7. கைலாசப்பிள்ளையார் கோவில் (யாழ்ப்பாணம்)
8. கோண்டாவில் பேருந்து நிலையம்
9. துன்னாலை கலிகை முருகன் கோவில்
10. கீரிமலை சிவன் கோவில்
11. யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம்
12. வேவில் பிள்ளையார் கோவில் (வல்வெட்டித்துறை)
13. நாகவிகாரை நயினாதீவு
14. கிளிநகர் சித்திவிநாயகர் ஆலயம்



(8342)

அங்கஜன் இராமநாதன்
சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ் மாவட்ட பிரதான அமைப்பாளர்
அங்கத்தவர்கள் மற்றும் ஆதரவாளர்கள்

## இராசி பலன்

16.11.2014
(ஐப்பசி 30, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை- 6.02 மணிக்கு
நவமி பிற்பகல் 12.51 மணிவரை
பூரம் முழுவதும்
இராகுகாலம் 4.37-6.07 மணிவரை
சுபநேரம் 9.07-10.37 மணிவரை

வளவன்

**மேடம்** – சுய முயற்சிகள் மூலம் சுகம் காணும் நாள், வருங்கால நலன் கருதி சேமிக்க நினைப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**இடபம்** – சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், சுபதகவல்கள் வந்து சேரும் நாள், வாகன சுகமுண்டு.

**மிதுனம்** – வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், சகோதரர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும் இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள்.

**கடகம்** – கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும் நாள், எடுத்த காரியத்தில் அதிகபிரயாசை காட்டுவீர்கள்.

**சிம்மம்** – அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள், குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், போசன சுகமுண்டு.

**கன்னி** – வரம் தரும் தெய்வங்களை வழிபட்டு செல்ல வேண்டிய நாள், அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், சுப நலன் கருதிய செலவுகள் இடம் பெறலாம்.

**துலாம்** – செல்வ நிலை உயரும் நாள், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் வெற்றி தரும், உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், புதிய பொருட் சேர்க்கையுண்டு

**விருச்சிகம்** – பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், இனிய சம்பவங்கள் இடம்பெறும் நாள், உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வருவர்.

**தனுசு** – மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதியைக் கொடுக்கும், எதிரியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், சாதுரியமாக பேசி சாதனை படைப்பீர்கள், திடீர் பயணங்கள் இடம் பெறலாம்.

**மகரம்** – உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், எந்தக் காரியத்தையும் பல முறை யோசித்து செய்வது நல்லது, பிரயாண பயமுண்டு.

**கும்பம்** – குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் இடம் பெறுவதற்கான வாய்ப்புண்டு.

**மீனம்** – திறமைகள் வெளிப்படும் நாள், நல்லவர்களின் அறிவுரைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் போராளியின் படுகொலைக்கு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் போராளியான கிருஷ்ணசாமி நகுலேஸ்வரன் சுட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வன்மையாக கண்டித்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் விடுத்துள்ள, கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மன்னார் மாவட்டம் வெள்ளாங்குளம் பிரதேசத்திலுள்ள கணேசபுரம் என்ற கிராமத்தில் வசித்து வந்த முன்னாள் தமிழீழ காவல் துறையில் முக்கிய பொறுப்பில் இருந்தவரெனக் கூறப்படும் கிருஸ்ணசாமி நகுலேஸ்வரன் (வயது 40) கடந்த புதன் கிழமை (12-11-2014) இரவு 8 மணியளவில் அவரது காணியில் வேலை செய்து கொண்டிருந்த போது சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இப்படுகொலைச் சம்பவத்தினை தமிழ்த் தேசியமக்கள் முன்னணியினராகிய நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளது ஆளுகையின் கீழ் வன்னிப் பிரதேசம் இருந்தகாலப்பகுதியில் அங்கு நடைமுறையிலிருந்த தமிழீழகாவல்துறை என்ற கட்டமைப்பில் அதிகாரியாகப் பணியாற்றியதாகக் கூறப்படும் நகுலேஸ்வரன் 2009 மேமாதத்தின் பின்னர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு இலங்கை அரசினால் "புனர்வாழ்வு"அளிக்கப்பட்டதாகக் கூறி சமூகத்துடன் இணைக்கப்பட்டிருந்தார்.

புனர்வாழ்வுமுகாமிலிருந்து விடுதலையான பின்னர் தனது மனைவி, பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவினர்களுடன் வாழ்ந்து வந்த நிலையிலேயே சுட்டுக் கொலைசெய்யப்பட்டுள்ளார். இலங்கைத்தீவு முழுவதும் அரசின் பூரண கட்டுப்பாட்டிலுள்ள நிலையில் ஆயுதப் படையினரிடமும்,பொலிசாரிடமும் மட்டுமே ஆயுதங்கள் காணப்படுகின்றன. அதிலும் வடமாகாணத்தில் சுமார் 15 இராணுவ டிவிசன்கள் நிலைகொண்டுள்ளதுடன், இப்பிரதேசம் உளவுத் துறையினரது அதி உச்ச கண்காணிப்பின் கீழும் உள்ளது. அதுமட்டுமன்றி "புனர்வாழ்வு" அளிக்கப்பட்டதாக கூறிசமூகத்துடன் இணைக்கப்பட்டமுன்னாள் போராளிகள் அதிதீவிரமாகக் கண்காணிக்கப்பட்டும் வருகின்றனர். இவ்வாறான புறச்சூழ்நிலையில் நகுலேஸ்வரன் படுகொலை செய்யப்பட்டுள்ளார், இக்கொலைக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பாகும்.

இக்கொலைதொடர்பாக அரசு நியாயமான விசாரணைகள் எதனையும் நடத்தும் என்றநம்பிக்கைஎமக்குஇல்லை. எனவே இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை மேற்கொண்டுவரும் ஐ.நா மனிதஉரிமைகள் பேரவை இக்கொலைதொடர்பாகவும் முழுமையான விசாரணை ஒன்றினைமேற்கொள்ளவேண்டும் எனக் கோருகின்றோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)


**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**

af ONLY OFFICIAL CENTRE FOR FRENCH IN NORTHERN PROVINCE SINCE 1976

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.

**பிரெஞ்சு மொழி**




- கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே.
- 136+ நாடுகளில் 1040+ கிளைகள்.
- ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் & ஆங்கில விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்) சரியான உச்சரிப்பு
- இலங்கையில் AF மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF,DALF)ஐ வழங்குகின்றது. வேறு இடங்களில் படிக்கிறவர்களும் எம்முடன் இணைந்துகொள்கிறார்கள். பிரெஞ்சு மொழிபெயர்புகள். AUDIO CDs & BOOKS இலவசமாக பாவிக்கலாம். யாரும் படிக்கலாம். ஓரிரு மாதங்களும்படிக்கலாம்.முன்னரே அனுமதிகளைப் பெறவேண்டும்.

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்



**விற்பனைக்கு**

நம்பர் 1 நியூ பேணாட் (New Bernards) கிறீன் வலி (Green Valli) ஊர்க் கோழிக் குஞ்சுகள் நம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:-
செல்வரெட்ணம்
077 8448295,
077 6176370

(சி-9098)



**மலேசியாவில் உடனடி வேலை வாய்ப்புக்கள்**



1)DHL உதவியாளர்(சம்பளம்)1500 Rm + ot SR-65000

2)DHL றைவர் (சம்பளம்) 2000 RM + ot SR-85000

3)5* ஹோட்டல்
சமையல் செய்பவர் - சம்பளம்-2000Rm - SR -85000
றூம் கிளீன் செய்பவர்- சம்பளம்-1500Rm - SR -65000
உதவியாளர்-சம்பளம்-1500Rm - SR -65000

4)பில்டிங் கேன்ஸ் செக்சன்
மேசன் -சம்பளம்-2800Rm - 110 000- SR
பிளம்பர்-சம்பளம்-2000Rm - 85000 - SR
வெல்டர் - சம்பளம்-2000Rm - 85000-SR
காப்பெண்டர்-சம்பளம்-2000Rm - 85000-SR
வயறிங்-சம்பளம்-2000Rm - 85000-SR
அச்சகம்:- சம்பளம் 1500 Rm-+ OT- 7500-SR

கையடக்க தொலைபேசி
0776 526 318

(சி-9098)


# மரண அறிவித்தல்

## அமரர் சிவஞானம் தங்கம்மா



மாதகலைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வதிவிடமாகவும் தற்போது சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட சிவஞானம் தங்கம்மா (14.11.2014) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலம் சென்றவர்களான தம்பிஜயா நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலம் சென்றவர்களான நாகலிங்கம் செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவஞானத்தின் அன்பு மனைவியும் விஜயதேவி, இராசமணி, காலஞ்சென்ற நித்தியானந்தன் (ஆனந்தன்) மற்றும் சதானந்தன், சிவபாலன், தவபாலன், காலஞ்சென்ற ஜெயபாலன் மற்றும் சச்சிதானந்தன், செல்வமணி , காலஞ்சென்ற சிறீஆனந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் பொன்னுத்துரை, காலஞ்சென்ற செல்வராசா மற்றும் வேபி, விஜயராணி, சகுந்தலாதேவி, சுமதி, சுதாஜினி, சிவலிங்கம் (இலட்சுமி ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.11.2014) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (சங்கானையில்) நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சண்டிலிப்பாய் சங்கம்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.
021 225 0978

தகவல்: ச.சிவலிங்கம் (மருமகன்)
(இலட்சுமி ஸ்ரோர்ஸ்), சதானந்தன் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்பு

கொழும்பை அண்மித்த ஏற்றுமதி, இறக்குமதி தொழிற்சாலைகளான 150 இற்கும் மேற்பட்டவற்றில் உற்பத்தி/ லேபல்/ பொதியிடல்/ தரம்பிரித்தல்/களஞ்சிய பிரிவுகளுக்கு 18-50 வயது ஆண், பெண் தேவை. சம்பளம் 19000/=,28000/=,38000/=உணவு, பாதுகாப்பான தங்குமிடம் குறைந்த விலைகளில். (விசேடம் நண்பர்கள் குழுக்கள் தம்பதியினர்)ஒரே இடம் வருகை தரும் நாளிலே வேலை. (சி-9088)

077 6838231 / 0771116770

## உடனடியான நிரந்தர தொழில்

17-55 வயது ஆண்- பெண் இருபாலாருக்கும் கொழும்பை அண்மித்த பிரதேசங்களிலுள்ள ஏற்றுமதி தொழிற்சாலைகளான ஜேம்/ கிளவுஸ்/ காமெண்ட்/ பிளாஸ்டிக்/ பால்மா/ மின் உபகரணம் /PVC/ தேயிலை/ யோகட்/ காட்போட் மற்றும் பல... தயாரிக்கும் தொழிற்சாலைகளில்+ உற்பத்தி ✦ லேபல் ✦ பொதியிடல் ✦ தரம்பிரித்தல் பிரிவுக்கு உடனடியாக ஆட் சேகரிப்பு. உணவு+ தங்குமிடம் குறைந்த விலைகளில். சம்பளம் 19000/= 26000/= 35000/= (நண்பர்கள், குழு, தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில்) வருகை தரும் நாளிலே வேலை வாய்ப்பு. (சி-9095)

தொடர்பு:- கொழும்பு 0777889185,0778128194

## தேவை

தொழில் அடிப்படையில் சம்பளம் 18000/=, 38000/= கொழும்பை அண்மித்த ஜேம்/டொபி/பிஸ்கட்/கோடியல்/இறைச்சி/PVC/Paint/ போன்ற பல தொழிற்சாலைகளுக்கு 18-50 வயது ஆண்,பெண் தேவை. உற்பத்தி/ லேபல்/ பொதியிடல்/ களஞ்சிய பிரிவுகளுக்கு) உணவு, தங்கு மிடம், குறைந்த விலைகளில் நண்பர்கள் குழுக்கள் ஒரே தொழிற்சாலைகளில் வேலை செய்யலாம். வருகை அன்றே வேலை. விரைந்து செயற்படுங்கள்.

(சி-9090) தொடர்புகளுக்கு 077 0555347

## வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்

காலை 9.00 - பி.ப 1.00

கைகொடுக்கும் நண்பர்கள்
104,4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
021 222 8117

(8221)


## தேவை

கொழும்பை அண்மித்த ஜேம்/டொபி/ பிஸ்கட்/கோடியல்/ பால்மா/காட்போட்/கிளவுஸ் போன்றவற்றிற்கு உற்பத்தி/ லேபல்/ பொதியிடல்/ களஞ்சிய பிரிவுகளுக்கு 18-52 வயது ஆண், பெண் தேவை. உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் சம்பளம் 20000/=,38000/= கல்வி அறிவு அவசியமில்லை. தொடர்புகளுக்கு சிங்களம் அவசிய மில்லை.

தொடர்புகளுக்கு 077 8430179

(சி-9089)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**எதிர்வீரசிங்கம் செல்வக்குமாரன்**
**(B.A.Dip.in.Edu)**

எமது பண்ணாக மண்ணில் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் வாழ்ந்து வந்த நல்லாசன் கந்தசாமி உபாத்தியார் அவர்களின் கனிஷ்ட புத்திரனும் ஆற்றல் மிகு ஆசிரியரும் எமது அருமைத் தோழனுமாகிய **எதிர்வீர சிங்கம்- செல்வக்குமாரன்** (B.A. Dip.in.Edu) 06.10.2014 அன்று BMICH மண்டபத்தில் *பிரதீபா பிரபா* நல்லாசிரியர் விருது பெற்றதை மனதார பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் பல்லாண்டு காலம் மேலும் பல சிறப்புகள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

**சி.வள்ளுவதாசன்**
**பிரியமான தோழர் பண்ணாகம்.**

(8329)


பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பில்
குறைந்த
லீசிங் மாதாந்த கொடுப்பனவு
எங்களிடம்



SINGER FINANCE
இடமிருந்து மட்டுமே

அதிகூடிய கடன் தொகை குறைந்த வட்டிக்கு
இன்றே உங்கள் வாகனத்தை கொண்டு செல்லுங்கள

தொடர்புகளுக்கு
தனு 077 9 357 124
சுஜந்தன் 077 7 391 449
தர்ஷன் 077 7 009 666
கலைதேவன 077 3 675 022
சுதன் 077 3 550 018

இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்


## வழிபாடு

(யாழ்ப்பாணம்) ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டு கோளுக்கு அமைய நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் விஷேட பூஜை நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது. (இ

## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1968 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 4
கி.பா: 23 1/2
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: A/L/ காசாளர் (டுபாய்)
தொ.இ: B/2053

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 56 செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
தொ.இ: B/2054

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 29 3/4 செவ் 2 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில் (சுவிஸ் NOT PR)
தொ.இ: B/2056

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 92 செவ் 7 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSC, MSC/ சொந்த தொழில் (லண்டன்)
தொ.இ: B/2058

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: மகம் 2
கி.பா: 28 செவ் 7 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/3105

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 76 செவ் 1 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: பட்டதாரி
தொ.இ: G/3106

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: சதயம் 1
கி.பா: 56 3/4 செவ் 8 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L/ ஆசிரியர்
தொ.இ: G/3107

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: ரேவதி 1
கி.பா: 45 செவ் 7 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: தாதி (பெல்ஜியம்)
தொ.இ: G/3109


## விசேட சலுகை

வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி எமது வாடிக்கையாளர்கள் 01.11.2014 முதல் 31.12.2014 வரை மாபெரும் விசேட விலைக் கழிவுடன் தங்களது விளம்பரங்களை எமது பத்திரிகையில் பிரசுரிக்க முடியும் என்பதனை அறியத் தருகின்றோம்.

முழுப்பக்கம், அரைப்பக்கங்களிற்கு மாத்திரமே இவ் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு:- 021 2217 603
021 5671 532
Valampuriijaffna@gmail.com



## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பிளான் கிராம உதய பொன்விழா

யாழ். குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் குப்பிளான் கிராம உதய பொன் விழா நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு விளையாட்டுக்கழக தலைவர்வி. செந்தில் குமார் தலைமையில் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் பேராசிரியர் க.தேவராஜா பிரதம விருந்தினராகவும், கொழும்பு பொலிஸ தலைமையக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் த.கணேசநாதன், சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.எல். துஸ்மந்த, குப்பிளான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலயத் தலைவர் பேராசிரியர் க. பாலசுப்பிரமணியம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுளளனர்.




இதேவேளை கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-7-23-136)




## காட்டுப்புலம் மாதகல் வீதியானது வடமாகாண சபையால் புனரமைப்பு



(மானிப்பாய்)

வடமாகாண சபையின் நிதி மூலம் வலி. மேற்கு பிரதேசத்தில் உள்ள காட்டுப்புலம் மாதகல் வீதி தற்போது புனரமைப்பட்டு வருகிறது.

நீண்டகால யுத்தத்தின் பின்னர் வலி.மேற்கு பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் காட்டுப்புலம் பிரதேசமும் ஒன்றாகும்.

ஆனால் இம் மக்களினது மீள் குடியேற்றத்தை கவனத்தில் கொள்ளாத அரசாங்கம் அவர்கள் தினமும் பயணிக்கும் வீதியைக் கூட இதுவரை காலமும் புனரமைக்காது இருந்தது.

இதன் பின் அம்மக்களால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கை ஒன்று விடுக்கப்பட்டதற்கு அமைவாக தற்போது வீதிப் புனரமைப்பு இடம்பெறுகின்றது.

இதற்கமைய 6.5 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அத்துடன் இம் மாதகல் பகுதி மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு வலிமேற்கு பிரதேச சபையால் இலவசமான முறையில் குடிநீர் விநியோகம்மேற்கொள்ளப்பட்டு வருகின்றமைகுறிப்பிடத்தக்கது. (இ-7-23)

## யாழில் மூடப்பட்டிருந்த 58 நிலையங்களில் 38 நிலையங்களுக்கு இதுவரை அனுமதி

### நேற்று முன்தினம் மட்டும் 6 நிலையங்களுக்கு அனுமதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இயங்கி வந்து மூடப்பட்டிருந்த 59 ஐஸ்கிறீம் யூஸ் உற்பத்தி நிலையங்களில் 38 நிறுவனங்களுக்கு இதுவரை அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக்குறிப்பில் யாழ் மாவட்டத்தில் இயங்கிவந்து மூடப்பட்டிருந்த 59 ஐஸ்கிறீம், யூஸ் உற்பத்தி நிலையங்களில் 32 நிலையங்களுக்கு கடந்த வாரம் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. நேற்றுமுன்தினம் தமது அடிப்படை சுகாதார திருத்தங்களை மேற்கொண்ட மேலும் 6 நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. எனவே தற்போது மூடப்படடிருந்த 59 நிலையங்களில் 38 நிலையங்களுக்கு இது வரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பல நிலையங்கள் தமது அடிப்படைத் திருத்த வேலை களை அடுத்தவாரமளவில் பூர்த்தி செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவற்றிற்கும் அடுத்த வாரமளவில் அனுமதி வழங்கப்படும். இவற்றில் சில நிலை யங்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குகள் தாகல் செய்யப்பட்டுள்ளன. அந் நிலையங்கள் தமது திருத்த வேலைகளை பூர்த்தி செய்தபின் நீதிமன்றின் அனு மதியுடன் மீள இயங்குவதற்கு அனுமதி வழங்கப்படும்.

ஏனைய ஐஸ்கிறீம்,யூஸ் உற்பத்தி நிலையங்களும் தத்தமது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அவர்களின் ஆலோசனைப்படி உடனடியாக செய்ய வேண்டிய அவசர திருத்த வேலைகளை பூர்த்தி செய்தால் அவற்றை மீள இயங்குவதற்கு அனுமதிதர நாம தயாராக இருக்கின்றோம் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)

எல்.இ.டி மின்குமிழ் உற்பத்திக்கான பயிற்சிநெறி எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கரவெட்டி பிரதேசசெயலக விதாதா வள நிலைய கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் பங்கு பெறவிரும்பும் பயனாளிகள் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுக் கொண்டுள்ளனார். (இ)

## ஓடு பிரித்து உள் நுழைந்த திருடர்கள் 14 பவுண் தங்கநகைகளை திருடினர்

(புங்குடுதீவு)

அதிகாலை வேளை வீட்டில் இருந்தவர்கள் உறக்கத்தில் இருந்த சமயம் பார்த்து ஓடுபிரித்து உள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த சுமார் 14 பவுண் தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தில் ஆறுமுகம் சண்முகநாதன் என்பவரின் வீட்டில் இடம்பெற்றுள்ளது.

சம்பவதினம் பெய்த மழையைப் பயன்படுத்தி வேலியை வெட்டி வளவினுள் நுழைந்த திருடர்கள் ஓட்டினைக் கழற்றி கயிற்றினைப் பயன்படுத்தி அறையினுள் இறங்கி இத்திருட்டு முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இச் சம்பம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு முறையிடப்பட்டு பொலிஸார் நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். (எ)

## சிரேஷ்ட பிரஜைகளுக்கான அன்பளிப்பு வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு ஆளுநர்பணிப்பின்பேரில் ஆளுநர் செயலகத்தால் நாளை மறுதினம் 18 ஆம் திகதி மு.ப.10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் மூத்த பிரஜைகளுக் கான அன்பளிப்பு பொருட்கள் வழங்கும் நிகழ்வுடன் கலை நிகழ்வு, ஆன்மீக சொற்பொழிவு மற்றும் தியான நிகழ்வு என்பன நடத்தப்படவுள்ளன.

பங்குபற்றும் மூத்த பிரஜைகளுக்கு மதிய உணவும் வழங்கப்படவுள்ளது. மதிய உணவிற்குப் பின்னர் இவர்களுக்கான தொற்றா நோய் தடுப்பு சிகிச்சை முகாம் அதே மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இதில் கண், காது, தொண்டை, இரத்த அழுத்தம் மற்றும் நிரிழிவு நோய்களுக்கான சிகிச்சைகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

ஆளுநரின் மூத்த பிரஜைகளின் கழக உறுப்பினர்களுக்காக கடந்த முதலாம் திகதி தெல்லிப்பழை ஸ்ரீ பாஸ்கரன் மண்டபத்தில் நடத்தப்பட்ட தொற்றாநோய் சிகிச்சை முகாமில் பங்கு பற்றி வைத்தியர்களால் சிபாரிசு செய்யப்பட்ட்வர்களுக்கு சக்கர நாற்காலி, ஊன்றுகோல்கள், மூக்குக்கண்ணாடிகள் வழங்குவதுடன் பழமரக்கன்றுகள், போசணைப் பொருட்கள் மற்றும் ஏனைய அத்தியாவசிப் பொருட்களும் வழங்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்ட பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட மூத்தோர் 600 பேர் வரை இதில் பங்குபற்றவுள்ளனர்.

மூத்த பிரஜைகளின் நலனை வேண்டி மதகுருமார்களின் ஆசிகளும் அன்றையதினம் நடைபெறவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## மாணவ முதல்வர் தினமும் மலர் வெளியீட்டு நிகழ்வும்

யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் மாணவ முதல்வர் சபையினர் நடத்தும் வருடாந்த மாணவர் முதல்வர் தின நிகழ்வும் Central leader மலர் வெளியீடும் நாளை திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் சிரேஷ்ட மாணவத் தலைவர் ரி.சுபேஷன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கல்லூரியின் 1996 -1997 ஆம் ஆண்டிற்குரிய மாணவத் தலைவரும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் குடிவரவு அதிகாரியுமான ஆர். ராஜ்குமாரும் சிறப்பு விருந்தினராக கல்லூரியின் மாணவ முதல்வர் சபையின் முன்னாள் ஆலோசகர் என்.அனந்தசயனும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)




யாழ்.கோப்பாய் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இருநாள் கவிதைப் பயிலரங்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது மூத்த கவிஞர் சோ. பத்மநாதன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், பருத்தித்துறை பிரதேச செயலர் த.ஜெயசீலன், கோப்பாய் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் ச. பிரேமினி, கவிஞர் இயக்கச்சி சி. கருணாகரன், தொண்டைமானாறு வீரகத்தி மகா வித்தியாலய ஆசிரியர் எஸ். குனேஸ்வரன், கலாசார உத்தியோகத்தர் மிலாசினி நோகேசன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனவெளி

**02.11.2014 ஞாயிறு வலம்புரியில் வெளிவந்த "அந்த மூன்று பேர்" என்ற கதையைத் தொடர்ந்து 09.11.2014 ஞாயிறு அன்று, அக்கதை தொடர் பாகவும் இன்றைய இளை ஞர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றியும் இளை ஞர் சேவை மன்றத்தின் உதவி இயக்குநர் திரு.ஐ. தயேந்திரன் அவர்களின் நேர்காணல் வெளிவந் தது. இவ்வாரம் வாசகர் களின் கேள்விகளுக்கு பேராசிரியர் தயா சோம சுந்தரம் அவர்கள் பதில ளிக்கின்றார்.**

அந்த மூவரின் தான் ஒருவன் என்று வாசகர் ஒருவர் எழுதுகின்றார்...

என் வாழ்வில் நடந்த உண்மைக் கதையை போலஉள்ள இந்தக்கதையை என்னால் மறக்க முடியவி ல்லை. மனதுக்குள் அப்ப டியே நிற்கின்றது. எனது பெயர் அருண். (பெயரை மாற்றிவிட்டேன்) இப்போது பல்கலைக்கழகத்தில் இறுதி வருடத்தில் கற்றுக் கொண டிருக்கிறேன். நான் பல்கலைக் கழகத்திலிருக்க வேண்டிய ஆள். கிடையாது. றோட்டிலை குடிச்சுப்போட்டு விழுந்து கிடக்க வேண்டியவன். யாரு டைய கவனிப்புமின்றி எந்த வொரு இலக்குமின்றி வயதுக் கோளாறால் காதல் போர் வைக்குள் விழுந்து அவளை மறக்கவும் முடியாமல், வீட்டி லும் யாரையும் மதிக்கா மல என்னுடைய வாழ்க்கை யையே நரகமாக்கிக் கொண் டிருந்தேன். படிப்பில் நான் ஓரளவு கெட்டிக்காரன் தான். வெளிப்படையாக ஏன் சொல் கிறேன என்றால் என்னைப் போல கனக்க பெடியள் இப்பிடித்தான் இருக்கிறாங் கள். O/L Exam எழுதிப்போட்டு சும்மா சுத்தித் திரிஞ்சேன். 2 வருடங்கள் கதையில் குறிப்பிட்டது போல கட்டாக் காலியாகத்தான் திரிந்தேன். எதைப்பற்றியும் யோசிப்ப தில்லை. எல்லோரும் பேசித் திட்டித்தீர்த்து விட்டனர்.

நல்லாக குடித்து வீதிக ளில் சண்டை போட்டு பல சேட்டை செய்துகொண்டு திரிநதேன். இப்போது நினை த்தால் வெக்கமாக இருக் கும். இங்கு எழுத முடியாத அளவுக்கு நான் கேவலப் பட்டேன். பரீட்சை முடிவு கள் எதுவும் நன்றாக இருக்க வில்லை. 17வயதில் உயர்த ரம் படிக்க வேண்டிய நான் 18வயதாகியும் அதே நிலை யிலிருந்தேன். வேலையும் இல்லை.

அப்போது தான் நான் அவ ரைச் சந்தித்தேன். நான் நின்று சேட்டை விடும் வீதி யில் தான் அவர் படிப்பிக்கி ன்ற பள்ளிக்கூடம் இருக்கு. அவ டதிலை நின்றால் தான் என கது ஒரு சந்தோசம். நான் அவ ரைக் கவனிக்கிறதில்லை. அவர் என்னைக்கவனித்திருக் கிறார். "அந்த மூன்று பேர் கதையில்" வருகின்ற நபரை விட ஆயிரம் மடங்கு எனக் காக பாடுபட்டவர். அவர் ஒரு ஆசிரியர். அகிலன் சேர் என்று அவர் பெயரை இங்கு குறிப்பி டுகிறேன். எத்தனை தடவை எனக்காக என்னிடம் ஏச்சும் பேச்சும் வாங்கியிருப்பார். 18 வயதில் என்னை மறுபடி O/L எழுத வைத்தார். நல்ல ரிசலட் எடுத்தேன். 20வயதில் உயர் தரத்தில் காலடி எடுத்து வைத் தேன். என்னால் அங்கு படி க்க முடியவில்லை. என்னை விட வயதில் குறைந்த சின்னப் பெடியங்களோடை என்னால படிக்க முடியவில்லை. பள் ளிக்கூடம் போகாமல் தனித்து ரியுசன் மட்டும் போனேன். சேர் என்னை தன் வீட்டுக்கு கூட டிக்கொண்டு போனார். இரவு பகல் முளித்து படித்தேன். 6 மாதங்களுக்கு எங்கள் வீட் டுக்கு வரவில்லை. அவரோடு நின்று தங்கியிருந்து படித் தேன். வாழ்க்கையைப் படித் தேன். வீட்டுக்காரரும் என் னில் மாற்றம் வரவேண்டும் என்று எல்லாவற்றையும் ஏற் றுக் கொண்டனர்.

உயர்தரப் பரீட்சை எழுதும் போது நான் வெறித்தனமா கப் படித்தேன். அப்போது என க்கு நான் தொலைத்தவற்றை மிகவிரைவாக மீண்டும் பெறவேண்டும் என்ற அவசர மும் வெறியும் இருந்தது. 22 வயதில் உயர்தரம் மிகச் சிறப்பாக சித்தியடைந்தேன். என்னால் அந்தக் கணங் களை மறக்கவே முடியாது. நம்பவும் முடியவில்லை. ஏற் றுக்கொள்ளவும் முடியவி ல்லை. என் ஆசான் என்னை நல் வழிப்படுத்தி விட்டார். எல்லோரும் பல்கலைக்கழக த்தை விட்டு வெளியில் வரும வயதில் நான் உள்நுழைந் தேன். பல அவமானங்க ளைச் சந்தித்த போதும் என க்கு அவை ஒன்றும் பெரிதா கத் தெரியவில்லை. ஏனென் றால் நான் சந்திக்காத அவ மானங்களா?

எனக்கு சேர் அடிக்கடி நகைச்சுவையாகச் சொல்லு வார்,

*"அடேய் இலட்சியத்தை காதலிப்பவனுக்கு*
*லவ்பெயிலியர் இல்லை,*
*தன்னம்பிக்கையை காத லிப்பவனுக்கு*
*தற்கொலைகள் இல்லை"*

இங்கு நான் குறிப்பிட்ட விடயங்களை எத்தனை இளைஞர்கள் வாசித்து தெளிவடையப் போகின்றார் கள் என்று எனக்குத் தெரி யாது. ஆனால் யாராவது ஒரு இளைஞன் படிக்க வேண் டும் என்றெண்ணி எழுதுகின் றேன்.

என் நண்பனே..., உன் னைத் தொடும்
வெற்றிகளை விலக்கி விட்டு நீ தழுவும்
தோல்விகளைச் சேக ரித்துவை
பெரு வெற்றிகளுக்கு இரையாவது சிறு தோல்வி கள்தான்!

நன்றி. அன்புடன் சாதி த்த இளைஞன்.

**செல்வி, கரவெட்டி.**

**வினா : கட்டிளமைப் பருவத்தில் இளம் வயதின ருக்கு ஏற்படக்கூடிய மாற் றங்கள் பற்றிக் கடந்த வாரம குறிப்பிட்டிருந்தீர்கள், அவ ற்றை கையாளும முறை கள பற்றியும் விபரமாக விள க்க முடியுமா?**

பதில்: வாழ்க்கை விரு த்திப்பருவங்களில் சிறுபரா யத்திலிருந்து கட்டிளமைப் பருவத்துக்குள் பிரவேசிக் கும் போது பல மாற்றங்களை வெளிப்படுத்துகின்றனர். உடலிலும், உள்ளத்திலும் குடும்ப சமூக மட்டத்திலும் பரிணாம வளர்ச்சி அடை கிறார்கள். இவை நம் இளை ஞர்கள், யுவதிகளை வயது வந்த, குடும்பசமூக பொறுப் புள்ள பெரியவர்களாக பக்குவ படுவதற்கு உதவுகின்றன.

படிப்படியாகக் குடும் பத்தி லிருநது விலகுதலும், சுதந்திர மடைதலும், தமது வயதை யொத்தவருடன் சேர்ந்து உறவுகளை வளர்த்துக் கொள் வதும், செயலாற்றும் திறன் களை விருத்தி செய்தலும் அவர்களில் ஏற்படுகின்ற முக் கிய மாற்றங்களாகும். சமூ கத்தில் வளர்ந்தவர்கள் ஆற்று கின்ற பங்கைப் படிப்படியாக எடுத்துக்கொள்ளுதல், முத லில் முன்மாதிரிகளை, வளர் ந்தோரைப் பின்பற்றுதல் என்று முக்கியத்துவம் வாய் ந்த பணிகளை கொண்டு பொறு ப்புமிக்க பருவமாக கட்டிள மைப் பருவம் காணப்படு கின்றது. சில முக்கிய விடயங் களில் அவர்களே சமூகத்தை வழிநடத்துகிறார்கள்.

ஏன், அண்மைக் கால போர் மற்றும் சுனாமி அனர் த்தங்களின் போது, பெரிய வர்கள் இறந்தோ அல்லது இயலாமையாகபோகும்பொழுது, பொறுப்பெடுத்து, தலை மைத் துவ பண்புகளுடன் வெற்றி கரமாக செயற்பட்டனர்.

இப்பருவத்தினர் தாம் வயது வந்தவரைப்போல நடத்தப்பட வேண்டுமென விரும்புவர். அவர்களுக்கு நம்பிக்கையைக் கட்டியெ ழுப்புவதுடன், எப்போதும் நேர்மையாகப் பேசி, மரியா தையுடன் நடத்தி, வளர்ந் தோரது பொறுப்புக்களை வழங்கி, அவர்களது நல்ல குணங்களையும், அபிப் பிரா யங்களையும் புரிந்துகொ ண்டு போற்றி, அவற்றை முக்கியத்துவப்படுத்த வேண் டும்.

அவர்களுடைய ஒத்த வயதினரின் முன் அவர்க ளுடைய சாதனைகளைப் புகழ்ந்து பேசி மேலும் ஊக் கப்படுத்த வேண்டும். கட்டி ளம் பருவத்தினருக்கு விளை யாட்டுகள், குழுச் செயற்பா டுகள் என்பவற்றில் ஈடுபடுதல் நல்ல பலனை அளிக்கும். ஆயினும் இவர்கள் தனித்து, சுதந்திரமாக இயங்குவதி லும் திருப்தியடைவர். தனி மைப்படுத்தப்பட்டு இருக்கி ன்ற இப்பருவத்துப் பிள்ளைக ளுக்குக் குழுச் செயற்பாட்டில் சேர்ந்து கொள்வதற்கு உதவி களைச் செய்ய வேண்டும்.

இப்பருவத்தினர் தமது சூழல் தொடர்பான, எதிர்கா லம் பற்றிய, பிரச்சினைகள் பற்றி கலந்துரையாட, தமது எண்ணங்களையும், உணர் ச்சிகளையும் வெளிப்படுத்த, விருப்பங்கள், கவலைகள் என்பவற்றை மற்றவருடன் பகிர்ந்துகொள்ள, எதிர்காலம் பற்றிய திட்டங்களை வகுக்க நல்லதொரு சந்தர்ப்பத்தைக் கொடுக்க வேண்டும்.

இப்பருவத்தினர் முக் கியமான செயல்களை அல் லது பொறுப்புகளை நிறை வேற்ற விரும்புவர். உதார ணமாக, ஊர்விழா ஒன்றுக் கான ஒழுங்குகளை மேற்கொள ளுதல், அல்லது கிராமத்தில் தாம் முக்கியமானவர் எனக் காட்டிக்கொள்ள முயற்சிப்பர். அம்முயற்சிகளை மேலும் ஊக்குவித்து அவர்களின் திறமைகளை அடையாளங் கண்டு ஆதரவு வழங்க வேண்டும். அவர்களின் தகைமைக்கும், விருப்பத்திற் கும் ஏற்றவாறு தொழிற் பயி ற்சிகள் ஒழுங்கு செய்யப்படல் வேண்டும்.

நல்லவிதமான முன் மாதிரிகள் அதாவது ஆசிரி யர், கிராமத்தில் மூத்தவர், சமயப் பெரியோர், தொழில் சார் நிபுணர்கள் போன்றவர் மூலம் தொழில் சம்பந்த மான ஆலோசனை வழங் கலும் கல்விபற்றிய மேல திகத் தகவல்கள், பலவித மான விடயங்கள் பற்றிய அறிவு விளையாட்டுச் செயற் பாடுகள், இசை நிகழ்வுகள், கலாசார நிகழ்வுகள், நாட கங்கள், கலைத்துவம், ஆக் கத்திறன், ஓவியம், இசை, தொழில் நுட்பத் திறன், கல்விசார் அறிவு, முகா மைத்துவப் பண்புகள் என் பவை தொடர்பான தமது சொந்தத் திறன்களையும் ஆற்றல்களையும் விருத்தி செய்ய ஊக்குவிக்கப்பட வேண்டும்.

அவர்கள் தம்மைத் தாமே அடையாளங்காணும் இப்பருவத்தில் வழிகாட்டு தல்களும் ஊக்குவித்தல்க ளும் சரியான முறையில் அமையாவிடின் இவ்வய தினர் இலக்கின்றி அலைய வேண்டி வரும்.

**கட்டிளமைப் பருவ வளர்ச்சி தடைப்படும். பின் வரும் மாற்றங்கள் ஏற்ப டும்.**

- ஏனையவரிலிருந்து ஒதுங்கியிருத்தல். உறவு களை உருவாக்குவதில் தோல்வியடைதல்.
- ஏனையோருடன் அளவுக்கதிகமாகத் தன்னை அடையாளம் காணுதல்.
- ஏனையோரிலிருந்து வித்தியாசமாக இனங் காணப்படுதல்.
- வழிநடத்தலுக்காக மற்றவரில் தங்கியிருத்தல்.
- மனப்பாங்கு அல் லது செயற்பாடுகளில் மூர்க்க மான வெளிப்பாடுகளைக் கொண்டிருத்தல்.
- அமைதியின் றி அந்தரப்படுதல், மனதை ஒருமுகப்படுத்த முடியாது வருந்துதல்.
- மனோபாவம் அடிக்கடி மாறிக்கொண்டி ருத்தல்.
- பாடசாலைக்கு அல்லது கல்வி நிறுவனங் களுக்குச் செல்வதை நிறுத் துதல், ஒழுங்கீனமான வரவைக் கொண்டிருத்தல்.

தம்மைப் பற்றியும். தமது பங்கு, சுய அடை யாளம் என்பவை பற்றியும் குழப்பமடைதல்.



**இந்தியாவில் காண்டேகர் என்ற பிரபல நாவலாசிரியர் இருந்தார். அவர் ஒரு நாவலை எழுதி வெளியிட்டவுடன் அவரின் வீட்டுக்கதவில் யாராவது ஒருவர் வந்து தட்டுவார். என்னுடைய கதை எப்படி உங்களுக்குத் தெரிந்தது? ஏன் என் கதையை எழுதினீர்கள்? என்று வாக்கு வாதப்படுவார்கள்.**

**எதிர்பாலாரில் பரீட்சித்துப்பார்க்கும் நோக்கில் தோன்றும் விருப்பம், காதல், உறவாடுதல் போன்றவை பின்னர் வாழ்க்கை முழுவதும் அர்ப்பணிப்பாகலாம். இதனை அடக்க முற்பட்டால் பிரச்சினையாக முடியக்கூடும். அறிவு, ஆலோசனை சம்பந்தமாக அவர்களின் கேள்விகளுக்கு இயற்கையோடிணைந்த விடை கொடுத்தல் வேண்டும். அதுவும் அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும்.**

**வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத் துக்கள் எதிர் பார்க்கப்படுகின்றன.**

**தரமானவை துறைசார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும். அனுப்ப வேண்டிய முகவரி:**

**சாந்திகம் ஊடகக்குழு,**
**8, 8/1, கற்பக விநாயகர்**
**ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள் விக ளும் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.**
**E.mail:psych@sltnet.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதன் முறையாக லிங்கா ட்ராக் லிஸ்ட்




லிங்கா' படத்தின் பாடல்கள் எப்போது வரும் என ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து கொண்டிருக்கின்றனர்.
இந்நிலையில்
படத்தின் ட்ராக் லிஸ்ட் ஒன்றை படக்குழு வெளியிட்டுள்ளது. படத்தின் பாடல்கள் நவம்பர் 16 ஞாயிறு அன்று வெளியாக உள்ளது.

1) ஓ நண்பா - எஸ்.பி.பி. ஆர்யன் தினேஷ் கனகரத்னம்
2) என் மன்னவா - ஸ்ரீனிவாஸ் , அதிதி பவுல்
3) இந்தியனே வா - ஏ.ஆர்.ரஹ்மான்
4) மோன கேசலின - மனோ , நீதி மோகன், தன்விஷா
5) உண்மை ஒரு நாள் வெல்லும் - ஹரிசரண்

என மொத்தம் 5 பாடல்களை கொண்டுள்ளன 'லிங்கா' இசை ஆல்பம் இப்படத்திலும் வழக்கம் போல் ரஜினியின் ஓப்பனிங் பாடலை எஸ்.பி.பி பாடியுள்ளார். மேலும் ரஹ்மானும் ஒரு பாடல் பாடியுள்ளார்.

## சிம்பொனி இசைக்காக ஜேர்மனி செல்கிறார் ஜி.வி.பிரகாஷ்!

இசைத்துறை மட்டுமல்லாமல் 'பென்சில்', 'டார்லிங்' படங்கள் மூலம் நடிப்பிலும் அடியெடுத்து வைத்துள்ள ஜி.வி. பிரகாஷ் தற்போது சிம்பொனி இசைக்காக ஜேர்மனி செல்ல இருக்கிறார்.
இதுகுறித்து ஜி.வி.பிரகாஷ் தெரிவித்துள்ளதாவது: சர்வதேச சந்தையில் மிக முக்கியமான ஒரு நுகர்பொருளின் விளம்பரத்துக்காக நான் இசை அமைப்பாளராக ஓப்பந்தம் செய்யப்பட்டு உள்ளேன். உலக அரங்கில் ஜொலிக்கும் சில இசை அமைப்பாளர்களுடன் என்னை ஒப்பிட்டு, எனக்கு இந்த வாய்ப்பு கிடைத்தமைக்கு இறைவனுக்கு நன்றி. ஜேர்மனியில் உள்ள 'ஸ்டர்ட்கார்ட்' என்னும் நகரத்தில் மேற்கொள்ள இருக்கும் இசை பதிவுக்காக நான் விரைவில் அங்கு செல்ல உள்ளேன். இசையுலகில் பிரசித்தி



பெற்றவர்கள் பலர் ஜேர்மனியில் தோன்றியுள்ளனர்.
இதில் மிக முதன்மையானவர் எனக் கருதப்படும் கோன்ராத் பௌமனின் இசை காற்றில் மிதக்கும் ஜெர்மனி நாட்டில் என்னுடைய இசையும் கலக்கும் என்பதில் நிச்சயம் நான் பெருமையடைகிறேன் என கூறியுள்ளார் ஜி.வி. பிரகாஷ்.

## இந்தியில் திருமணம் எனும் நிக்காஹ்!



அனிஸ் அப்பாஸ் இயக்கத்தில் ஜெய், நஸ்ரியா நடித்து வெளியான படம் 'திருமணம் எனும் நிக்காஹ்'.
இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவர்கள் என நினைத்து ஜெய்யும், நஸ்ரியாவும் காதலிக்கின்றனர். ஆனால், அது உண்மையில்லை. இருவரும் பிராமண சமூகத்தினர் என தெரிய வருகிறது.
இந்த ஏமாற்றம் அவர்களின் காதலை எப்படி புரட்டிப் போடுகிறது? என்பதை மையமாக வைத்து உருவான "திருமணம் எனும் நிக்காஹ்" தற்போது இந்தி மற்றும் தெலுங்கில் ரீமேக் ஆகிறது. இந்தி ரீமேக்கில் ரன்பீர் கபூரின் பெயர் பரீசிலனையில் உள்ளது. ஜெய் நடித்த கரக்டரில் ரன்பீர் கபூர் நடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## அனுஷ்காவிற்கு 5 கோடியில் நகைகள்!

"அருந்ததி' , 'பஞ்சமுகி' படங்களுக்கு பிறகு மீண்டும் அனுஷ்கா முழு நீள ஹீரோயின் கதையம்சம் கொண்ட படமாக 'ருத்ரமாதேவி' படத்தில் நடித்து வருகிறார்.
இப்படத்திற்காக 150 நாட்கள் கால்ஷீட் கொடுத்திருக்கும் அனுஷ்கா படத்தில் வாள் சண்டை , சிலம்பம் என ஆக்ஷனிலும் திறமை காட்டியுள்ளார்.
இந்த படத்தில் அனுஷ்கா பயன்படுத்தும் நகைகள் மட்டும் ரூபாய் 5 கோடி மதிப்பாம்.
'அருந்ததி' எப்படி தமிழ் , தெலுங்கு என பொங்கல் அன்று வெளியாகி வரவேற்புகளை பெற்றதோ அதே பாணியில் இந்த படமும் பொங்கல் ரிலீஸ் என முடிவெடுத்துள்ளனர் படக்குழுவினர்.



ஓவியா



## ஒரே நாளில் 11 படங்கள் ரிலீஸ் !



தீபாவளியை முன்னிட்டு பெரிய பட்ஜெட் படங்கள் ரிலீஸ் ஆகி வசூலைக் குவித்தன. சிறிய பட்ஜெட் படங்கள் ரிலீஸ் ஆகும் தருணம் இது. 'ஒரு ஊர்ல ரெண்டு ராஜா' , 'ஜெய்ஹிந்த்-2' படங்கள் கடந்த வாரம் வெளியானது.
இந்த வாரம் 'திருடன் பொலிஸ்', 'புலிப்பார்வை', 'விலாசம்', 'முருகாற்றுப்படை', 'ஞானக்கிறுக்கன்', 'அப்புச்சி கிராமம்' என தமிழில் ஆறு படங்கள் ரிலீஸ் ஆகின்றன.
இந்தியில் எதிர்பார்ப்புகளை கிளப்பிய 'கில் தில்' , மற்றும் ஒஸ்காருக்கு சென்றிருக்கும் 'லையர்ஸ் டைஸ்' உள்ளிட்ட படங்களும் வெளியாக உள்ளன.
இதே நாளில் நாளை ஹாலிவுட்டில் 'பியாண்ட் தி லைட்ஸ்', 'டம்ப் அண்ட் டம்பர் டூ' மற்றும் 'சேவிங் கிறிஸ்மஸ்' உள்ளிட்ட படங்களும் வெளியாக உள்ளன.
இவையனைத்தும் 50 முதல் 100 திரையரங்குகளில் வெளியாக உள்ளன. இதில் 'திருடன் போலீஸ்' , 'அப்புச்சி கிராமம்' மற்றும் 'புலிப் பார்வை' ஆகிய படங்களுக்கு எதிர்ப்பார்ப்புகள் அதிகரித்துள்ளன.

## வலைபாயுதே



ஃப்ளையிங் ஃபேன்ஸ் !
(விமானத்தில் சூர்யா)



சிக்கிரம் பக்கம் !
(புதுப்படத்துக்காக துல்கர் சல்மான், கனிகாவை இயக்கும் மணிரத்தினம்)




ரிங் மாட்டியாச்சு !
(வருங்கால கணவருடன் நடிகை பூஜா)

### மூன்றாவது முறையாக

## சேர்ந்த விமல் — அஞ்சலி !


எஸ்கேப் ஆர்டிஸ்டஸ் மதன் தயாரிக்கும் படம் 'மாப்பிள்ளை சிங்கம்' இந்தப் படத்தில் விமல் நாயகனாக நடிக்கிறார்.
அவருக்கு ஜோடியாக இதில் நடிப்பவர் அஞ்சலி.
ஏற்கனவே அஞ்சலி 'தூங்கா நகரம்', 'கலகலப்பு', ஆகிய இரு படங்களில் விமலுடன் ஜோடி சேர்ந்து நடித்துள்ளார். இது இருவரும் ஜோடி சேரும் மூன்றாவது படம்.
இதிலும் விமலின் நண்பனாக சூரி நடிக்க உள்ளார். அறிமுக இயக்குநர் ராஜசேகர் இந்தப் படத்தை இயக்குகிறார். டி.இமான் இசையமைக்க படத்திற்கு ஒளிப்பதிவு செய்கிறார் ராஜசேகர்.
முழுநீள காமெடிப்படமாக 'மாப்பிள்ளை சிங்கம்' இருக்கும் என படக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையை கட்டியெழுப்புங்கள்

## தமிழ்,முஸ்லிம் மக்களுக்கு டெனீஸ்வரன் அழைப்பு



(மன்னார்)

கடந்த காலங்களில் தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமையில் பல பிரச்சினை ஏற்பட்டதால் விரிசல் நிலை உண்டானது. ஆனால் அவற்றினை சீர்தூக்கி சரி,பிழை பார்க்க முற்பட்டால் எதுவித தீர்வுமின்றி பிரச்சினையே தோற்றுவிக்கப்படும்.

ஆதலால் தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமை கட்டி எழுப்பப்பட வேண்டும் என வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து கிராமிய அபிவிருத்தி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் தாராபுரம் கிராமத்தில் கடந்த வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் ஆரம்ப தாய், சேய் சுகாதார நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் அல்ஹாஜ் ரிப்கான் பதியுதீனின் அழைப்பின் பேரில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றியவை வருமாறு,

தாராபுரம் கிராமத்தில் ஆரம்ப தாய், சேய் சுகாதார நிலையம் திறந்து வைக்கப்பட்டதுபோல் பின்தங்கிய கிராமங்களிலும் எதிர்வரும் காலங்களில் இதுபோன்ற நிலையங்கள் அமைக்கப்படும்.

ஒவ்வொரு கிராமங்களிலும் மக்கள் சந்திப்பை நாம் மேற்கொள்ளும் போது சுகாதார பிரச்சினை, போக்குவரத்து பிரச்சினை ஆகியவையே பிரதானமாக முன்வைக்கப்படுகின்றன.

போக்குவரத்து சிறப்பாக முன்னேற்றமடைந்தால்தான் ஒரு கிராமம் அபிவிருத்தி அடையும்.

வடமாகாண போக்குவரத்தை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

பின்தங்கிய கிராமங்கள் தோறும் சுகாதார நிலையங்கள், கிராமிய சுகாதார நிலையங்கள், தாய்,சேய் நிலையங்கள் ஆகியன உருவாக்கப்பட வேண்டும். அவற்றிற்கான வேலைத்திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எமது அபிவிருத்தி மற்றும் அரசியல் உரிமை இவை இரண்டும் தனியாகக் கையாளப்பட வேண்டியவையாகும்.

இல்லையேல் 5 அல்லது 10 வருடங்களுக்குப் பின்னர் எமது மக்கள் பின்னடைவை சந்திப்பார்கள்.

ஆகவே இதனை மையப்படுத்தி அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் தூரநோக்குடன் செயற்பட வேண்டும். இல்லாவிடின் இதுவரை காலமும் கொடுக்கப்பட்ட விலைமதிப்பற்ற உயிர்களின் பெறும்தி வீணாகிப் போய்விடும்.

அத்தோடு அபிவிருத்தி தொடர்பான கூட்டங்களில் நாம் அரசியல் உரிமை தொடர்பிலோ அரசியல் உரிமை தொடர்பான கூட்டங்களில் அபிவிருத்தி தொடர்பிலோ நாம் கதைக்கப் போவதில்லை.

ஆகவே இவ்விரு எண்ணக்கருக்களும் தனித்தனியாக ஒன்று சேர்வதில்தான் எமது எதிர்கால இலக்கு தங்கியுள்ளது.

இதனை மறந்து இவை இரண்டையும் ஒன்றாக கொண்டு செல்ல முற்படுவோமாகில் இரு எண்ணக்கருக்களும் எதுவித முன்னேற்றமின்றி பின்னடைவை சந்திக்க வாய்ப்புள்ளது.

ஆகவே புத்திஜீவிகள், அரசியல்வாதிகள், அதிகாரிகள் போன்றோர் இவை இரண்டையும் ஒன்று சேர்க்காது சமாந்தரமாகக் கொண்டு செல்ல வேண்டும்.

இவை இரண்டையும் அடைய வேண்டுமாகில் இவற்றிற்கு அப்பால் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும்.

ஆகவே கடந்த காலம் கடந்தவையாகவே இருக்கட்டும். இனிவரும் காலங்களில் நடக்கப் போகின்றவை நன்மையாக அமையட்டும் என்றார்.

இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் அல்ஹாஜ் ரிப்கான், பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியர் திருமதி சிசில், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ரூபன் என பலரும் கலந்து கொண்டனர். (அ-2)




## காரைநகர்-வவுனியா பேருந்துசேவை ஆரம்பம்

காரைநகரிலிருந்து வவுனியாவிற்கான அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்களுக்குக்கான பேருந்துசேவையொன்று அதிகாலை 4.30 மணிக்கு காரை நகரிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்கள்மற்றும்அரசஉத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக பொதுமக்கள் நன்மை அடைந்துள்ளதாகதெரிவிக்கின்றனர்.


இது தொடர்பில்தெரியவருவதாவது,

காரைநகரிலிருந்து அதிகாலை 4.30மணிக்கு 882 வழித்தட இலக்க பேருந்து சித்தன்கேணி சந்தியை 5 மணிக்கு சென்றடைகின்றது.

அங்கிருந்து மானிப்பாய், மருதனார்மடம் ஊடாக 5.30 மணிக்கு சுன்னாகத்தை அடைந்து பின்னர் சுன்னாகத்திலிருந்து மருதனார்மடம் இருபாலை சந்தி ஊடாக கைதடி சந்தியை அடைந்து ஏ-9 வீதியூடாக கிளிநொச்சியை காலை 7 மணிக்கு சென்றடையும்.

அதனை தொடர்ந்து குறித்த பேருந்தானது மாங்குளத்தினை காலை 7.35 மணிக்கும் பின்னர் வவுனியா பேருந்து நிலையத்தை 8.30 மணிக்கும் சென்றடையும்.

இப்பேருந்து பணியானது குறைந்த கட்டணத்தில் நடைபெறுவதால் அரசஉத்தியோகத்தர்கள்மற்றும்பொதுமக்கள்விரைவாகவும்குறைந்த செலவிலும் தமதுபயணத்தினைமேற்கொள்ளக் கூடியதாக இருப்பதாக தெரிவிக்கின்றனர். (அ-2-15)



மு/முள்ளியவளை தமிழ் வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில்பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கான கௌரவிப்பும் பரிசளிப்பு விழாவும் கடந்த 12 ஆம் திகதி முற்பகல் 11.30 மணியளவில்பாடசாலைமண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களுடன் சித்தியெய்திய மாணவர்கள் அழைத்து வரப்பட்டதை படத்தில் காணலாம்.

(படம்:-முள்ளியவளை செய்தியாளர்)

## கழிவுவாய்க்கால் மூடிகள் சிதைவு; கவனத்தில் எடுக்குமாறு கோரிக்கை

**மன்னார் இ.போ.ச.வளாகத்தில் இந்த நிலை**

(மல்லாவி)

மன்னார் இ.போ.சபையின் பேருந்து வளாகப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மலசலகூடப்பகுதிக்கு செல்கின்ற பாதையில் அமைந்துள்ள கழிவு வாய்க்காலின் மேல் மூடிகள் சேதமடைந்துள்ளதுடன் மலசல கூடத்திற்கு அருகாமையில் குப்பை கூழங்கள் குவிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் பல இடர்பாடுகளை எதிர்கொள்வதாகவும் பயணிகள் குற்றம் சாட்டுகின்றனர். இது தொடர்பில் தெரியவருவதாவது,

மன்னார் நகரப்பகுதியை அண்மித்து இ.போ.சபையினுடைய பேருந்து நிலையமும் மற்றும் தனியார் பேருந்து நிலையமும் அருகருகே காணப்படுகின்ற நிலையில் இ.போ. சபையினுடைய வளாகத்தினுள் அமைந்துள்ள மலசலகூடப்பகுதியானது குப்பை கூழங்களால் நிறைந்து காணப்படுகின்றது.

அத்துடன் பேருந்து நிலையத்திற்கும் மலசலகூடப்பகுதிக்கும் இடையில் உள்ள கழிவு வாய்க்கால் பாதையில் மூடப்பட்டுள்ள மூடிகள் சேதமடைந்தும் இடைவெளி அதிகமாகவும் காணப்படுவதால் பயணிகள்கால் இடறி கழிவுவாய்க்காலினுள் விழுந்து எழும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. மழைகாலம் அண்மித்துள்ளதால் நுளம்புகள் உற்பத்தியாகும் சூழலும்காணப்படுகின்றது.

எனவே தினமும்ஆயிரக்கணக்கான பயணிகள் வருகை தருகின்ற இப்பேருந்து வளாகத்தின்மலசலகூடப்பகுதிஅபாயகரமாக இருப்பதால் பயணிகள் அச்ச உணர்வுடனேயே மலசலகூடப்பகுதிக்கு செல்ல வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே மன்னார் நகர சபையின் உரிய அதிகாரிகள் இவ்விடயத்தைகவனத்தில்எடுத்துமிகவிரைவில் சீர்செய்து தரவேண்டுமென பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-15)

## படம் பிடித்த பெண்ணுக்கு பிணை வழங்கியது மன்று

(மன்னார்)

மன்னார் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்காக வந்திருந்த யுவதியொருவர், நீதவானின் உத்தியோகபூர்வ காரை தனது தொலைபேசியில் படம் பிடித்தார் என்ற குற்றச்சாட்டில் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மன்னார் நீதிமன்றில் பெண் ஒருவரால் மன்னார், மடு பகுதியில் வசிக்கும் யுவதி ஒருவருக்கு எதிராக இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இவ்விரு வழக்கு தவணைகளுக்கும் அப்பெண் ஒழுங்காக சமுகமளித்திருக்கவில்லை. இதனால், இவருக்கு எதிராக மன்னார் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.

கடந்த வியாழக்கிழமை மன்னார் நீதிமன்றில் குறித்த பெண் முன்னிலையானார். இதன்போது இனிவரும் காலங்களில் வழக்குகளுக்கு ஒழுங்காக சமுகமளிக்க வேண்டும் எனவும் இவருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டிருந்த பிடியாணை தொடர்ந்து அமுலில் இருக்கும் எனவும் நீதிபதி எச்சரித்து விடுவித்தார்.

இந்தச் சமயத்தில் மேற்படி யுவதி மன்னார் நீதிமன்ற வளாகத்தினுள் நீதவானின் உத்தியோகபூர்வ அறைக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரையும் காரின் இலக்கத் தகட்டினையும் தனது தொலைபேசியில் படம் எடுத்துக் கொண்டிருந்த போது, அங்கு கடமையில் இருந்த பொலிஸாரால் அப்பெண் கைது செய்யப்பட்டார்.

பின்னர், குறித்த யுவதி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டார். இதன்போது தான் ஒரு ஊடகவியலாளர் என தெரிவித்த அப்பெண், பின்னர் தான் ஒரு பெரும்பான்மையின பத்திரிகைத்துறை மாணவி எனவும்"தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த யுவதியின் செயற்பாடுகளைக் கண்டித்த நீதவான், இருபதாயிரம் ரூபாய் ரொக்கப் பிணையிலும் இருபதாயிரம் ரூபாய் சரீரப் பிணையிலும் செல்ல அனுமதித்ததுடன், மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் மடு பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டும் எனவும் உத்தரவிட்டார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னுமொரு ஆயுதப் போராட்டம் நாட்டைப் பாதுகாக்க அவசியம்

## ஜே.வி.பி கூறுகின்றது

(கொழும்பு)

தற்போதைய நிலையில் நாட்டைப் பாதுகாப்பதற்கு இன்னொரு ஆயுதப் போராட்டத்தின் அவசியம் எழுந்துள்ளதாக ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி.யின் முன்னாள் தலைவர்களை நினைவுகூரும் கார்த்திகை வீரர்கள் தினம் நேற்று முன்தினம் கொழும்பு விகார மகாதேவி பூங்காவின் திறந்த வெளி அரங்கில் அனுஷ்டிக்கப்பட்டது.

இதில் கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றினார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்துள்ள அநுரகுமார திஸாநாயக்க,ஜே.வி.பி. ஆயுதப் போராட்டம் நடத்திய காலங்களை விட நாடு இன்று பேரழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

நாட்டின் வளங்கள் வெளிநாடுகளுக்கு மொத்தமாக தாரை வார்க்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

ராஜபக்ஷ குடும்பத்தினர் இன்னும் பல நூற்றாண்டுகள் அபிவிருத்தியில் பின்தங்கி இருக்கச் செய்யும் வகையில் நாட்டை கொள்ளையடித்துக் கொண்டிருக்கின்றனர். இவர்களிடமிருந்து நாட்டை மீட்டெடுத்து எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாக்கும் பொறுப்பு எமக்குள்ளது.

1980 காலப்பகுதியை விட மோசமான அழிவுப்பாதையில் நாடு சென்று கொண்டிருக்கும் நிலையில் இதனை மீட்டெடுக்க இன்னொரு போராட்டம் தேவை என்ற உணர்வு எழுவதைத் தவிர்க்க முடியாதுள்ளது.

நாட்டின் அரசியலமைப்பை பாதுகாக்க வேண்டிய ஜனாதிபதி அதனை பகிரங்கமாக மீறிக் கொண்டிருக்கின்றார்.எனினும் அதனை குறித்து எழுத ஊடகங்கள் அச்சப்படுகின்றன, நாட்டின் அனைத்து இன மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

அனைத்து வகையான வளங்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன, நாடு சீரழிந்துவிட்டது. இதனை மீட்டெடுக்கும் ஜனநாயகப் பொறுப்பு நமக்கு உள்ளது, அதற்காக ஜனநாயக வழியில் போராட ஜே.வி. பி.தயாராக உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# மழலைகள் பூங்கா கையளிப்பு நிகழ்வு

யாழ். மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்தில் சிறார்களின் பயன்பாட்டுக்காக அமைக்கப்பட்டுள்ள மழலைகள் பூங்கா மேலும் மெருகூட்டப்பட்டு அவர்களின் பாவனைக்காகக் கையளிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடைபெறவுள்ளது.

மழலைகளின் பொழுதுபோக்குக்கு உகந்த வகையில் நவீன மயப்படுத்தப்பட்ட விளையாட்டு உபகரணங்கள், சீமெந்து இருக்கைகள் நிழற்குடைகள் மற்றும் மெருகூட்டப்பட்ட சுவையகம் உள்ளடங்கலாக சிறுவர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டுக்கேற்ற வகையில் இப்பூங்கா நவீனமயப்படுத்தப்பட்டு திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# புதிய வெட்டுப் புள்ளிகள் திங்கட்கிழமை வெளியீடு


தரம் ஐந்து புலமைப் பரீட்சைக்கான புதிய வெட்டுப்புள்ளிகள், நாளை 17ஆம் திகதி திங்கட்கிழமை அறிவிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன, நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். சிங்கள மொழிமூல மாணவர்களுக்கான ஆகக்குறைந்த வெட்டுப் புள்ளி 163இலிருந்து 157ஆகவும், தமிழ் மொழிமூல மாணவர்களுக்கான வெட்டுப்புள்ளி 159இலிருந்து 152ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். இதேவேளை, புலமைப்பரிசில் பரீட்சையின் மூலம் உதவித் தொகை பெறுவோரின் எண்ணிக்கை, 15 ஆயிரத்திலிருந்து 25 ஆயிரம் வரை அதிகரிக்கப்படும் எனவும் 2015ஆம் ஆண்டுக்கான வரவு - செலவும் திட்ட முன்மொழிவுக்கமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் இதன்போது மேலும் தெரிவித்தார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 120 | 140 | 180 |
| தக்காளி | 200 | 160 | 200 |
| மரவள்ளிக் கிழங்கு | 20 | 40 | 50 |
| கோவா | 120 | 100 | 120 |
| கரட் | 200 | 120 | 200 |
| பூசணி | 50 | 40 | 50 |
| புடோல் | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 120 |
| பாகற்காய் | 200 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 80 |
| பயற்றங்காய் | 120 | 160 | 160 |
| லீக்ஸ் | 260 | 150 | 180 |
| பீற்றூட் | 80 | 80 | 160 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 140 | 350 | 200 |
| போஞ்சி | 180 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 140 | 200 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 35-40 |
| இராசவள்ளி | 250 | 150 | – |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 194

டொறின் மன்மதநாயகம்





துஷா துஷா





ரத்தினசபாபதி பாலராஜா




ஐங்கரன் சிவாசாந்தன்




ராஜமணி சுப்ரமணி




அபிசேக் உமாகாந்தன்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த அரசை வீழ்த்தும் பலம் ஜே.வி.பியிடம் மட்டுமேயுள்ளது

## அநுர எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

**பொது எதிரணி தயாராக முன்னரே ஜனாதிபதி தனது தேர்தல் ஓட்டத்தினை ஓட ஆரம்பித்து விட்டார். தனித்து ஓடவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விரும்புகின்றார் என தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க அரசை வீழ்த்தும் முக்கிய சக்தியாக தாங்களே உள்ளதாக தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதித் தேர்தலில் பொது எதிரணியில் கூட்டு சேரத் தயாரா? என வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொது எதிரணியினை நாங்கள் ஆதரிக்க முன்னர் ஜனாதிபதி தேர்தலை அரசாங்கம் அறிவிக்க வேண்டும். இந்த ஜனாதிபதித் தேர்தல் அரசியல் அமைப்பிற்கும் சட்டத்திற்கும் முரணாக இடம்பெறுகின்றது. நீதிமன்றத்தின் சுயாதீனம் அழிக்கப்பட்டு நீதி தேவதை நீதியே அழிக்கப்பட்டு விட்டது. அரசின் விருப்பம் எதுவோ அதற்கேற்ப சட்டமும் நீதியும் வளைந்து கொடுக்கின்றது. இந்த நிலையில் இப்படியானதொரு தேர்தலை தடுக்க வேண்டுமே தவிர இதனை நடத்துவதற்கு அனுமதிப்பது அரசியல் யாப்பினை அவமதிக்கும் செயலாகி விடும். எனவே நாங்கள் இப்போதும் ஜனாதிபதி தேர்தலை தடுப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் முயற்சிகளையே எடுத்து வருகின்றோம்.

அதேபோல் ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிக்கப்படும் முன்னரே ஜனாதிபதி தனது தேர்தல் வேட்டையினை ஆரம்பித்து விட்டார். தேர்தல் ஓட்டப் போட்டியில் பொது எதிரணி ஓட ஆரம்பிக்கும் முன்னர் ஜனாதிபதி பாதித் தூரம் ஓடி விட்டார். தான் தனித்து ஓட வேண்டும் என்பதே அவரின் எதிர்பார்ப்பாக உள்ளது. பொது எதிரணி களமிறங்கினால் தன்னால் ஓட முடியுமா என்ற பயம் இன்று அரசாங்கத்திடம் ஏற்பட்டு விட்டது. அரசாங்கத்தில் இருந்து பலர் வெளியேறவுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

பிரதான பங்காளிக் கட்சிகள் தமது அதிருப்தியினை வெளியிட்டுள்ளன. இவ்வாறானதொரு நிலையில் அரசாங்கம் தனது பலத்தினை இழந்து விட்டது என்பதே உண்மை. எனவே இந்த சந்தர்ப்பம் எதிரணிகளுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. ஆனால் எதிர்க்கட்சிகள் தமது சுயநலத்தினை பார்க்காது பொது கொள்கையில் ஈடுபட வேண்டும்.



அரசாங்கத்திற்கு சவாலான கட்சியாக ஜே.வி.பியே உள்ளது. எம்மை கண்டு அரசு அஞ்சியதன் காரணத்தினாலேயே ஊவா தேர்தலில் எம்மை இலக்கு வைத்து தாக்கினர். எனவே ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுமாயின் எமது முழு பலத்தினையும் பயன்படுத்துவோம். ஆனால் எதிரணியில் களமிறங்குவது தொடர்பில் தீர்மானிக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## அனைத்து அரசியல் கட்சியுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும்

### ஜாதிக ஹெல உறுமய

அனைத்து அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என ஜாதிக ஹெல உறுமய கட்சி தெரிவித்துள்ளது.

நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் பிரபல்யமான அரசியல் பிரமுகர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இதன் ஓர் கட்டமாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.எந்தவொரு நிபந்தனையின் அடிப்படையிலும் இணக்கப்பாட்டின் அடிப்படையிலும் சந்திப்பு நடத்தப்படவில்லை. சந்திரிகாவுடன் மட்டுமன்றி நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் பேச்சுவார்த்தை நடத்துவோம்.

எதிர்வரும் நாட்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வோம் என உதய கம்மன்பில சிங்கள பத்திரிகையொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்துள்ளார். (இ-5)

## வாரம் ஒரு தகவல்

### முட்டைகள் பலவிதம்

மாணவர்களே! இன்றைக்கு முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் விலங்கினங்களைப் பற்றிப் பாடம் நடத்தப் போகிறேன். அதற்கு முன் உங்களிடம் ஒரு கேள்வி....

"கேளுங்கள் சேர்."

"குஞ்சு பொரிக்காத முட்டையை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?"

"பார்த்திருக்கிறோம் சேர்"

"எங்கே ?"

எங்கள் பரீட்சைத் தாளில் நீங்கள் போடுற முட்டையெல்லாம் குஞ்சு பொரிக்கிறதில்லை சேர்."

"தமாஷான பிள்ளைகள். நான் பாடத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் ஒரு முட்டையைப் பற்றிச் சொல்லப் போகிறேன்!. "சொல்லுங்கள் சேர்"

"இருதய நோய் உள்ள நோயாளிகள் சாப்பிடுவதற்கு அவுஸ்திரேலியாவில் கொலஸ்ரோல் இல்லாத முட்டையொன்றை கண்டு பிடித்திருக்கிறார்களாம்"

"அது எப்படியிருக்கும்?"

"அதில் மஞ்சட்கரு இருக்காது. சாதாரண முட்டையில் உள்ளதை விட 90 சதவீதம் கொலஸ்ரோல் குறைவாக இருக்கிறதாம்.

"இது ஒரு நல்ல கண்டுபிடிப்பு தான் சேர்.

சரி...பாடத்தை ஆரம்பிக்கலாமா?"ஆரம்பிக்கலாம் சேர்."

"அதற்கு முன் உங்களிடம் இன்னொரு கேள்வி கேட்கப் போகிறேன்"

"கேளுங்கள் சேர்."

"கோழி முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கிறது. ஒட்டகம் ஏன் முட்டையிட்டு குஞ்சு பொரிப்பதில்லை? யாருக்காவது பதில் தெரியுமா?"

"அது ஒட்டகத்துக்கே தெரியும் சேர்."

"என்ன தெரியும்"

"தான் முட்டை போட்டால், போடும் போதே அது தரையில் விழுந்து உடைந்துவிடும் என்று"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## புலம்பெயர் தமிழர்களுடன் அரசாங்கம் போராடுகிறது

### சஜின் வாஸ் கூறுகிறார்


விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான புலம்பெயர் தமிழர்களுடன் அரசாங்கம் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருப்பதாக சஜின் வாஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்கான நிதியொதுக்கீட்டின் விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் உரையாற்றிய அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பு அழிக்கப்பட்டு விட்டாலும் அதன் ஆதரவாளர்களான புலம்பெயர் தமிழர்களுடன் அரசாங்கம் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கின்றது. எங்களது அரசாங்கம் பயங்கரவாதிகள் மற்றும் அவர்களுக்கு ஆதரவானவர்களுடன் எதுவித தொடர்புகளையும் வைத்துக் கொள்வதில்லை.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் பயங்கரவாதிகளுடன் தொடர்பைக் கொண்டுள்ளது. பயங்கரவாதிகளுக்கு ஆயுதம், நிதி உள்ளிட்ட உதவிகள் வழங்கியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விகிரமசிங்க அண்மையில் ஐரோப்பிய நாடுகளுக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது கூட புலிகளின் தலைவர்கள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்களைச் சந்தித்திருந்தார்.



இன்று நம் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு சீனாவும், இந்தியாவும் நிதியுதவி செய்து கொண்டிருக்கின்றன. இந்தியாவின் நிதி முழுவதும் வடக்கின் அபிவிருத்தித் திட்டங்களுக்கே செலவழிக்கப்படுகின்றது.


நாட்டின் அபிவிருத்தி என்று வரும்போது நாங்கள் பூகோள அமைவிடம் பார்த்து முடிவுகள் எடுப்பதில்லை. எங்களைப் பொறுத்தவரை அபிவிருத்திக்கு யார் உதவியளித்தாலும் அதனைப் பெற்றுக் கொள்வோம். அது சீனாவாக இருந்தாலும் சரி, இந்தியாவாக இருந்தாலும் சரி. அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் உள்ளிட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் சஜின் வாஸ் குணவர்த்தன தொடர்ந்தும் தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

983



## கொஞ்சம் எட்டிப் பார்க்கலாமா?

...அன்று, வழிபாட்டு மேடையில் தலைமையாசிரியர் அருகே தங்கமுத்து நின்றிருந்தார்.

அவர் கையில் புல்லாங்குழல.

அன்பு மாணவர்களே...

நம் பள்ளி அலுவலர் தங்கமுத்து, இன்று உங்களிடையே ஒரு நிகழ்ச்சியை அரங்கேற்றுவார் என்றார்.

முன்னால் வந்த தங்கமுத்து,

அன்பு மாணவர்களே...

ஆசிரியப் பெருமக்களே... இனிய காலை வணக்கம்.

எனக்கு வாய்ப்பு அளித்த தலைமையாசிரியருக்கு நன்றி.

இசையால் யார் மனதையும் வசமாக்கலாம் என்பார்கள்.

இன்று எனக்காக ஐந்து நிமிடங்கள் ஒதுக்குங்கள்.

இந்தப் புல்லாங்குழல் இசை, உங்கள் மனதை வசமாக்கி, இன்று முழுவதும் உற்சாகமாகப் படிக்க வைக்கும் என்று நம்புகிறேன் என்றார்.

கபிலனுக்குப் பக்கத்தில் நின்றிருந்த விஷ்வா, கடவுளே... காலையிலேயே எங்களுக்கு இப்படி ஒரு சோதனையா? என்று முணுமுணுத்தான்.

இந்த விஷயம் நேற்றே தெரிஞ்சிருந்தா, வீட்டுல இருந்து வரும்போது பஞ்சு கொண்டு வந்திருப்பேனே.

சஸ்பென்ஸா சொல்லி, ஹெட் மாஸ்டர் நம்மளை சோதிச்சிட்டாரே என்று இன்னொரு கிண்டல் முணுமுணுப்பு.

அடக்கச் சிரிப்பொலிகள் சில.

தங்கமுத்து, புல்லாங்குழலை இசைக்க ஆரம்பித்தார்.


சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா...', "செந்தமிழ் நாடெனும் போதினிலே...' என்ற இரண்டு பாரதி பாடல்களை அடுத்தடுத்து இசைக்க, கூட்டம் முழுவதும் சொக்கிப்போனது.

பலத்த கரவொலி, அரங்கம் முழுவதும் எதிரொலித்தது.

தொடர்ந்து பேசிய தலைமையாசிரியர், நீங்கள் எவ்வளவு தூரம் ரசித்தீர்கள் என்பது உங்களின் கரவொலியிலேயே தெரிந்துவிட்டது.

இவர், பயிற்சி வகுப்புகளுக்குச் செல்லாமலேயே, ஆர்வத்தால் கற்றிருக்கிறார்.

இரண்டு நாட்களுக்கு முன்பு அவராக என்னிடம் வந்து, எனக்கு ஒரு வாய்ப்புத் தருவீர்களா?' என்று கேட்டார்.



அவரை இன்று புல்லாங்குழல் வாசிக்கச சொன்னது இரண்டு காரணங்களுக்காக.

ஒன்று, திறமை எங்கும் இருக்கும் என்பதை எல்லோரும் புரிந்து கொளவதற்கு. ஃபீஸ் கட்டுவதற்கு, ஆசிரியருக்காக பேனா அல்லது பென்சில் வாங்குவதற்கு என நீங்கள் பல காரணங்களுக்காக ஆபீஸ் அறைப் பக்கம் சென்றிருப்பீர்கள்.

உங்கள் காரியம் முடிந்ததும் திரும்பி வந்துவிடுவீர்கள். அங்கே இருப்பவர்களின் பெயர்கள்கூட தெரிந்திருக்காது.

அலுவலகக் கணக்கு பார்க்கும் அவர்களிடமும் வேறு திறமைகள் இருக்கலாம் என்பதை யோசித்திருக்க மாட்டோம்.

மற்றவர்களைப் பற்றி முதல் பார்வையிலேயே முடிவு செய்துவிடாமல், அவர்களை உற்றுக் கவனியுங்கள்.

இரண்டாவது விஷயம், உலகம் மிகப் பெரியது.

இங்கே நம்மை நான்கு பேர் கவனிக்க வேண்டுமென்றால், "என்னிடம் இப்படி ஒரு திறமை இருக்கிறது' என்று தயக்கமின்றிச் சொல்லி, நிரூபிக்க முன்வர வேண்டும். அப்போதுதான் கவனிக்கப்படுவோம். இல்லையென்றால், நம்மோடு நம் திறமை புதைந்துவிடும்.

அப்படி நிரூபித்ததற்கு உதாரணம்தான் நம் தங்கமுத்து என்றார்.

மீண்டும் கரவொலி எழுந்தது.

அன்று முதல் தங்கமுத்து பற்றிய வகுப்பறைப் பேச்சுக்கள் மாறியிருந்தன.

ஒரு மாணவன், மதிய நேரம் அவரிடம் சென்று, புல்லாங்குழல் வாசிக்க கற்றுத்தரச் சொன்னான்.

ஆசிரியர்கள் மத்தியில் தங்கமுத்துவின் ஆலோசனைகள் இடம்பெற்றன, பள்ளியில் சுற்றுச்சூழலைப் பராமரிப்பது, நூலகத்துக்கு வாங்க வேண்டிய சிறுவர் புத்தகங்கள் போன்ற விஷயங்களிலும் தங்கமுத்து இடம் பெற்றார். குறிப்பாக, பள்ளி நிகழ்ச்சிகள் சம்பந்தமான விஷயங்களில் கபிலன் அவருக்கு உதவியாளன் போலவே இருந்தான்.

அதன்பிறகு அந்தப்பள்ளியின் பக்கம் சென்றால், புல்லாங்குழல் இசையோ, தங்கமுத்துவின் கணீர குரலோ கேட்கும். உங்கள் பள்ளியிலேயேகூட ஒரு தங்கமுத்து இருக்கலாம். அதனால், அலுவலகம் பக்கம் கொஞ்சம் எட்டிப் பாருங்கள்.

(முற்றும்)

## 11.2014 16 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1384 - பெண்ணாக இருந்தாலும் பத்து வயது "ஜாட்வீகா" என்பவள் போலந்தின் மன்னனாக முடிசூடினாள்.
- 1532 - ஸ்பானியத் தளபதி பிரான்சிஸ்கோ பிசாரோ இன்கா பேரரசின் மன்னன் அட்ட/ஹவால்பாவைத் தோற்கடித்து சிறைப்பிடித்தான்.
- 1846 - இலங்கையில் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1849 - அரசுக்கெதிராகப் புரட்சி செய்ததாகக் குற்றம் சாட்டி ரஷ்ய எழுத்தாளரான பியோதர் தஸ்தயெவ்ஸ்கிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஆனாலும் தண்டனை பின்னர் கடைசி நேரத்தில் நிறுத்தப்பட்டது.
- 1896 - முதற்தடவையாக மின்சாரம் மின்னாக்கி ஒன்றிலிருந்து நகருக்கு அனுப்பப்பட்டது. இது நடந்தது நியூ.யோர்க் நகரில்.
- 1904 - ஜோன் பிளெமிங் வெற்றிடக் குழாயைக் கண்டுபிடித்தார்.
- 1907 - ஒக்லகோமா ஐக்கிய அமெரிக்காவின் 46ஆவது மாநிலமாக இணைந்தது.
- 1920 - ஆஸ்திரேலியாவின் தேசிய விமானசேவை குவாண்டாஸ் ஆரம்பிக்கப்பட்டது.
- 1933 - ஐக்கிய அமெரிக்காவும் சோவியத் ஒன்றியமும் தூதரக உறவை ஆரம்பித்தன.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியாவின் விமானப் படைகள் ஜேர்மனியின் ஹாம்பேர்க் நகரில் குண்டுகளை வீசின.
- 1945 - யுனெஸ்கோ நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1945 - பனிப்போர்: ஐக்கிய அமெரிக்காவின் இராணுவம் ஜேர்மனியின் அறிவியலாளர்கள் 88 பேரை தனது வானியல் தொழில்நுட்பத்தில் உதவுவதற் காக இரகசியமாக நாட்டுக்குள் அனுமதித்தது.
- 1965 - சோவியத்தின் வெனேரா 3 விண்கப்பல் வெள்ளி கோளுக்கு செலுத்தப்பட்டது. வேறொரு கோளின் தரையை அடைந்த முதலாவது விண்கப்பல் இதுவாகும்.
- 1973 - நாசா மூன்று விண்வெளி வீரர்களுடன் ஸ்கைலாப் 4 84 நாள் திட்டத்தில் விண்ணுக்கு அனுப்பியது.
- 1988 - சுமார் 10 ஆண்டுகளுக்குப் பின்னர் பாகிஸ்தானில் இடம்பெற்ற தேர்தல்களில் பெனசீர் பூட்டோ பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 2002 - சார்ஸ் நோய் முதன் முதலில் சீனாவின் குவாங்டோங் என்ற இடத்தில் பதியப்பட்டது.

### பிறப்புகள்

- 1922 - ஜோசே சரமாகூ, நோபல் பரிசு பெற்ற போர்த்துக்கேய எழுத்தாளர்
- 1930 - சின்னுவ அச்சிப்பே, நைஜீரிய எழுத்தாளர்
- 1982 - அமாரே ஸ்டௌடமையர், அமெரிக்க கூடைப்பநது ஆட்டக்காரர்

### இறப்புகள்

- 1999 - டானியல் நேத்தன்ஸ், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1928)
- 2006 - மில்டன் ஃப்ரீட்மன், நோபல் பரிசு பெற்ற பொருளியல் நிபுணர் (பி. 1912)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்

126

..இருப்பினும் இவரது ஆக்ரோஷ ஆட்டம் மீண்டும் மேன் ஆஃப் தி சீரிஸ் ஆக தேர்வு செய்ய உதவியது.

2007 ஜனவரி மாதம் மேற்கு இந்தியத் தீவு அணி இந்தியாவிற்கு வந்தது. வதோராவில் நடைபெற்ற ஒருநாள் போட்டியில் சச்சின் 100 ரன்கள் எடுத்து தனது 41 ஆவது ஒருநாள் சதத்தை எட்டி இந்தியாவின் வெற்றிக்கு வழி வகுத்தார். 2007 ஆம் ஆணடு மட்டும் 90 முதல் 99 வரை ஒட்டங்கள் எடுத்திருந்த நிலையில் 7 முறை ஆட்டம் இழந்திருக்கிறார். 99 ரன்னில் மட்டும் மூன்று முறை ஆட்டம் இழந்திருக்கிறார். மொத்தத்தில் அவருடைய கிரிக்கெட் வரலாற்றில் 23 முறை சொற்ப ரன்களில் சதத்தைத் தவற விட்டிருக்கிறார். 'பெரும் பாலோர் இதற்காகப் பரிதாபப்பட்டாலும் அவர் 38 ஆவது ரெஸ்ட் சதத்தை நிறைவு செய்தார். இருப்பினும் அந்தப் போட்டியிலும் ஆஸ்ரேலியாவே ஜெயித்தது. பெர்த்தில் நடைபெற்ற மூன்றாவது போட்டியில் சச்சின் 71 ரன்கள் எடுத்து இந்தியாவின் வெற்றிக்கு வழி வகுத்தார். 2008 ஜனவரி 25 இல் அடிலைடில் நடைபெற்ற நான்காவது போட்டியில் சச்சின் மீண்டும் தனது அதிரடி ஆட்டத்தின் மூலம் 153 ரன்கள் எடுத்து டிராவில் முடிய உதவினார். இதன்மூலம் சச்சின்

## 35ஆவது டெஸ்ட் சதம் சச்சின் உலக சாதனை!

* லட்சியம்:- உலகின் நம்.1 விளையாட்டு வீரன்
* பிடித்த மைதானம்:-ஆஸ்ரேலியாவின் சிட்னி
* பிடிக்காத மைதானம்:- பெங்களூர் மைதானம்
* வேறு விளையாட்டு:-டென்னிஸ்
* கனவு மங்கை:-எனது மனைவி அஞ்சலி
* வெறுப்பது:- வதந்தி
* பிடித்த உடை:-:ஜீன்ஸ், டீசர்ட்
* பிடித்த கடவுள்:- பிள்ளையார் சாய்பாபா மீதும் பக்தி உண்டு
* பிடித்த வாசகம்:-உனக்கு நீயே உண்மையாக இரு



களில் 90 ரன்களை எட்டியதும் ஒரு விதமான பயத்திலும் தளர்ச்சியிலும் சச்சின் தடுமாறுகிறார் என்று நாகூசமால் குற்றம் சுமத்துபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

2007- 2008 ஆம் ஆண்டு பார்டர்-கவாஸ்கார் கோப்பைக்காக இந்தியக் குழு ஆஸ்ரேலியா பயணித்தது. 4 ரெஸ்ட் போட்டிகளில் அவர் குவித்த ரன்கள் 493. மெல்போர்னில் நடைபெற்ற முதல் ரெஸ்டில் போட்டிகளில் 62 ரன்கள் எடுத்த போதிலும் ஆஸ்ரேலியா 337 ரன் வித்தியாசத்தில் மகத்தான வெற்றி பெற்றது.

2008 ஜனவரி 4 ஆம் திகதி சிட்னியில் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் சச்சின் அபாரமாக விளையாடி 154 ரன்கள் விளாசி தனது 39 ஆவது ரெஸ்ட் சதத்தை பதிவு செய்தார். சச்சினின் அபாரமான விளையாட்டுக்காக பிளேயர் ஆஃப் தி மேட்ச் விருது கிடைத்தது.

ஆஸ்ரேலியாவுடனான ரெஸ்ட் போட்டிகளைத் தொடர்ந்து இந்தியா ஆஸ்ரேலியா மற்றும் இலங்கை ஆகிய மூன்று நாடுகளுக்கும் இடையே காமன்வெல்த் பேங்க் முத்தரப்பு ஒருநாள் போட்டிகள் தொடங்கின. 2008 பெப்ரவரி 5ஆம் திகதி பிரிஸ்பேனில் இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் ஒருநாள் போட்டியில் 16,000 ரன்களை கடந்த முதல் வீரர் என்னும் பெருமையைப் பெற்றார். முதல் இறுதிப் போட்டியில் 117 ரன்கள் எடுத்து தனது 42 ஆவது ஒருநாள் சதத்தை எட்டினார். இரண்டாவது இறுதிப் போட்டியில் 81 ரன்கள் எடுத்த தன் மூலம்தான் மீண்டும் ஃபார்மில் இருப்பதை நிருபித்தார். ஆஸ்ரேலியாவில் இருந்து தாயகம் திரும்பிய பிறகு தென் ஆபிரிக்காவுடன் மூன்று ரெஸ்ட் போட்டிகள் தொடங்கின. முதல் ரெஸ்டில் முதல் இன்னிங்சில் டக் அடித்தார். அடுத்த ஆட்டத்தின் போது காயம் அடைந்ததால் மீதமுள்ள அணிகளும் ரெஸ்ட் போட்டிகளில் அவரால் கலந்துகொள்ள இயலவில்லை.

கே. ரமேஷ் (தொடரும்)

...இது எல்லா மொழிகளிலும் இருக்கிறது. இது எங்கும் பொதுவான வழக்கு. நிரந்தரக் கவலை மணிபூரகச் சக்கரத்தைப் பூட்டுகிறது.

# ஆத்ம ஞானத்தைத் தேடி

இந்தச் சக்கரத்தை திறக்கும் வழி என்ன? இந்தச் சக்கரத்தை எவ்வாறு நல்ல நிலையில் வைத்திருக்க முடியும் வாருங்கள்.. சொல்லுங்கள்.

# கவலைகள் இன்றி வாழ்தல்!

நாம் எந்த சூழ்நிலையிலும் கவலைப்படாமல் இருக்க வேண்டும் ஸ்வாமிஜி?

நீங்கள் உங்களுக்குள் கவலைப் படக்கூடாது என்று சொல்லிப் பாருங்க என்ன நடக்கும்? நீங்கள் கவலைப்படக்கூடாது என்கிற இன்னொரு கவலையும் உருவாக்கிக் கொள்வீர்கள். கவலைப்படுவதை நிறுத்து என்று ஒரு போதும் சொல்லாதீர்கள். அது கண்டிப்பாக முடியாது. ஒரே விடயம் கவலைகளைப் பற்றி கவலைப்படுவதை நிறுத்தி விடுங்கள்.!

கவலைகளைப் பற்றி கவலைப் படமால் இருப்பது என்றால் என்ன? கவலைகளை மீண்டும் மீண்டும் உள்ளுக்குள்ளேயே ஒரு கவலையான போக்கில் சொல்லிக் கொண்டு சிக்கிக் கொள்வதால்தான் உண்மையிலேயே கவலை உங்களிடம் வேர் விடுகிறது. உங்கள் கவலைகளைப் பற்றிக் கவலைப்படமால் இருங்கள் என்று இதைத்தான் நான் சொல்கிறேன் அவைகள் அப்படியே இருக்கட்டும். அவைகளுக்கு உயிர் கொடுக்



காதீர்கள். அவர்களுக்கு இரத்தத்தையும் சதையையும் உணவாகக் கொடுக்காதீர்கள்.

மனதைக் கட்டுப்படுத்துங்கள். எதிர் மறையாக எண்ணாதீர்கள் என்று சொல்வது கயிற்றில் முடிச்சை அவிழ்ப்பதற்கு எந்த விதத்திலும் உதவாது. மனதை அடக்கும் பொழுது அடக்கப்பட்ட நினைவுகள் நேராக மணி பூரக சக்கரத்திக்குச் செல்கிறது.

மணிபூரக சக்கரம் விஷமாகும் பொழுது ஏதேனும் பறித்துக் கொள்ளுதல் எதையேனும் அழித்தல் உங்கள் உடலிடமே முறையற்று நடந்து கொள்ளுதல் உங்களுடனேயும் மற்றவர்களுடனும் போராடுதல் போன்ற உங்கள் செயல்களில் ஒரு விழிப்பற்ற வன்முறை தலைதூக்கி நிற்கும்.

இவையெல்லாம் அடக்குமுறையின்

## ஆன்மீகம் 76

நுட்பமான வெளிப்பாடுகள். அதனால் தான் கோபமாக இருக்கும்பொழுது வயிறு எரிவதாகவும் அல்லது வயிறு கனமாகவும் இருப்பதாக உணர்வதாகவும் மக்கள் சொல்கிறார்கள். உங்களிடம் ஏராளமாக அடக்கி வைக்கப்பட்ட கோபம் இருக்கிறது. அது எதிர்மறைத் தன்மையை இன்னும் மேலும் மேலும் அதிகரிக்கிறது.

எதிர்மறைத் தன்மை என்றால் என்ன?

ஏதோ சில காரணங்களால் உங்கள் தொழிலில் தோல்வி ஏற்படுகிறது என்று வைத்துக் கொள்ளுவோம். அதற்கு உங்கள் எதிர்ச்செயல் எவ்வாறு இருக்கும்...?

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் தேசியக் கூட்டமைப்பு யாருக்கு?



எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறுமென்று வலுவாக எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு யாருக்கு என்ற கேள்வி இப்போது முதன்மை பெறத் தொடங்கியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கிலும் கிழக்கிலும் கொண்டுள்ள வாக்கு வங்கி, இத்தேர்தலில் மிகவும் முக்கியமானதொரு விடயமாகக் கருதப்படுகிறது.

சுமார் நான்கு இலட்சம் தமிழர்களின் வாக்குகளை வைத்துக்கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனாதிபதித் தேர்தலில் பேரம் பேச முனைவதாக, அண்மையில் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்திருந்தார். இந்தக் கருத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதான அமைச்சர் விமல் வீரவன்சவின் காழ்ப்புணர்வை காட்டுவதாக மட்டும் எடுத்துக்கொள்ளக்கூடாது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியத்துவத்தை, கொழும்பின் பிரதான அரசியல் கட்சிகள் உணர்ந்துள்ளன என்பதையே முக்கியமாக சுட்டி நிற்கிறது.

விரும்பியோ, விரும்பாமலோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த ஜனாதிபதித் தேர்தலில், சக்திவாய்ந்ததொரு தரப்பாக பார்க்கப்படுகிறது என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

கடந்த வருடம் நடைபெற்ற வடமாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 353,595 வாக்குகளை பெற்றிருந்தது. அதுபோலவே, 2012ஆம் ஆண்டு நடைபெற்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்புக்கு 193,827 வாக்குகள் கிடைத்திருந்தன. இதன் மூலம், வடக்கிலும் கிழக்கிலும் அண்மைய தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மொத்தமாக 547,422 வாக்குகளை பெற்றிருக்கிறது.

நாட்டின் ஏனைய பகுதிகளில், சில ஆயிரம் வாக்குகளைக் கொண்ட கட்சிகளையும் அமைப்புகளையும் தம்பக்கம் இழுத்துவிட்டு, பெரிதாக தம்பட்டம் அடிக்கும் பிரதான அரசியல் கட்சிகளுக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஐந்தரை இலட்சம் வாக்குகளும் அவ்வளவு சாதாரணமானதொன்றாக இருக்க முடியாது.

மாகாணசபைத் தேர்தல்களில் கிட்டத்தட்ட ஐந்தரை இலட்சம் வாக்குகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றிருந்தாலும், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் பொதுவாக அக்கறைகொள்வது குறைவு. இதனை கருத்திற்கொண்டு பார்த்தால், சுமார் நான்கு முதல் நான்கரை இலட்சம் வாக்குகளை தீர்மானிக்கும் சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கப்போவது உறுதி.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், அரச தரப்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போட்டியிடவுள்ளார். அதற்கு தடையேதும் உள்ளதா என்ற உயர்நீதிமன்றத்தின் கருத்தை கேட்டிருந்தார். இந்நிலையில், உயர்நீதிமன்றத்தின் கருத்து அவருக்கு சாதகமாக அமைந்துவிட்டதால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போட்டியிடுவது உறுதியாகியுள்ளது.

அதேவேளை, எதிர்க்கட்சிகளின் தரப்பில் யார் போட்டியிடப்போவது என்பது இன்னமும் உறுதியாகவில்லை. எதிர்க்கட்சிகள் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் விடயத்தில் நெருங்கி வந்துவிட்டன.

ஊவா மாகாணசபைத் தேர்தலை அடுத்து, ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே போட்டியிடுவார் என்றதொரு நிலை உருவானது. ஆனால், ஐ.தே.க.வுக்குள், நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர எழுப்பிய புயலும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) உள்ளிட்ட சில கட்சிகளும் அமைப்புகளும் ரணிலை ஆதரிப்பதற்கு மறுத்தமையும் கடைசி நேரத்தில் அவர் ஒதுங்கிக்கொள்ளும் நிலையை ஏற்படுத்திவிட்டது.

அதுபோல, போட்டியிலிருக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உள்ளிட்ட உத்தேச பொது வேட்பாளர்களும் இப்போது பின்னரங்குக்கு வந்துள்ளனர். இந்தக் கட்டத்தில், ஐ.தே.க.வின் பிரதித் தலைவர்களில் ஒருவரான கரு ஜெயசூரியவே பொதுவேட்பாளராக நிறுத்தப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இரு தரப்பிலும் யார் வேட்பாளராக நிறுத்தப்பட்டாலும், கடுமையான போட்டி இருக்குமென்றே எதிர்பார்க்கப்படுகிறது. ஏனென்றால், இப்போது, அரசாங்கத்துக்கு ஆதரவான எந்த அலையும் கிடையாது.

அதேவேளை, எதிர்க்கட்சிகளின் தரப்பில் மிகப் பெரியளவில் கவர்ச்சியான வேட்பாளர் எவரும் நிறுத்தப்படும் வாய்ப்பும் இல்லை.

எனினும், அரசாங்கத்துக்கு எதிரான அதிருப்தி அலையும் எதிர்க்கட்சிகளின் வாக்கு வங்கியும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடுமையான போட்டியை கொடுக்குமெனறு எதிர்பார்க்கப்படுகிறது. சிங்கள மக்களின் ஆதரவு என்பது இரண்டு பிரதான வேட்பாளர்களுக்கும் இடையில், சம அளவில் பிரிந்து போகும் சூழலை உருவாக்கியுள்ளது. இது இலங்கையின் ஜனாதிப்திபதித் தேர்தல் வரலாற்றில் முக்கிய கட்டம் எனலாம்.

ஏனென்றால், இம்முறை 50 சதவீத வாக்குகளை எந்தவொரு வேட்பாளரும் பெறமுடியாது போகலாமென்ற கருத்து பலரிடமும் காணப்படுகிறது. 50 சதவீத வாக்குகளை எந்தவொரு வேட்பாளரும் பெறமுடியாமல் போனால், இரண்டாம் கட்ட வாக்கு எண்ணிக்கை நடத்தப்படவேண்டிய கட்டாயம் உருவாகும். இத்தகைய நிலை இதற்கு முன்னர் ஏற்பட்டிருக்கவில்லை.

1982இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன 52.91 சதவீத வாக்குகளையும் 1988இல் பிரேமதாச 50.43 சதவீத வாக்குகளையும் 1994இல் சந்திரிகா குமாரதுங்க முதல் தடவை 62.28 சதவீத வாக்குகளையும் 1999இல் இரண்டாவது தடவை 51.12 சதவீத வாக்குகளையும் 2005இல் மஹிந்த ராஜபக்ஷ முதல் தடவை 50.29 சதவீத வாக்குகளையும் 2010இல் இரண்டாவது தடவை 57.88 சதவீத வாக்குகளையும் பெற்று ஜனாதிபதியாக தெரிவாகியிருந்தனர்.

எனவே, 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறுவது, இரண்டாம் சுற்று வாக்கு எண்ணிக்கையில் வெற்றியைத் தீர்மானிப்பது என்பன இம்முறை முக்கியமான தேர்தல் வியூகங்களாக இருக்கும்.

சிங்கள வாக்காளர்களின் வாக்குகள் சம அளவிலோ, சற்று ஏறக்குறைவாகவோ இரு வேட்பாளர்களுக்குமிடையில் பிரிந்து போகக்கூடியதொரு சூழலில், சிறுபான்மையினரின் வாக்குகளே பெறுமதிமிக்கவையாக இருக்கப்போகின்றன. அதிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்கு வங்கி எல்லாத் தரப்பாலுமே குறி வைக்கப்படுமொன்றாக இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. கிட்டத்தட்ட நான்கரை இலட்சம் வரையான தமிழ் மக்களின் வாக்குகளை திரட்டும் ஆற்றலைக் கொண்டிருப்பதால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம்முறை பேரம் பேசுவதில் முக்கிய பங்கை ஆற்றுமென்று எதிர்பார்க்கலாம்.

ஏற்கெனவே ஜனாதிபதித் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்க வேண்டுமென்றும் அதன்மூலம் நல்லதொரு செய்தியை வழங்கி, புதியதொரு ஆரம்பத்துக்கு அடித்தளம் இடலாமென்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தமிழ் நாளிதழ் ஒன்றுக்கு தெரிவித்திருந்தார்.

அதுபோலவே, ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்லவும் எதிர்க்கட்சிகளின் கூட்டணியுடன் இணைநது, தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வர வேண்டுமென்று கூறியிருக்கிறார். இவை இரண்டும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடயத்தில், இரண்டு தரப்புமே கொண்டுள்ள அக்கறையை காட்டுகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை புலிகளின் பதிலிகள் என்றும் புலிகளின் வழிகாட்டலில் செயற்படும் கட்சியென்றும் விமர்சித்த அரசாங்கம், இப்போது தேர்தல் வந்ததும் அதையெல்லாம் மறந்துவிட்டு கூட்டமைப்பிடம் ஆதரவு கேட்டுள்ளது. இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எத்தகைய முடிவை எடுக்கப்போகிறது என்ற வினா நீடித்துவருகிறது. கடந்த சில மாதங்களாக இது பற்றிய கேள்விகள் எழுந்துகொண்டிருக்கின்றன. பல்வேறு ஊகங்களும் வெளியாகின்றன. ஆனால், அவசரப்பட்டு யாருக்கும் ஆதரவு அளிப்பதாக வாக்குறுதி கொடுக்க இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகவில்லை.

ஏனென்றால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது பெறுமானத்தை உணர்ந்து, இதனை தமிழர்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கான ஆயுதமாக பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற எதிர்பார்ப்பில் இருப்பதாகவே தெரிகிறது.

தமது கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளத்தக்க பொதுவேட்பாளருடன், பேரம் பேசி எழுத்து மூலமான உடன்பாடொன்றில் கையெழுத்திட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எண்ணியுள்ளதாகத் தெரிகிறது. எவ்வாறாயினும், அரச தரப்பிலிருந்து விடுக்கப்படக்கூடிய அழைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உதாசீனப்படுத்த தயாரில்லை. அமைச்சர் பசில் ராஜபக்ஷ விடுத்த அழைப்பு தொடர்பில் கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இந்த அழைப்பை திறந்த மனதுடன் பரிசீலிக்கத் தயாரென்று கூறியுள்ளார்.

அரச தரப்பு எத்தகைய இராஜதந்திரத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்ததோ, அதேபோன்ற இராஜ தந்திரத்துடனேயே இரா.சம்பந்தனும் இதனை அணுக முற்பட்டுள்ளார் என்று தெரிகிறது.

அதேவேளை, தமக்கு இதுபற்றி அதிகாரபூர்வமான முறையில் அழைப்பு விடுக்கப்படவில்லை என்பதையும் அவ்வாறு அழைத்தால் அதைப் பரிசீலிக்கலாம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். அமைச்சர் பசில் ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை ஆழம் பார்க்கவே, ஊடகங்களின் மூலம் இந்த அழைப்பை விடுத்திருக்கிறார் என்று கருதவேண்டும். அதற் கேற்றவாறு எடுத்த எடுப்பிலேயே இந்தக் கோரிக்கையை நிராகரித்துவிடாமல், தந்திரமான முறையில் பதிலளித்துள்ளார் இரா.சம்பந்தன.

ஆனால், அரச தரப்புக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்குவதென்பது மிகவும் கடினமானதொரு காரியமாகவே இருக்கும். ஏனென்றால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதோ, தமிழ் மக்களினதோ நம்பிக்கையை காப்பாற்றும் வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவோ அவரது அரசாங்கமோ இதுவரை செயற்பட்டிருக்கவில்லை. முன்னர் கொடுத்திருந்த வாக்குறுதிகளையும் காப்பாற்றியிருக்கவில்லை.

அதைவிட வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களிடையில் நிலவும் அரச எதிர்ப்பு அலையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கும் தீவிரக் கருத்துடையோரின் ஆதிக்கமும் ஆளும் கட்சிக்கு ஆதரவு வழங்கும் முடிவொன்றை எடுப்பதற்கு கடுமையான சவாலை கொடுக்கும்.

அரச தரப்பின் கோரிக்கையை பரிசீலிக்கலாமென்ற இரா.சம்பந்தனின் கருத்து, அரச தரப்பை ஆதரிப்பதற்கு தயாரென்று அர்த்தமாகாது. அரசியலில் எதுவும் நடக்கலாம். அரசியலில் நிரந்தர எதிரியும் இல்லை, நிரந்தர நண்பனும் இல்லையென்றும் கூறுவதுண்டு. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக கட்சித் தலைவர் சரத் பொன்சேகாவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்ததை, அதுபோல ஒன்றாகத்தான் கருதவேண்டும். ஆனால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடயத்தில் அத்தகைய அபூர்வமொன்று நிகழ்வதற்கு சாத்தியம் குறைவு.

அதேவேளை, இம்முறை ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் துவேசத்துடன் அணுக்கக்கூடாது என்ற கருத்தையும் இரா.சம்பந்தன் வெளிப்படுத்தியுள்ளார் என்பது கவனிக்கத்தக்கது. அதாவது, இதுவரையில் தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலை பெரிதாக எடுத்துக்கொள்வதுமில்லை அதற்கு ஆதரவு அளிப்பதுமில்லை. ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழர்களின் வாக்களிப்பு வீதம் மிகமிகக் குறைவாகவே இருந்திருக்கிறது.

கடந்த முறை எதிர்க்கட்சிகளால் பொது வேட்பாளராக நிறுத்தப்பட்ட சரத் பொன்சேகாவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு தெரிவித்திருந்தபோதும், தமிழ் மக்கள் அவருக்கு வாக்களிப்பதற்கு ஆர்வம் காட்டவில்லை. போருக்கு அவர் தலைமை தாங்கியிருந்ததும், அப்போரின் இரத்த வாடைகூட அகலாத நிலையில், அந்தத் தேர்தல் நடத்ததும் அதற்கு ஒரு காரணம் என்பதை மறுக்கமுடியாது.

அதுபோன்றோ அல்லது தமக்குச் சார்பாக செயற்படாத ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்வதால் என்ன பயன் என்றோ, ஒதுங்கியிருக்காமல் செயற்பட வேண்டுமென்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்பார்ப்பாக தெரிகிறது. இத்தகைய கட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம்முறை தேர்தல் புறக்கணிப்பு முடிவையோ அல்லது ஒதுங்கியிருக்கும் முடிவையோ எடுக்குமென்று கருதுவதற்கில்லை. ஏதோவொரு வேட்பாளரை ஆதரித்து, அவர் மூலம் தீர்வொன்றை எட்டவே முயற்சிக்கும்.


ஆனால், அது எந்தளவுக்கு சாத்தியமாகும்? இந்த பேரம் பேசும் இராஜதந்திரக் களத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்க்கும் இலக்கு எட்டப்படுமா என்பதை, கூட்டமைப்பு ஆதரிக்கப்போகும் வேட்பாளரின் வெற்றியின் மூலம் மட்டுமே தீர்மானிக்கப்படாது. அந்த வேட்பாளர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எட்டக்கூடிய உடன்பாட்டை நிறைவேற்றும் அர்ப்பணிப்பை கொண்டவராக இருத்தல்வேண்டும்.

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








பதுளை கொஸ்லாந்தை மீரியவத்தைப் பகுதியில் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ் E-city ஆங்கில கற்கை கல்லூரி யின் அமைப்பு ஊடாக பல்வேறு உதவிப் பொருட்கள் அண்மையில் வழங்கப்பட்டன. இவ்வுதவிப் பொருட்களை வெளிநாட்டில் வசிக்கும் E-city மாணவர்கள், பொது அமைப்புக்கள் மற்றும் நலன் விரும்பிகள் என பலரிடம் சேகரிக்கப் பட்ட பொருட்களே இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளன. இதில் உலர் உணவுப் பொருட்கள், உடுபுடவைகள், மருந்துப் பொருட்கள் என பல்வேறு வகைப்பட்ட பொருட்களை கையளித்துள்ளனர்.

யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்ற போது விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் மாணவி ஒருவருக்கு பரிசில்களை வழங்குவதையும் படங்களில் காணலாம்.





நிகழ்வின் நிழல்கள்

யாழ்.கரவெட்டி பிரதேச செயலகத்தின் சர்வதேச சிறுவர் முதியோர் மற்றும் மாற்றுவலுவுடையோர் தின விழா அண்மையில் நடைபெற்ற போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர்.கேதீஸ்வரன் மங்கல விளக்கேற்றுவதையும் நிகழ்வில் இடம்பெற்ற சிறார்களின் நடன நிகழ்வின் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம். (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)



இலங்கை வங்கியின் இணைக்காரியாலயங்களில் ஒன்றான வடபிராந்தியக் கிளை அண்மையில் யாழ்.வைத்திய சாலை வீதியில் உள்ள இலங்கை வங்கியின் முதலாம் மாடியில் திறந்து வைக்கப்பட்டது. இதன்போது இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் டி.எம்.குணசேகர, கிளை முகாமையாளர் எஸ்.நடராஜா ஆகியோர் இணைந்து நாடா வெட்டி திறந்து வைப்பதையும் படத்தில் காணலாம்.



கோண்டாவில் ஞானவீர சனசமூக நிலையமானது மரநடுகை மாதத்தினை முன்னிட்டு கோண்டாவில் புகையிரத நிலைய வீதி ஓரங்களில் பயன்தரு மரக் கன்றுகளை அண்மையில் நாட்டிய போது...



பேராதனை பல்கலைக் கழக பொது பட்டமளிப்பு விழா அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற போது...

நிகழ்வின் நிழல்கள்








யாழ்.திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் சைவச் சிறுவர் இல்லத்தில் நடைபெற்ற தீபாவளித் திருநாள் நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிட்டன் பிரதமர் கமரூன்

# எச்சரிக்கை



"லண்டன் —

**உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யா தனது நிலைப்பாட்டை மாற்றாவிடின் ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகள் மேலும் அதிகரிப்படும் என பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**"

## ரஷ்யா மீதான பொருளாதாரத் தடை அதிகரிக்கப்படும்

உக்ரைனின் கிழக்கு பகுதியில் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களுக்கும், உக்ரைன் அரசு படைகளுக்கும் இடையே போர்நிறுத்தம் அமுல்படுத்தப்பட்டிருந்த நிலையில், அங்கு கடந்த சில நாட்களாக மீண்டும் தாக்குதல்கள் நடந்து வருகின்றன. கிளர்ச்சியாளர்களுக்கு, வீரர் களை அனுப்பியும், ஆயுதங்களை வழங்கியும் ரஷ்யா உதவி வரு வதாக உக்ரைன் குற்றம் சாட்டி யுள்ளது.

இந்த நிலையில் ஜி-20 நாடுகளின் மாநாட்டுக்காக அவுஸ்திரேலியா சென்றுள்ள பிரிட்டன் பிரதமர் டேவிட் கேமரூன், ரஷ்யாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், 'உக்ரைன் நாட்டை ஒரு சுதந்திர நாடாக செயற்பட ரஷ்யா அனுமதிக்கும் என நான் இன்னும் நம்புகிறேன். உக்ரைனின் சுதந்திர விவகாரத்தில் சாதகமான போககை ரஷ்யா கையாண்டால், அதன் மீது தற்போது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார தடைகள் நீக்கப்படும். மாறாக ரஷ்யா தனது அநீதியான நடத்தைகளை தொடருமானால், அதன் மீதான பொருளாதார தடைகள் மேலும் அதிகரிக்கப்படும்' என்று தெரிவித்தார்.

உக்ரைன் விவகாரத்தில், ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைகளுக்கு மேற்கததேய நாடுகள் தண்டனை வழங்கும் என அமெரிக்காவும் எச்சரிக்கை விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பயங்கரவாத ஆட்சியினை அமுல்படுத்தும் ஐ.எஸ். தீவிரவாதிகள்-ஐ.நா.குற்றச்சாட்டு

ஈராக், சிரியாவில் பல நகரங்களை கைப்பற்றிய ஐ.எஸ் தீவிரவாதிகள் அவர்களை ஒன்றிணைத்து இஸ்லாமிய நாடாக அறிவித்து உள்ளனர். தங்களுக்கு என நாணயங்களையும் வெளியிட்டு உள்ளனர். தீவிரவாதிகள் வசம் உள்ள நகரங்களை மீட்க ஈராக் இராணுவம் தொடர்ந்து போரிட்டு வருகிறது.

ஈராக்கில் மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஜி நகரில் இருக்கிறது. இந்த நகரை தீவிரவாதிகள் கைப்பற்றி இருந்தார்கள். இதை மீட்க இராணுவம் தீவிரவாதிகளுடன் கடுமையாக சண்டையிட்டது. 2 வாரம் இரு தரப்பினர் இடையே மோதல் நடந்தது. இதில் இராணுவம் பைஜி நகரை தீவிரவாதிகளிடம் இருந்து மீட்டது. இராணுவத்தின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் ஓட்டம் பிடித்தனர்.

மீட்கப்பட்ட பஜி நகரில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து தான் 50 சதவீத எண்ணெய் ஈராக்குக்கு சப்ளை செய்யப்படுகிறது. இதனால் முக்கியமான இந்த நகரை இராணுவம் மீட்டது மிகப்பெரிய வெற்றியாக கருதப்படுகிறது.

சிரியாவில் ஐ.எஸ். இஸ்லாமிய அரசு பயங்கரவாத ஆட்சியை அமுல்படுத்துவதாக ஐ.நா குற்றம் சாட்டி உள்ளது 300 பேர்களிடம் எடுத்த பேட்டியின் மூலம் தயாரித்த அறிக்கையில் ஐ.எஸ் இயக்கம் தீவிர வன்முறையை கடைப்பிடித்து வருவதாக ஐ.நா குற்றம் சாட்டி உள்ளது.

குற்றப்பட்டியல்

* புகைபிடித்த ஆண்களின் விரல்கள் துண்டிக்கப்பட்டு உள்ளது. ஆணுக்கு சிகிச்சைஅளித்த பெண் பல் டாக்டர் தலை துண்டித்து கொல்லப்பட்டுள்ளார்.

உள்ளூர் மக்களுக்கு உணவு மற்றும் மருந்து பொருட்கள் கிடைப்பதை தடை செய்து உள்ளனர்.

* பாலியல் பலாத்காரம் செய்ததாக பொதுமக்கள் கல்லெறிந்து கொல்லப்படுகிறார்கள்.

* சிறுபான்மை யாஷிடி இன பெண்கள் பாலியல் அடிமைகளாக பயன்படுத்தப்படுகிறார்கள். அவர்கள் கட்டாயமாக குழந்தைகள் பெற்றெடுக்க வைக்கப்படுகின்றனர்.

* குழந்தை வீரர்களை பயன்படுத்தி மக்களை பயமுறுத்த கொலைகளை காட்டும் வீடியோ படம் எடுக்கிறார்கள்.

* அமெரிக்கா வான்வழி தாக்குதல்களால் மக்களின் வீடுகள் மற்றும் பண்ணைகளை தாங்கள் தங்குவதற்கு பயன்படுத்தி கொள்கின்றனர் என்று ஐ.நா.பட்டியல் வெளியிட்டுள்ளது. (இ-5)

## பிரதமர் நரேந்திர மோடிக்கு ஜப்பான் பிரதமரால் விருந்து



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஜப்பான் பிரதமர் ஷின்ஸோ அபே நேற்று முன்தினம் அவுஸ்திரேலியாவில் வைத்து விருந்தளித்துள்ளார்.

பிரிஸ்பேன் நகரில் நடைபெறும் ஜி-20 உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக மியான்மரில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு சென்ற பிரதமர் மோடி, இந்தியா-ஜப்பான் இடையிலான பொருளாதார தொடர்புகளை மேலும் பலப்படுத்துவது தொடர்பாக ஜப்பான் பிரதமர் ஷின்ஸோ அபேவுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த பேச்சுவார்த்தையின் போது பிரதமர் மோடிக்கு ஷின்ஸோ அபே விருந்து அளித்தார். சமீபத்தில் ஜப்பானுக்கு சென்ற போது மோடிக்கும் அபேவுக்கும் இடையில் ஏற்பட்ட நட்பின் அடையாளமாக இந்திய பிரதமர் மோடிக்கு இந்த விருந்தினை ஷின்ஸோ அபே அளித்ததாக ஜப்பான் ஊடகங்கள் வர்ணித்துள்ளன.

இந்த விருந்தில் பங்கேற்ற மோடி, "மீண்டும் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்" என்று அபேவிடம் தெரிவித்தார்.

மோடியின் ஜப்பான் பயணத்தின்போது இந்தியாவில் ஸ்மார்ட் சிட்டிகளை உருவாக்குதல், கங்கையை தூய்மைப்படுத்துதல் மற்றும் ஏராளமான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் எதிர்வரும் 5 ஆண்டுகளில் 35 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஜப்பான் அளிக்கும் என்று ஷின் ஸோ அபே அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் திட்டப்படி சோனியா, ராகுல் கிராமங்களை தத்தெடுத்தனர்

இந்திய பிரதமர் மோடியின் திட்டப்படி காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, துணைத் தலைவர் ராகுல் காந்தி கிராமங்களை தத்து எடுத்தனர்.

பிரதமர் நரேந்திர மோடியின் கனவு திட்டமான 'ஆதர்ஷ் கிராம யோஜனா' திட்டத்தின் கீழ், எம்.பி.க்கள், கிராமத்தை தத்து எடுத்து வருகிறார்கள். இதை காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும், அவருடைய மகனும், காங்கிரஸ் துணைத்தலைவருமான ராகுல் காந்தியும் பின்பற்றியுள்ளனர்.

உத்தரபிரதேச மாநிலம் ரேபரேலி மாவட்டத்தில் ஜாகாத்பூர் பகுதியில் உள்ள உத்வா கிராமத்தை சோனியாவும், அமேதி தொகுதிக்கு உட்பட்ட ஜகதிஷ்பூர் பகுதியில் உள்ள தீக் கிராமத்தை ராகுல் காந்தியும் தத்து எடுத்துள்ளனர் என்று கட்சியின் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அவர்களின் குடும்ப நண்பரும், காங்கிரஸ் எம்.பி.யுமான கப்டன் சதீஷ் சர்மா, அதே மாவட்டத்தில் சரேனி கிராமத்தை தத்து எடுத்தார். எனினும், கிராமங்களை தத்து எடுத்துக் கொண்டது, பிரதமர் மோடியால் தொடங்கப்பட்ட திட்டத்திற்கு ஒப்புதல் அர்த்தம் இல்லை என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-5)

## மியன்மாரில் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சி தலைவி போட்டியிட தடை ஒபாமா கண்டனம்



மியன்மார் ஜனாதிபதி தேர்தலில், அந்த நாட்டின் எதிர்க்கட்சி தலைவர் போட்டியிட தடை விதிப்பது அர்த்தம் அற்றது என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கண்டனம் தெரிவித்தார்.

பர்மா என்றழைக்கப்பட்டு வந்த மியன்மார் நாட்டில் அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடக்கிறது. அங்கு, ஜனநாயக மீட்புக்காக தன்னையே அர்ப்பணித்த அந்த நாட்டின் எதிர்க்கட்சி தலைவர் ஆங் சான் சூகி, இந்த தேர்தலில் போட்டியிட முடியாது.

அவரது மகன்கள் இருவர், வெளிநாட்டு குடிமகன்கள் என்பதால் சூ கி, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு அந்த நாட்டின் அரசியல் சட்டப்பிரிவு தடையாக இருக்கிறது.

இந்த நிலையில், கிழக்கு ஆசிய உச்சி மாநாட்டுக்கு மியன்மார் சென்றிருந்த அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, யாங்கோனில் எதிர்க்கட்சி தலைவர் சூ கியை அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் சந்தித்து பேசினார்.

இருவரும் கூட்டாக பத்திரிகையாளர்களை சந்தித்தனர். அப்போது இருவரும் ஒருவருக்கொருவர் அன்பைப் பரிமாறும் விதத்தில் கட்டித்தழுவி முத்தமிட்டனர்.

பின்னர் ஒபாமா நிருபர்களிடம் பேசுகையில், "எதிர்க்கட்சி தலைவர் சூ கி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட தடையாக சட்டப் பிரிவை காட்டுகிறார்கள். ஒருவர் தேர்தலில் போட்டியிடுவதற்கு அவரது பிள்ளைகளை தடையாக காட்டுகிற சட்டப் பிரிவு அர்த்தம் அற்றது" என கூறி கண்டனம் தெரிவித்தார்.

மேலும், "ஜனநாயக கண்ணோட்டத்தில் பார்த்தால், குறிப்பிட்ட ஒருவருக்கு எதிராக பாரபட்சம் காட்டுவது என்பது சரியானது அல்ல" எனவும் ஒபாமா கருத்து தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## ஆராரோ... ஆரிவரோ...

இந்தத் திங்கள் முழுக்க,
முந்தைய நினைவுகளில்,
மூழ்கிக் கிடக்க
விந்தை தெரியுமா?
எந்தையர் நினைவுகளை
மறக்கச் சொல்லும்
மானிட தர்மம்
எப்படிமுடியும்
எத்தனை வலிகள்
எவ்வளவு தியாகங்கள்
குற்றவுணர்வு வந்தெமை
குத்திக் குத்திக்
குற்றுயிராய்க் கிடக்கின்றோம்
கூடிப் படித்தவன்
குழாவித்திரிந்தவன்
தோள் கொடுத்தவன்
தோழமை கொண்டவன்
அண்ணன், தம்பி
மாமன், மச்சான் உறவுகள்
எல்லோரும் மண்ணுக்குள்
புதையுண்டு போக
படர்ந்து நிற்கும்
எருக்கலையே
உன்வேர்களால்
குத்தாதே அவர்களை
உறங்கவிடு

**கிளியூர் மணி**
**கிளிநொச்சி**

## மாணவர்கள்

பள்ளி சென்று
கல்வி பயிலையிலே
உன் அறிவுக்கு
விருந்தளி
அமுதத்தைப் பெறுவதற்காய்
கண்விழி
மாணவனாய்- நாம்
சென்ற பாதைகள் எங்கும்
பள்ளி வடுக்கள்
தெரிகிறது
சித்திரா ரீச்சரிடம்
அடிவாங்கி ஆவேசப்பட்டது
பெயர் தெரியா
பாவையை பார்ப்பதற்காய்
வாடிக்கிடந்தது
இறப்பர் பாட்டா சிலிப்பருடன்
பள்ளி செல்லும் பாதியில்
திரும்பியது
பரீட்சைக் கட்டணத்தில்
களவாய் படம்பார்த்தது
மதில் ஏறத் தெரியாத
கரங்களால் தடுக்கி
விழுந்து பாய்ந்தோடியது
கணக்கிற்கு இருபத்தெட்டு
எடுத்ததற்காய்
குட்டுவாங்கியது இன்று
நற்பிரஜையாய் நான்
மிளிர்வதற்கு வழியமைத்த
என் ஆசான்களை
என் விழியால் பூஜிக்கின்றேன்

**தாவடி**
**நி.கவிஅழகன்**

## சிந்தனை எங்கே?

கிழக்குத் தெருமுனையில்
குவிந்துள்ள சாம்பல் மேட்டில்
அநாதை நாயொன்று
அயர்ந்து உறங்குகிறது
அன்னை நிறத்தையொத்த
அழகான அதன் குட்டி
வயிற்றுப் பசியாலே
வாடிப்போய் நிற்கிறது
பசியின் கொடுமையினால் குட்டி
பக்கத்து வீட்டினிலே
உணவுப் பொதியொன்றை திருடி
உண்டு களையாறியது
பக்கத்து வீட்டுக்காரன்
பதறி விழுந்தடித்து
குட்டியின் தலைமீது பொல்லால்
ஓங்கி அடித்து விட்டான்
கதறிச் சுழன்ற வண்ணம் குட்டி
கண்களை மூடியது
மூடிய கண்களிரண்டும்- அது
மீண்டுமோ திறக்கவில்லை
குட்டியின் விழியோரம் இன்னும்
ஈரமோ காயவில்லை இந்த
மனிதரின் மனதோரம் என்றும்
ஈரமேன் வருவதில்லை

**பொலிகை செ.யோகராஜா**
**பொலிகண்டி**

## இமயம் தொட...

எதை நீ நன்மை என
எண்ணுகிறாயோ
அதை செய்து முடி
எது தீதென்று
தென்படுகிறதே அதை
எதிர்த்து தடுத்து நிறுத்து
உன் எண்ணம் செயல்
அனைத்திலும் நிலை நிறுத்து
நீ ஏழைகளின் தோழன் என

மாவை. நா.கஜேந்திரன்

## தாயெனுந் தெய்வம்



கையைப் பார்க்கின்ற.
காசு இருக்கின்ற
பையைப் பார்க்கின்ற.
பாசம் பொங்குகின்ற
பச்சோந்தி உலகத்திலே.
கைமாறு கருதாது எமது
மெய்யைப் பார்க்கின்ற.
களைப்புத் தீர்த்து -எமது
பசியைப் போக்குகின்ற
தியாகத்தின் உருவம்!
ஏடு தொடக்கலைப் பார்த்திருந்து.
பள்ளிவாசல்களில் காத்திருந்து.
என்னையும் உன்னையும்- எவரும்
எள்ளி நகை செய்யா வண்ணம்
ஏணிப்படிகளில் ஏற்றிட வேண்டி- தன்
இறுதிவரை வருபவள் தாயே!

**வாணியழகன்**
**முரசுமோட்டை**



## வாட்டும் தனிமை

இல்லற சோலையிலே
அழகு சேர்க்க
மலர்ந்த மொட்டு
தனிமையில் வாடுதே
உறவுகளை விட்டு
பிரிந்த பெத்த பந்தங்களோ
நித்தம் பறக்கின்றனர்
பணம்சேர்க்க
பிஞ்சு மனசின் உணர்வுகளை
புரியாத ஜடங்களாக!

*அராலியூர்*
*சோ.சிவகுமாரன்*

## எங்கே?

தாயைக் காணாது
அழும் குழந்தைக்கு
இது பிராக்காட்டுதல் போலும்
இன்றைய பனிக்குளிரிலும்
தன்னை மறந்த நிலையில்
தாய்போல பாவனையில்
சிறிது நேரத்தின் பின்
இவற்றை உதறிவிட்டு
அம்மா என அழுது
தாயைத் தேடுமே
எங்கே குழந்தையின் தாய்?

*சி.சுகிர்தமலர்*
*உரும்பிராய்*

## தலைவிதி

என் அம்மா இன்று
உயிரோடிருந்தால்
எனக்கு தேநீர் ஊற்றித் தருவாள்
நான் என்ன செய்ய..
எனக்கு நானே ஊற்றிக்
குடிப்பதுதான் என் தலைவிதி

*சு.ஜெயரூபன்*
*பருத்தித்துறை*

# மௌனத்தின் தேடல்- 229

## என் செய்வான்

பச்சை மண் ஒன்று பசியால் துடிக்கிறது
பக்கத்தில் யாரும் இல்லை-பால்
கொடுக்க தாயும் இல்லை- கிண்ணத்தில்
ஏதும் இல்லை பாலன் இவன்
என்ன செய்வான் தன் பசியாற
எங்கே போவான்?

*யோ.காண்டீபன்*
*மானிப்பாய்*

## சரித்திரங்கள் படைப்போம்

சிறுவர்கள் நாம்
சிதறும் முத்துக்கள் போன்று
சரித்திரங்கள் படைப்போம்
தரித்திரங்களை எதிர்த்து
தூண்களாக நாம் நின்று -பல
தூறல்களின் விதி கூறுவோம்

*அ.அச்சுதன்*
*யா.இ.க*

## பிஞ்சு பாலகனே

வஞ்சகர் நிறைந்துள்ள
அர்த்தமற்ற இப்புவியில்
கள்ளமற்ற உள்ளத்தோடு
அவதரித்த பாலகனே!
இன்று விளையாடும் உன் கைகள்
நாளை வஞ்சகத்தை ஒழிக்கட்டும்
உன் காலம் ஒளிரட்டும்

*வன்னியூர் சோபா*
*விசுவமடு*

## இயற்கையின் சீற்றம்

சோகம் ததும்பும் முகத்துடனே!
சோர்ந்து ஏதோ முயற்சியில்
மண்மூடி மரணித்த
தாயவளை நினைக்கின்றானோ
இயற்கையின் சீற்றம்
இவன் பெற்றோரையும்
பறித்ததோ!

*கணபதிதாசன்*
*கட்டைக்காடு*

## பூந்தளிரின் புன்னகை எங்கே?

பூமித்தாயின் புரியாத
விளையாட்டினால்
மண்மட்டும் சரியவில்லை
இக்குழந்தையின்
மனமகிழ்வும் சரிந்ததுவே
அகதிகளாய் தஞ்சம் கொண்டு
அனைத்துமிழந்து
தன்பள்ளி மறந்த
இச்சிறுமியின்
விதிவிளையாட்டை
பூமித்தாயின்புரியாத
விளையாட்டறிந்திடுமோ...?

*எஸ்.ஆர்.ராம்கி*
*கிளி/ கிளி.இ.க.*

## வழிகாட்டிகள்

உளவியல் ரீதியில்
இளவயதினரின்
விருப்பங்களை
அருகிலிருக்கும்
பெற்றவர் மட்டுமின்றி
உற்ற உறவினருடன்
ஆதரவை நல்கும்
ஆரம்ப ஆசிரியர்களும்
இனங்கண்டு விரைந்து
இயன்ற வரையிலாவது
பூர்த்தி செய்தால்
பிற்காலத்தில் உலகம் போற்றும்
உத்தம குணத்தவரை
உருவாக்குவதில் பெரு வெற்றி பெறுவர்

*க.நாகராசா*
*நுணாவில்*

## காத்திருப்பு

நிலத்தில் புதைக்கப்பட்டவரை
நிலவில் தேடுதொரு விஞ்ஞானம்
விடைகள் வெகுதூரமானதால்
தனிமையாக்கப்பட்ட சோதரன்
உண்மைகளை கண்டறியும் சோதனையில்
வெல்லும் இவனாய்வு முடிவுக்கரைக்காய்
காத்திருப்போம் -நாளை
நமக்கொரு விடியலுக்காய்

*வீ.வினிஸ், பண்டத்தரிப்பு*

## வேண்டும் சுதந்திரம்

மன்னிக்கப்படுவதிலும்
மன்னித்துவிடுவது மகத்தானது
அதற்காக துணிவையிழப்பதும்
பணிந்து நடப்பதும் சரியல்ல
நாம் யாருக்கும் எதிரியல்ல
தன்மானத்தோடு வாழ்வதும்
தன்னிச்சையாய் செயற்படுவதும்
எம் இனத்தின் தாகம்
என்று தேநீர் கரைக்கின்றீரா?

*க.அபர்ணா, வட்டுக்கோட்டை*

# மௌனத்தின் தேடல் -230




**அன்பு வாசகர்களே!**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 12.11.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை- சீன நெருங்கிய உறவால் இலங்கை வந்தது நீர்மூழ்கிக்கப்பல்!

*சண்டே டைம்ஸ் பத்திரிகை யில் 2014.11.02 அன்று இராட்சத சீன ட்ராகனின் நவீன இலங்கா புரி பிரவேசம் என்னும் தலைப் பில் வெளியான ஆசிரியர் தலை யங்கத்தின் தமிழாக்கம் பிரசுர மாக்கப்படுகின்றது.*

(நேற்றைய தொடர்ச்சி....)

இதன் விளைவாக எதிர்பார்க்கக்கூடிய கடுமையான பிரதிபலிப்பும் புதுடெல்லி அரசிடமிருந்து வெளிப்பட்டிருந்தது.


அதாவது, சீன- இலங்கை உறவுப் பரிமாணங்களால் ஏற்பட்டிருக்கும் எதிர்மாறான விளைவுகளையிட்டு தான் அதிருப்தி அடைவதாக உயர் மட்ட அறிவிப்புகள் கொழும்புக்கு இந்திய அரசினால் திரும்பத் திரும்ப விடுக்கப்பட்டது.

இலங்கை இப்போது தனது வெளிநாட்டு மற்றும் பொருளாதார. கொள்கைகள் மட்டில் மறைமுகமான பல குறுக்குவழி செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது.

சர்வதேச சக்திகளை ஒன்றுக்கொன்று எதிராக தட்டிக் கொடுக்கும் தந்திரோபாயத்தை தனது கட்டுப்பாட்டையும் மீறி வெளிப்படுமளவிற்கு பயன்படுத்திய காரணத்தால் அதனது அடிப்படை மூலோபாயம் மேற்கொண்டும் தொடரப்பட முடியாதளவிற்கு சமநிலை அற்றுப் போயிற்று என்பது உறுதி.

இலங்கை தனது சீன சார்பு கொள்கையை தீவிரமாக கையாண்ட நிலையானது கணக்கற்ற ஏனைய நாடுகள் தன்னிடமிருந்து தூர விலகிச் செல்ல அனுமதித்ததாயிற்று.

இவ்விதமான தனது சமநிலையற்ற தளம்பல் அணுகுமுறைகள் குறுகிய நடுத்தர அல்லது நீண்டகால ஓட்டத்தில் நாட்டிற்கு முன்னேற்றகரமான விதத்தில் பயனளிக்குமா என்பதை அரசே தீர்மானிக்க வேண்டும்.


நீர்மூழ்கிக் கப்பல்

எமது பத்திரிகை வாயிலாக இலங்கைக்கான அணிசேராக் கொள்கை மட்டில் எமது தொடர்ச்சியான ஆதரவை நாம் வழங்கியே வருகிறோம்.

இப்போது அரசாங்கம் விளையாடிக் கொண்டிருக்கும் பயனெதுவுமற்ற வீண் விளையாட்டுக்களை பிடிவாதமாக தொடர்வதன்மூலம் புதுடில்லியை சீண்டி, அதன் சாபத்திற்கு ஆளாகாதபடி நாம் திரும்பத் திரும்ப எச்சரித்து வருகிறோம்.

எமது 2012 செப்ரெம்பர் 2 பத்திரிகையின் இலங்கை ஏன் தனது அணிசேரா நிலையை தொடரவேண்டும் என்ற தலைப்பிலான ஆசிரியர் தலையங்கத்தில் புதியதொரு பனிப்போர் காலநிலைமை உருவாகிக் கொண்டிருப்பதாக நாம் எச்சரித்திருந்தோம்.

அதன் விளைவாக, அமெரிக்காவுடன் அதன் நேசநாடுகளும் ஒருபக்கம் எதிராக சீனாவும் ரஷ்யாவும் மறுபக்கம் என இணைந்த ஒரு கூட்டாளி உருவாகும்.


ஷி ஜின்பிங்

இவ்விதம் நிகழ்ந்தால் அப்போது இருக்கக்கூடிய 3 ஆம் தரப்பு பொருத்தமான விதத்தில் மீண்டும் அணிசேரா இயக்கமாகவேயிருக்கும்.

இப்படியான தருணத்தில் இலங்கைக்கான விருப்பத் தெரிவுக்கு மனதில் இடமிருக்க வேண்டுமென்பதால் அதன் மனக்கதவுகள் திறந்தபடி இருப்பது அவசியம்.

ஆனாலும் அதனது நிகழ்கால நடவடிக்கைகள் காரணமாக அவை விரைவாக மூடப்பட்டுக்கொண்டிருக்கின்றன என அதில் நாம் கூறியிருந்தோம். நாட்டின் நிலைமையும் தெளிவற்றதாகவே உள்ளது.

இலங்கையுடனான சீனக்கூட்டின் தன்மை பற்றிய அறியாமையில் வேண்டுமென்றே மக்கள் விடப்பட்டிருப்பது அபாயகரமான ஒரு விடயமாகவேயுள்ளது.

இது மட்டுமின்றி நிகழ்ந்து கொண்டிருப்பது பற்றி மக்கள் எதுவும் அறியாதவர்களாகவே இருக்கின்றனர்.

மக்களின் அறியாமை சாதகமான ஒன்றே என்ற அடிப்படையில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் சீனாவுக்கு இது பொருத்தமானதாகவே இருக்கும்.

ஆனால், ஒரு காலத்தில் திறந்த மனப்பான்மையும் உயிரோட்டமான ஜனநாயக செயற்பாடுகளும் கொண்டதாயிருந்த இலங்கைக்கு இது தேவை யான ஒன்றல்ல.

அம்பாந்தோட்டையின் மகம்புறவில் கட்டப்பட்டிருக்கும் மகிந்த ராஜபக்ச துறைமுகம் பற்றிய முக்கியத்துவம் வாய்ந்த உண்மைத் தகவல் பொதுமக்களுக்கு எவ்வாறு இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளதென்ற விடயம் இதற்கான தெளிவான உதாரணமாகும்.

துறைமுகத்தின் 2 ஆம் கட்டப்பணிகள் பூர்த்தியானதும் அதனது நான்கு இறங்குதுறைகள் சீனர்களின் நிர்வாகத்தில் விடப்படும். இதற்கான மாற்றீடாக, கடன்கொடுத்த சீன முகாமைத்துவம் (துறைமுகம் சீனர்களின் பாரிய கடன் அடிப்படையிலேயே கட்டப்படுகிறது), இலங்கைக்கு அனுகூலமான விதத்தில் கடன் நிபந்தனைகளை சீராக் குவதாக ஒப்புக்கொண்டுள்ளது.


ஷின்ஷோ அபே

செப்ரெம்பரில் ஒப்பந்தம் கைச்சாத்தானதன் பின்னரே இந்த மாதிரியான திட்டங்கள் அம்பாந்தோட்டைக்கான முன்னெடுப்புகள் என்பது தெரிய வந்தது. இதனைத் தொடர்ந்து இலங்கை துறைமுக அதிகார சபைத் தலைவர் பிரியத் விக்கிரம இதுபற்றிய தெளிவுபடுத்தலின்போது அத்துறைமுக கப்பற் தரிப்பிடங்களை சீனாவுக்கு கையளிப்பதே எப்போதும் அரசின் நோக்கமாயிருந்ததாக கூறினார்.

சில வருடங்களுக்கு முன்னரே திறைசேரியினால் கைச்சாத்திடப்பட்ட ஆரம்பகடன் ஒப்பந்தத்தின் ஒரு பகுதிதான் இது என்பதே அவரது கூற்றாகும்.

ஆனாலும், இவ்வொப்பந்த விபரங்கள் வெளிப்படுத்தப்படாமல் இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தன.

பொருள், பணம் பற்றிய நீதிநியாயம் அனைத்தும் பெரும் தலைகளுக்குரியதே என்ற எமது தத்துவ கருத்துக்களை மற்றுமொரு விளக்கமே இது வாகும்.

இந்த கடன்கள் எதற்காக தற்போது சீராக்கம் செய்யப்படுகிறது? ஆரம்பத்திலேயே இது அனுகூலமற்றதாக தெரியவில்லையா? இந்த கப்பற் தரிப்பிட இறங்குதுறைகளும் வாய்ப்புக்களும் சீனாவுக்கேதான் என்பது ஆரம்ப ஒப்பந்தத்திலேயே உள்ளதென்றால் அதனை ஏன் ஒப்புக்கொள்ள முடியாது? இவையனைத்திற்கும் யார் பொறுப்புக் கூறுவது? சம்பந்தப்பட்ட பெரும் கைகளுக்கே பொறுப்புக் கூற கடமைப்பட்ட நிதியமைச்சு வேறு எவருக்கும் கூற வேண்டியதில்லை?

உஷ்ச்! உஷ்ச்! காதும் காதும் வைத்தாற்போல் மேற்கொள்ளப்படும் இந்த இரகசிய விடயங்களில் கூடுதல் வெளிப்படைத்தன்மை பின்பற்றப்படவேண்டியதற்கான கால நேரம் வந்தாயிற்று!

தெற்காசிய நாடுகள் அனைத்தும் மதித்து நடக்கும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் பற்றி எந்தவித அக்கறையோ ஆர்வமோ இலங்கை அரசுக்கு இல்லை என்பது தெளிவு என்பதால் மேற்படி அனைத்து நாடுகளிலுமிருந்து அது விலக்கப்பட்டதாயுள்ளது என்ற கசப்பான சிந்தனை மக்கள் மனதை வருத்துவதாயுள்ளது.


ஆனாலும் முற்றுமுழுதான தமது நம்பிக்கையை அரசுமீது வைத்திருப்பவர்களான மக்கள் மட்டில் அது நியாயமான முறையில் நடந்துகொள்கிறதா? இதனைக் கருத்திற்கொள்ள வேண்டிய அதிகார சக்திகளனைத்திற்குமே இது மட்டில் பாரிய பொறுப்பு நிச்சயம் உள்ளது!

இது சம்பந்தமாக ஆபிரகாம் லிங்கன் அவர்கள் கூறிய வார்த்தைகளை அனைவரும் நினைவிற் கொள்வது அவசியம். மக்களனை வரையும் சில வேளை உன்னால் மடையர் ஆக்க முடியலாம், சிலரை எப்போதும் மடையராக்கலாம் ஆனாலும் எல்லோரையும் எக்காலமும் மடையராக்க உன்னால் முடியாது!

**தமிழில்-யோகர்**

(முற்றும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசியல், சினிமா
பொழுதுபோக்கு கேள்விகளை
சுருக்கமாக பெயர், முகவரி
குறிப்பிட்டு அனுப்பி
வையுங்கள்.




வியாசர் பதில்கள்
இல. 3, 2 ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
குறுந்தகவல் (SMS) 021 567 1532
Email vijasarpathil@gmail.com



*அந்தக் கால சினிமாவா இந்தக் கால சினிமாவா கலாசாரத்தை ...*

Hi வியாசரே!

ந.மரியநாயகம், கொழும்புத்துறை

**60துகளின் முன்பு வந்த சினிமாவா அதற்குப் பின்பு வந்த சினிமாவா கலாசார சீரழிவை உண்டாக்கியது?**

அறுபதுகளில் இரண்டு மலர்கள் ஒன்று சேரக் காட்டினார்கள். எண்பதுகளில் இரண்டு கிளிகள் ஒன்று சேர்வது போல் காட்டினார்கள். தொண்ணூறுகளில் இரண்டு நிழல்கள் ஒன்றுசேரக் காட்டினார்கள். இப்போது அப்படியே காட்டுகிறார்கள். இதற்கெல்லாம் பிள்ளையார் சுழி போட்டது அறுபதுகள்தான்.

Hi விலாசமான வியாசரே!

கா.நாகராசா, சாவகச்சேரி

**ஆறு நாட்கள் உலகை இருள் மூடினால் என்ன செய்வீர்? தொடர் கதையா? சுயசரிதையா எழுதுவீர்?**

வயதாகி விட்டதே. இவை இரண்டையும் தவிர வேறென்ன செய்துவிட முடியும்.

Hai Sir !

ஜசிந்தன், புத்தூர்

**விக்னேஸ்வரனின், இந்திய பயணம் ஜனாதிபதிக்கு விருப்பமா?**

சீனாவின் நீர் மூழ்கிக் கப்பலின் இலங்கை விஜயம் இந்தியாவிற்கு பிடிக்கவில்லை. ஆனால் விஜயம் நிற்கவில்லையே. அதேபோல்தான் முதல்வரின் விஜயமும்.

Hi வணக்கம் வியா அண்ணா!

கிருஷா, வரணி

**நயன்தாரா, நமிதா, ஆர்த்தி ஆகிய மூன்று பேரில் உங்களுக்கு ரொம்ப பிடிச்சது யாரை?**

இரண்டு நண்பர்கள் முன் தோன்றிய கடவுள் ஒரு நண்பனைப் பார்த்து உனக்கு என்ன வரம் வேண்டும் என்றாராம். அவன் எனக்கு உடனே இரண்டு அழகிய பெண்கள் வேண்டும் என்றானாம். கடவுள் அருளினார். அடுத்த நண்பனைப் பார்த்து உனக்கு என்ன வரம் வேண்டும் என்றாராம். அதற்கு அவன் எனது ஆருயிர் நண்பன் அழகிய பெண்ணாக மாறவேண்டும் என்றானாம் மூவரையும் அணைத்தபடி.

வியாசர் அவர்களே!

ப.தில்லைம்பலம், கரவெட்டி

**சுவாமி தூக்கி தோளில் வைக்கும் போது கொட்டுமேளம் கொட்டுவது போல் தாலி கட்டும் போதும் கொட்டுவது ஏன்?**

ம(வ)கனே இறுதியாக கொட்டு மேளச் சத்தத்தைகேள். இனிமேல் மனைவி கொட்டும் சத்தத்தை தான் கேட்க வேண்டும என்று தான் (சத்தியமாக சொந்த அனுபவமில்லை)

Hi Bro!

டனு,

**இந்தக் காலத்து Love பத்தி என்ன நினைக்கி றீங்க?**

இந்தக் காலத்து Love வா? அதற்கு முன் ஒரு '(E)' யை எழுதாமல் விட்டு விட்டீர்களேயம்மா. திருத்திக் கொள்ளுங்கள் "ELove"

## இந்தக் காலத்து Love பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

Hi வியா!

கமலூன், கொடிகாமம்

**எங்கட காப்பற் றோட் 1 km க்கு 4 கோடியாம் அவ்வளவும் வைரம் போல?**

அதனால் தான் ஒவ்வொரு நாளும் தலா மூன்று உயிர்களையேனும் எடுத்துக் கொண்டிருக்கிறது போலும்

அன்பின் வியா மாமா!

பி.மதன், அல்வாய்

**படித்து பட்டம் பெற்று வேலை பார்ப்பவனை இந்த சமூகம் கேவலமாக பார்க்கிறதே ஏன் மாமா?**

படிப்பு, பட்டம் என்ற வட்டத்திற்குள் நின்றால் அப்படித்தான் நடக்கும். அந்த வட்டத்தை விட்டு கொஞ்சம் நடவுங்கள், நகருங்கள்,சமூகத்தை படியுங்கள்... அவ்வளவும் போதும்

அன்பின் வியாசரே!

வே.அகிலேஸ்வரன், மருதங்கேணி

**மனித உறவுகளை விட விலங்குகள் பாசமாக இருப்பது ஏன்?**

மிருகங்களிடம்தான் பணம் இல்லையே

Hi வணக்கம் தோழர் வியா!

கிருசாந், மன்னார்

**மனித புதைகுழி விவகாரம் என்னவாயிற்று?**

மண் போட்டு மூடிய விடயங்களை மீண்டும் தோண்டலாம். மண்போட்டு மூடிய விவகாரங்களை மீண்டும் தோண்டும் வழக்கம் நம்நாட்டில் இல்லையே 'கதம் கதம்' (பாபா படத்தில் ரஜினி கூறுவது)

# தேசிய தாய்,சேய் நல மேன்மை விருதுக்கான போட்டியில் கோப்பாய் வைத்திய அதிகாரி பணிமனை இரண்டாம் இடம்

(யாழ்ப்பாணம்)

தேசிய தாய்,சேய் நல மேன்மை விருதுக்கான போட்டியில் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை இரண்டாம் இடத்தினைப் பெற்றுள்ள அதேவேளை வடமாகாணத்தில் முதல் இடத்தினையும் பெற்று யாழ்.மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளது என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை விடுத்துள்ள செய்திக்குறிப்பில், இலங்கையின் மத்திய சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதாரப் பணியகத்தினால் இல்ங்கையிலுள்ள சகல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் மத்தியில் தேசிய தாய்,சேய் நல மேன்மை விருதுக்கான போட்டி நடத்தப்பட்டது.

இப் போட்டியில் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் ஒழுங்கமைப்பும், செயற்பாடுகளும் மதிப்பிடப்பட்டு சிறந்த சுகாதார வைத்திய அதிகாரி பணி மனைகள் தெரிவுசெய்யப்பட்டன.

இப் போட்டியின் முதல் கட்டத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மூன்று தலைசிறந்த சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் தெரிவு செய்யப்பட்டன.

இரண்டாவது கட்டத்தில் ஒவ்வொரு மாகாண மட்டத்திலும் மூன்று சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளும் மூன்றாவது கட்டமான தேசிய மட்டத்தில் மூன்று தலைசிறந்த சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளும் தெரிவுசெய்யப்பட்டன.

இப் போட்டியில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தினைப் பெற்று யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பெருமை தேடித் தந்துள்ளது.

இப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தினை மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த தியாகொட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் மூன்றாம் இடத்தினை குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த பொல்காவல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் பெற்றுக் கொண்டன.

இவர்களுக்கான தேசிய விருது வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் மத்திய சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனா பிரதம விருந்தினராகக் கலந்து விருதுகளை வழங்கிக் கௌரவித்தார்.

இவ் விழாவில் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ஜெயசீலன் மற்றும் மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சுரணுகா ஆகியோர் தலைமையில் சென்ற அனைத்து கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் இவ் விருதினைப் பெற்றுக் கொண்டனர்.

வடமாகாணத்தில் முதலாம் இடத்தினை கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும், இரண்டாம் இடத்தினை பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் மூன்றாம் இடத்தினை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் பெற்றுக்கொண்டன.

இரண்டாம் இடத்தினைப் பெற்ற பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள் வைத்திய கலாநிதி செந்தூரன் தலைமையிலும் மூன்றாம் இடத்தினைப் பெற்ற சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள் வைத்திய கலாநிதி தயாளன் தலைமையிலும் நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள் வைத்திய கலாநிதி வெற்றிநாதன் தலைமையிலும் தங்களுக்கான விருதுகளைப் பெற்றுக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# யாழ்ப்பாணத்தில் அரச, தனியார் வங்கிகளில் அடகு வைத்த நகைகளையும் மீளக்கொடுக்கவும்

## வடக்கு மாகாணசபை ஜனாதிபதியிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

1995/1996 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் பாரிய இடப்பெயர்வின் காரணமாக யாழ்ப்பாண அரச மற்றும் தனியார் வங்கிகளிலிருந்து கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்ட பொது மக்களால் மீட்கப்படாத அடகு நகைகள், காப்புப் பெட்டகங்கள் மற்றும் உறங்கு நிலைக் கணக்கு மீதிகளையும் அதன் உரிமையாளர்களுக்கு விடுவிக்க வேண்டுமென வடக்கு மாகாண சபை ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது, வடக்கு மாகாண சபையின் 18ஆவது அமர்வின் போது நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்றினை இங்கு மீள்பதிவு செய்கிறேன்.

அண்மையில் கிளிநொச்சிக்கு வருகை தந்தபோது கொழும்புக்கு எடுத்துச்செல்லப்பட்ட அடகு வைக்கப்பட்ட நகைகளின் ஒரு பகுதியை அவற்றின் உரிமையாளர்களுக்கு வழங்கியது போல 1995/1996 ஆம் ஆண்டுகாலப்பகுதிகளில்பாரிய இடப்பெயர்வின் காரணமான யாழ்ப்பாண அரச மற்றும் தனியார் வங்கிகளிலிருந்து கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்ட பொதுமக்களால் மீட்கப்படாத அடகு நகைகள், காப்புப் பெட்டகங்கள் மற்றும் உறங்கு நிலைக்கணக்கு மீதிகளையும் அதன் உரிமையாளர்களுக்கு விடுவிக்க வேண்டுமெனவும், அதற்கான பகிரங்க அறிவித்தலை விடுவிக்க வேண்டுமெனவும், இயலாத பட்சத்தில் அத்தகைய நகைகள் மற்றும் பணத்தின் பெறுமதியின் மொத்தத் தொகையினை யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்திக்காக வடக்கு மாகாணசபைக்கு விடுவிக்கவேண்டுமென இச்சபை கோரி நிற்கிறது.

இது விடயத்தில் துரதிர்ஷ்டசாலிகளான யாழ்ப்பாண மக்களின் கைவிடப்பட்ட சொத்துக்களை வங்கிகள் தமதாக்கிக் கொள்வது மிகவும் நியாயமற்றதாகும்.

இந்த நகைகள் 1995/1996 ஆண்டுகால ஒட்டுமொத்த வெளியேற்றத்திற்கு முன்னர் அடகு வைக்கப்பட்டவையாகும்.

எனவே ஜனாதிபதி, இத்தகைய நகைகளையும், உறங்கு நிலைக்கணக்கு மீதிகளையும் அவற்றின் உரிமையாளர்களுக்கு விடுவிக்க வேண்டும் எனவும் அவ்வாறு இல்லை எனில் மொத்த நிதியையும் யாழ்.மாவட்ட அபிவிருத்திக்குப் பயன்படுத்தக்கூடியதாக வடக்கு மாகாணசபைக்கு விடுவிக்க வேண்டுமென்பதே எமது வேண்டுகோளாகும் என அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்ணாப்புலவில் சிறுவர் பூங்கா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட உண்ணாப்புலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்கா விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதாக கரைதுறைப்பற்று பிரதேச சபை செயலாளர் சு.ரவீந்திரநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவரிடம் வினவிய போது,

முல்லைத்தீவில்பூங்காவொன்றை அமைத்துத் தருமாறு பிரதேச வாசிகள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக உண்ணாப்புலவு வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள காணியில் நெல்சிப் திட்டத்தின் 8.5 மில்லியன் ரூபா நிதியுதவியில் இப் பூங்கா நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ் வேலைத்திட்டம் ஒப்பந்தக்காரர்களின் காலதாமதத்தினால் பின்னடைவைச் சந்தித்த நிலையில் தற்போது வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இதற்கான மேலதிக வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்ற நிலையில் அவையும் இம் மாத முடிவில் நிறைவு பெறவுள்ளன.

சிறுவர் பூங்காவிற்கான அனைத்து வேலைகளும் முடிவுற்றதும் அடுத்த மாதம் திறந்து வைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## ரி.ஐ.டியினரால்— குடும்பஸ்தர் கைது!

(மன்னார்)

மன்னார் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையை முடித்துவிட்டு வெளியில் வந்த குடும்பஸ்தர் ஒருவரை வவுனியாவில் இருந்து வருகை தந்த பயங்கரவாத புலனாய்வுத்துறையினர் கைது செய்து வவுனியாவுக்கு கொண்டு சென்றுள்ளதாக அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மன்னார் நீதிமன்றில் நேற்று முன்தினம் வழக்கு விசாரணை ஒன்றுக்காக சென்று விட்டு வெளியில் வந்த மன்னார் பனங்கட்டிக்கொட்டு கிராமத்தைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான தங்கத்துரை ஜெயின்ஸ் (பாண்டியன் வயது-38) என்பவரே பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதானவராவார்.

தனது கணவர் கைது செய்யப்பட் டுள்ளதாக பயங்கரவாத புலனாய்வுத்துறையினர் தனக்கு துண்டொன்றை தந்துள்ளதாகவும் அவருக்கு புனர்வாழ்வு வழங்க வேண்டுமென புலானய்வு பிரிவினர் கூறியதாகவும் அவரது மனைவி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட மேற்படி குடும்பஸ்தர் 1992 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்து பின்னர் 1994 ஆம் ஆண்டுதிருமணம் முடித்துள்ள நிலையில் சுமார் 20 வருடங்களின் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளதாக மனைவி தெரிவித்தார். (அ-2)

## புகையிரத நிலையத்தின் அறிவுறுத்தலை பின்பற்றுக!

(மல்லாவி)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கு இடையில் நடைபெறுகின்ற புகையிரத சேவைகளின் போது பயணிகளை வழியனுப்ப வருகின்றவர்கள் புகையிரத நிலைய அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்படாமையால் விபத்துக்களை சந்திப்பதுடன் புகையிரத சேவைகளுக்கும் இடையூறுகளை ஏற்படுத்துவதாக புகையிரத திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

புகையிரதசேவைகளின் போது புகையிரதங்கள் புகையிரத நிலையங்களில் ஓரிரு நிமிடங்கள் மட்டும் தரித்து நின்று பயணிக்கின்றன.

பயணிகளைவழியனுப்பவருகின்ற உறவினர்கள் புகையிரதத்தினுள் ஏறி அவர்களுடன் இருக்கைகளில் அமர்ந்து இருக்கின்ற நிலையில் புகையிரதம் புறப்படுவதற்கான சமிக்ஞைகள் வழங்கப்பட்டு புகையிரதம் பயணத்தை ஆரம்பிக்கும் போது வழியனுப்ப வந்த உறவினர்கள் புகையிரதத்திலிருந்து இறங்க முற்படுகின்றனர்.

இதன்போது புகையிரத மேடைக்கும் புகையிரதத்திற்கும் இடையில் தவறி வீழ்ந்து உயிரிழப்பதுடன் படுகாயமடையும் சம்பவங்களும் தொடர்கின்றன.

இவ்வாறான செயற்பாடுகள் எதிர் வரும் காலங்களில் தொடருமாகில் புகையிரத நிலையங்களினுள் பயணிகள் மட்டும் அனுமதிக்கப்படுவதுடன் ஏனையோருக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

அத்துடன் விசமத்தன செயற்பாடுகளில் ஈடுபடுவோரை சிவில் உடை தரித்த பொலிஸார் மூலம் கண்காணித்து தகுந்த நடவடிக்கை மேற் கொள்ளப்படுமென புகையிரத திணைக்கள அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-2-15)

## உயிரிழந்தவர்களுக்காக அஞ்சலி செலுத்தப்பட்டது

(கிளிநொச்சி)

கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் கிளிநொச்சி கிளையின் ஏற்பாட்டில் கடந்த கால அனர்த்தங்கள் மற்றும் போரின் போது உயிரிழந்தவர்களுக்கான அஞ்சலி செலுத்தும் நிகழ்வு கிளிநொச்சி சென்.திரேசா கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் நடை பெற்றது.

இந்நிகழ்வில் கிறிஸ்தவ, இந்து, பௌத்த, இஸ்லாமிய மத குருமார்கள் கலந்து கொண்டு ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர். கடந்த கால இயற்கை அனர்த்தங்கள், போர் ஆகியவற்றால் இறந்தவர்களுக்கு தீப அஞ்சலி, மலர் அஞ்சலி. மௌன பிரார்த்தனை ஆகியனவும் இதன்போது இடம்பெற்றன.

இதில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகனபவன், கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.(அ-2)






ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தையொட்டி நாடளாவிய ரீதியில் மரநடுகை நிகழ்வு நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நேற்றையதினம் மனவாளன்பட்டமுறிப்பு, பனிக்கன் குளம், தச்சடம்பன் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் மரநடுகை நிகழ்வு நடைபெற்றதைப் படங்களில் காணலாம். (படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

## கிராமப்புற உணவகங்களில் சுகாதாரம் பேணப்படுவதில்லை

### பொதுமக்கள் சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

தேநீர் சாலைகள், உணவகங்களில் கையாளப்படும் பாத்திரங்களை தூய்மையாக்கி பயன்படுத்தாமையால் அவற்றை பயன்படுத்தும் பொது மக்களுக்கு நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நகர் புறத்தை அண்மித்த தேநீர் சாலைகள், உணவகங்கள் என்பவற்றில் சுகாதாரப் பிரிவினரால் சுகாதாரம் பேண அறிவுறுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டு வரும் நிலையில் பன்னங் கண்டி, வட்டக்கச்சி, தர்மபுரம், புளியம் பொக்கணை, பிரமந்தனாறு ஆகிய பின் தங்கிய கிராமங்களில் சுகாதா ரம் பேணப்படுவதில்லை என பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் தேநீர் சாலைகள், உணவகங்களில் பரிமாற்றப்படும் தேநீர் அருந்தும் குவளைகள், தேநீர் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் பாத்திரங்கள், உட்பட உணவருந்தும் பீங்கான்கள் என்பவை சிறந்த முறையில் தூய்மையாக்கப்படாமையால் அவற்றில் ஈ, கொசுகள் மொய்ப்ப தாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் கைகழுவும் இடங்களில் நீர்தேங்கி நின்று துர்நாற்றம் வீசுவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

நகர்ப்புற உணவகங்களில் கவனமெடுக்கும் சுகாதார பகுதியினர் கிராமப்புறங்களில் ஏன் அக்கறை கொள்வதில்லையென மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

தற்போது மழை பெய்து வரும் நிலையில் ஈக்களின் பெருக்கம் அதிகமாகக் காணப்படுகிறது.

ஈ ஒருநோய்க்காவி. இவை சுகாதார சீர்கேடான இடங்களில் அமர்ந்து மீண்டும் அவை உணவுகளில் அமர்வதால் நோய் ஏற்பட வாய்ப்புள்ளது.

ஆதலால் கிராமப் புறங்களில் அமைக்கப்பட்டுள்ள தேநீர் சாலைகள் மற்றும் உணவகங்களுக்கு பொது சுகாதார பரிசோதகர் வருகை தந்து ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்க வேண்டும் என பொது மக்கள் கோருகின்றனர். (அ-2-263)

## வவுனியாவில் காணிக்கொள்ளை; தடுத்து நிறுத்த விரையுங்கள்

### ஐ.நாவிடம் ஆனந்தன் எம்.பி கோரிக்கை

(குருமன்காடு)

வவுனியா செட்டிகுளம் பிர தேச செயலாளர் பிரிவில், அமைச்சர் றிசாத் பதியுதீனின் பெயரை பயன்படுத்தி மன்சூர் என்பவர், குணரத்தினம் தங்கராசா என்பவருக்கு சொந்தமான பாவற்குளம் முதலாம் யுனிட்டில் உள்ள ஒரு ஏக்கர் காணிக்குள் அத்துமீறிப் புகுந்து, அந்த காணிக்குள் கடந்த 11.11.2014 அன்று கிணறு வெட்டியுள்ளதாகவும் காணிக்கான வேலி அடைக்கும் வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதாகவும் காணி உரிமையாளர் குணரத்தினம் தங்கராசா சிவசக்தி ஆனந்தன் எம்.பியிடம் முறையிட்டுள்ளார்.

1969 இல் காணி துப்புரவு செய்து, ஆறு தமிழ் குடும்பங்கள் இப்பகுதியில் வசித்து வந்த நிலையில், 1990ஆம் ஆண்டு கிராம மக்கள் அனைவரும் கிராமத்தை விட்டு வெளியேறி இந்தியாவுக்கு அகதிகளாக சென்றும் இடம்பெயர்ந்தும் இலங்கையின் ஏனைய பகுதிகளில் உறவினர்கள், நண்பர்களின் வீட்டிலும் வசித்து வந்தனர்.

இந்தியாவிலிருந்து நாட்டுக்குத் திரும்பி குணரத்தினம் தங்க ராசா, காணியை துப்புரவு செய்து மீளக் குடியேறும் நேரத்தில், அமைச்சர் றிசாத்தின் பெயரை பயன்படுத்தி மன்சூர் என்பவர் மேற்படி காணியை ஆக்கிரமித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அமைச்சர் றிசாத்துடன் தொடர்பு கொண்டபோதும் பேச முடியவில்லை. அமைச்சர் றிசாத் தலையிட்டு அத்துமீறி காணியை பிடித்துள்ள மன்சூரை வெளியேற்றி காணி உரிமையாளருக்கு காணியை வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். செட்டிகுளம் பிரதேச செயலாளரின் கவனத்துக்கும் முறைப்பாடு தொடர்பில் தெரியப்படுத்தியுள்ளார் ஆனந்தன் எம்.பி.

இதேவேளை, பாவற்குளம் முதலாம் யுனிட்டில் தமிழ் மக்களுக்கு சொந்தமான 125 ஏக்கர் காணியை 35 சிங்கள மக்களுக்கு வவுனியா அரச அதிபர் வழங்கியுள்ளார்.

இக்காணிகளுக்கு உரித்துடைய தமிழ் மக்கள் இன்னும் இந்தியாவிலிருந்து நாடு திரும்பாத நிலையில் அவர்களது காணிகள் பறிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான காணிக்கொள்ளைகளை உடன் தடுத்து நிறுத்த இந்திய அரசும் அகதிகளுக்கான ஐ.நாவின் அமைப்பும் விரைந்து செயற்பட வேண்டும் எனவும் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். (அ-2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தச் செயலையும் முட்டுக்கட்டை போட்டு தடுத்து விடாதீர்கள். நடக்க நடக்கத்தான் ஊர் வந்து சேரும். –ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நாங்கள் மௌனமாக இருப்பதே புத்திசாலித்தனம்

இலங்கைக்குள் சீனாவின் ஊடுருவல் வலுத்து வருவது தெரிந்த உண்மை. இந்திய தேசத்தின் அழுத்தம் ஏற்படுவதை தடுப்பதற்காக இலங்கை அரசு கையாளும் இராசதந்திரம் இது.

தமிழகம் இருக்கும் வரை இந்திய மத்திய அரசு இலங்கை இனப்பிரச்சினை குறித்து இடையிடையே இலங்கை அரசுடன் கதைத்துக்கொள்ளும்.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்துமாறு கோரும். இவை இலங்கை அரசுக்கு உள்ளுநரக் கடுப்பை ஏற்படுத்தும் என்பது சர்வநிச்சயம்.

இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியத் தலையீட்டை இலங்கை அரசுகள் ஒரு போதும் விரும்பவில்லை. முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ இந்தியாவின் தலையீட்டைக் கடுமையாக எதிர்த்தார். இந்தியத் தலையீட்டை நசுக்குவதற்காக விடுதலைப் புலிகளுடன் சவட்டுச் சேரவும் அவர் தயாராக இருந்தார்.

அதாவது இந்தியாவுடன் உறவை வைத்திருப்பதை விட, விடுதலைப்புலிகளுடன் ஒற்றுமையாக இருப்பது எவ்வளவோ மேல் என்பது பிரேமதாஸவின் அசைக்க முடியாத நம்பிக்கை.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன இந்தியாவின் தலையீட்டை விரும்பவில்லையாயினும் இந்தியா சொல்வதை கேட்காவிட்டால் தனது பிடரியில் அடி விழும் என்று அவர் பயந்தார்.

அவரின் பயத்தை ,அப்போது இந்திய மிராஜ் விமானங்கள் இலங்கை எல்லைக்குள் ஊடுருவி உணப்பொட்டலங்களை வடபகுதியில் போட்டு விட்டுப்போன சம்பவம்நியாயப்படுத்தியது. ஆக, ஜே.ஆர்.ஜெயவர்த்தன பயத்தின் நிமித்தம் இந்தியாவை எதிர்க்கவில்லை. பிரேமதாஸ புலிகளுடன் சேர்ந்து இந்தியாவை எதிர்த்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவின் உதவியுடன் விடுதலைப்புலிகளை தோற்கடித்துவிட்டு, இப்போது இந்தியாவின் அழுத்தத்திற்கு ஆப்பு வைக்க சீனாவுடன் உறவு கொண்டாடுகிறார். சீனாவின் உறவை இந்தியா ஒருபோதும் விரும்பமாட்டாது. விடுதலைப்புலிகளைத் தோற்கடிப்பதற்கு உதவிய சோனியாகாந்தியின் மத்திய அரசு, இலங்கை– சீனாவுடன் கொண்டுள்ள உறவை பெரிதுபடுத்தாமல் நடந்து கொண்டது.

இலங்கை அரசு தங்களை ஏமாற்றி விட்டது என்பதை சோனியாவின் மத்திய அரசு புரிந்து கொண்டதாயினும் அதுபற்றி இலங்கை அரசை அதட்ட நினைத்தால், தன்மானம் போய்விடும் என்ற அச்சமும்; சீனா இந்தியாவிற்குப் பகை. ஆனால் விடுதலைப்புலிகள் என் குடும்பத்திற்குப் பகை என்ற சோனியாவின் சுயநல சிந்தனையும்,

சீனாவுடனான உறவு குறித்து இலங்கையை எச்சரிக்கை செய்வதை சோனியாவின் அரசு தவிர்த்துக் கொண்டது. எனினும் மத்தியில் மோடியின் ஆட்சி ஆரம்பிக்க இலங்கை– சீனாவுடன் கொண்டுள்ள உறவை வெளிப்படையாக எதிர்க்க இந்திய மத்திய அரசு தயாராகிவிட்டது.

இந்திய மத்திய அரசைப் பொறுத்தவரை இனப்பிரச்சினை என்பது தமிழர்களோடு சம்பந்தப்பட்டது. ஆனால், சீனாவுடனான உறவென்பது முழு இந்திய தேசத்திற்கும் ஆபத்தானது. ஆகையால் சீனாவுடன் இலங்கை கொண்டுள்ள உறவின் காரணமாக இலங்கை – இந்திய உறவு நிச்சயம் பாதிக்கப்படும்.

இச்சந்தர்ப்பத்தில் சீனாவுடனான உறவை இலங்கை அரசு தவிர்க்க வேண்டுமென்று தமிழர்களாகிய நாம் கருத்துக் கூறக்கூடாது. ஏனெனில் அது இந்தியாவுடன் தொடர்புபட்டது. அதை இந்தியாதான் பார்த்துக் கொள்ள வேண்டும்.

விடுதலைப்புலிகளைத் தோற்கடிப்பதற்கு முன்னதாக, சீன உறவு பற்றி இந்தியா சிந்தித்திருந்தால் நாமும் கருத்துக்கூறியிருக்கலாம். ஆனால் நடந்தது வேறு. ஆகையால் இலங்கை – சீன உறவு விடயத்தில் சம்பந்தர் உள்ளிட்ட தமிழ்த் தலைவர்கள் மௌனமாக இருப்பதே புத்திசாலித்தனம். தலையிட வேண்டும் போலிருந்தால் இலங்கை அரசு, சீனாவிற்கு அதீத முன்னுரிமை கொடுக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திப்போம். அந்தப்பிரார்த்தனையாவது இந்தியாவிற்கு சுரணையை ஏற்படுத்துகிறதா? என்று பார்க்கலாம்.

# சட்டவிரோத மின் பாவனை வடமராட்சியில் அதிகரிப்பு!

யாழ்.வடமராட்சியில் சட்டவிரோத மின்சார பாவனை மீண்டும் அதிகரித்துள்ளதாக பருத்தித்துறை மின்சார சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அண்மைக்காலங்களில் சட்டவிரோ மின்பாவனையில் ஈடுபட்டவர்கள் மின்சார சபையினரால் இனங்காணப்பட்டு நீதிமன்றத்தால் தண்டனைக்குட்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில்அப்பிரதேசத்தில்உள்ளவர்களால் மீண்டும் சட்டவிரோத மின்சார பாவனை இடம்பெற்று வருகிறது.

கரவெட்டி, வல்வெட்டித்துறை போன்ற பகுதிகளில் உள்ளவர்கள் அண்மைக் காலமாக சட்டவிரோதமான முறையில் மின்சாரத்தினை பெற்று பாவனை செய்து வந்துள்ளார்கள்.

ஆனால் இது தொடர்பான தகவல்கள் பருத்தித்துறை மின்சார சபையினருக்கு கிடைத்தமைக்கு அமைய மின்சார சபையினர் நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்திருந்தனர்.

மின்சார சபையினரால் கொடுக்கப்பட்ட முறைப்பாடுகளுக்கமைய குறித்த பகுதிகளுக்குச் சென்ற நெல்லியடிப் பொலிஸார் அந்நபர்களை கைது செய்து நீதிமன்றங்களில் நிறுத்தி தண்டனைகளை பெற்றுக்கொடுத்தனர்.

இதன்படி நீண்டநாட்களாக மேற்படி பகுதிகளில் சட்டவிரோத மின்சார பாவனையால் எந்தவொரு நபரும் ஈடுபடவில்லை.

இவ்வாறான நிலையில் மீண்டும் இந்நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனால் அப் பிரதேசங்களில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதாக பொது மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

சட்ட விரோத மின்சார பாவனை இடம்பெறும் வேளையில் சீரான முறையில் மின்சாரத்தினை பெறும் மின்சார பாவனையாளர்கள் பல்வேறு இடர்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதனால் இவ்வாறான சட்டவிரோ செயல்களில் ஈடுபடும் நபர்களுக்கும் சீரான முறையில் மின்சாரத்தை பாவிக்கும் மின்சார பாவனையாளர்களுக்கும் உயிர் ஆபத்துகள் ஏற்படும் என மின்சார சபையினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.


எனவே இவ்வாறான சட்டவிரோத மின்சார பாவனையில் எந்தவொரு நபரும் ஈடுபட வேண்டாம் என மின்சார சபை வட்டாரங்கள் பொதுமக்களுக்கு எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளதுடன் இதனை மீறுவோர் குற்றவாளியாக கருதப்படுவர் எனவும் கடும் தண்டனைக்கு உட்படுத்தப்படுவர் எனவும் மின்சார சபையினர் மேலும் எச்சரிக்கை விடுத் துள்ளனர். (இ-7-10)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2014

“காடும் நம் தாய். தாயிடத்தில் பால் குடிக்கலாமே தவிர, நாம் அவளின் இரத்தத்தையே உறிஞ்சிவிடக்கூடாது”

–தமிழகக் கவிஞர் அறிவுமதி

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை



### நல்லூரான் திருவடி

தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எமக்காமெடி – கிளியே!
கவலையெல்லாம் போகுமெடி.
எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கர்த்தன் திருவடிகள் – கிளியே!
காவல் அறிந்திடெடி.

# “பலருக்கும் பல மடங்காகப் பயன்தரும் வகையில் எம் திறமைகளுக்கு செயல்வடிவம் கொடுப்போம்”

மத்தேயுவின் நற்செய்தியாக, 25: 14-30 வரையில் காணப்படும் தாலந்து (Talent- திறமை) உவமைக் கதை பறறிய பைபிள் பகுதியே நமக்கான இன்றைய சிந்தனைக்கு தரப்படுகின்றது.

இயேசு இந்த உவமையில் குறிப்பிடும் ஒரு தாலந்து வெள்ளி என்பது இங்கிலாந்து பணத்திலே பத்தாயிரத்துக்கு இணையானதாகும். எனவே பெரியதொரு தொகையே எஜமானால் இங்கு வழங்கப்பட்டுள்ளது. உவமைக் கதைப்படி மூவரிடம் தாலந்துகள் கொடுக்கப்படுகின்றன. ஒருவருக்கு ஐந்து, மற்றொருவருக்கு இரண்டு மூன்றாம் ஆளுக்கு ஒன்று என்று அவரவர் திறமைகளுக்கு ஏற்ப பிரித்துத் தரப்படுகின்றன.

### பரமபிதா காட்டிய பாதை

தாலந்தைப் பெற்றவர்கள் கணக்கு கொடுக்க வரும்போது, அவர்கள் சொல்லும் கூற்றுகள் நம் சிந்தனையைத் தூண்டுகின்றன. ஐந்து தாலந்துகளையும், இரண்டு தாலந்துகளையும் பெற்றவர்கள் தங்களுக்குத் தரப்பட்ட கொடைகளைப் பற்றிப் பேசுகின்றனர். அக்கொடைகளைப் பலுகச் செய்ததால் தங்களுக்கு உண்டான மகிழ்வைக் கூறுகின்றனர். ஒரு தாலந்தைப் பெற்றவரோ, தனக்கு அளிக்கப்பட்ட கொடையைப் பற்றி பேசவில்லை. மாறாக, அந்தக் கொடையைத் தந்தவரைப் பற்றி குறை கூறுகிறார்: ‘ஐயா, நீர் கடின உள்ளத்தினர் நீர் விதைக்காத இடத்திலும் போய் அறுவடை செய்பவர் நீர் தூவாத இடத்திலும் விளைச்சலைச் சேகரிப்பவர் என்பதை அறிவேன். உமக்கு அஞ்சியதால் நான் போய் உம்முடைய தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன். இதோ, பாரும், உம்முடையது. “ வாழ்வில் நாம் பெற்றுள்ள பல கொடைகளை மறந்து விட்டு, அல்லது, மறுத்துவிட்டு, கடவுளை எத்தனை முறை குறை கூறியிருக்கிறோம்? என நம்மிடம் நாமே கேட்டுப் பார்ப்போம்.

மேலோட்டமாகப் பார்த்தால் இன்றைய பைபிள் பகுதியின் இறுதியில் வரும் வரிகளான ‘அந்தத் தாலந்தை அவனிடமிருந்து எடுத்துப் பத்துத் தாலந்து உடையவரிடம் கொடுங்கள். ஏனெனில் உள்ளவர் எவருக்கும் கொடுக்கப்படும். அவர்கள் நிறைவாகப் பெறுவர். இல்லாதோரிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படும்" என்ற கூற்றானது நற்செய்தியில் நாம் தவறாக விளங்கிக் கொள்ளக் கூடிய ஒன்று என்றே சொல்லலாம். சமூகநீதி என்ற கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், உள்ளவர்களிடமிருந்து செல்வங்களைப் பறித்து, இல்லாதவர்களுக்கு கொடுக்க வேண்டும். ஆனால், நற்செய்தியின் இக்கூற்று உள்ளவர் இல்லாதோருக்கு இடையே உள்ள இந்த அநீதியை இன்னும் அதிகரிப்பதைப் போல் ஒலிக்கிறது. இயேசுவின் இந்த உவமை சமூக நீதியை நிலைநாட்ட சொல்லப்பட்ட உவமை அல்ல. சமூகநீதி பற்றி இயேசு வேறு பல இடங்களில் உவமைகளும், பாடங்களும் தந்துள்ளார்.

இந்த உவமையில் இயேசு நமக்குக் கூற விளையும் ஒரே பாடம் நாமே ஒவ்வொருவருக்கும் தரப்பட்டுள்ள கொடைகளை எவ்விதம் பயன்படுத்துகிறோம் என்பதற்கு நாமே முழு பொறுப்பையும் ஏற்க வேண்டும், வேறு சாக்கு போக்குகள் சொல்லக் கூடாது என்பதே. இந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும் போது உவமையின் இறுதி வரிகள் எமக்கு சொல்லித்தந்த விளக்கம்: கொடைகளில் கவனம் செலுத்தி, அவைகளில் மகிழ்வும், நிறைவும் அடைவோர் அந்தக் கொடைகளைப் பலுகிப் பெருகச் செய்து மேலும் மேலும் நிறைவடைவர். இதைத்தான் ‘உள்ளவர் எவருக்கும் கொடுக்கப்படும்" என்ற இந்த வார்த்தைகள் சொல்கிறது. மனித வாழ்வே ஒரு பெரும் கொடை. அந்தக் கொடையை



சரவரயன்படுத்துவதே தெய்வீகத்தை வெளிபபடுத்தும் என்ற பொருளில் புனித Irenaeus கூறியுள்ள வாரத்தைகள் இவை: ‘மனிதப் பிறவியொன்று முழுமையாக வாழ்வதே இறைவனின் மாட்சி.” இதற்கு எதிர் துருவமாக இருப்பவர்கள் தங்கள் கொடைகளைப் பற்றி சிந்திககாமல் தங்கள் குறைகளைப் பெரிதுபடுத்துபவர்கள் அந்தக்குறைகளை இறைவனே தந்தார் என்று குற்றம் சாட்டுபவர்கள். நிறைகளை மறந்துவிட்டு, குறைகளிலேயே கவனம் அனைத்தையும் செலவிடுவதால், இவர்களது நிறைவுகளும கொடைகளும் புதையுண்டு போகின்றன. இதைத்தான், ‘இல்லாதோரிடமிருந்து அவரிடமுள்ளதும் எடுக்கப்படும்" என்று கூறப்பட்டுள்ளது.

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

தாலந்து உவமையில் சவால்கள் நிறைந்த பகுதிகள் இருந்தாலும், நமக்குப் பாடமாக அமையும் பகுதி களில் நாம் கவனம் செலுத்துவோம். பாகுபாடுகளும், ஏற்றத்தாழ்வுகளும் நிறைந்த இந்த மனித சமுதாயத்தில் நாம் ஒவ்வொருவரும் தனித் திறமை உடையவர்கள். நமது குறைகளையும் திறமைகளாக மாற்றும் வழிகள் உண்டு. நம் திறமைகள், கொடைகளில் நம் கவனத்தைத் திருப்பி, அவைகளைப் புதைத்து விடாமல், பலருக்கும் பல மடங்காகப் பயன்தரும் வகையில் நம் திறமைகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கவே நாம் அழைக்கப்பட்டுள்ளோம். பயன்படுத்தாமல், புதைத்து விடும நம் கொடைகளுக்கு நாம் வாழ்வின் இறுதியில் கணக்கு கொடுக்க வேண்டியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திக்கம் இளைஞர் வி.கழகத்தின் உதைபந்தாட்ட இறுதிப் போட்டி

## நவஜீவன்ஸ் –கொலின்ஸ் பலப்பரீட்சை





பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்திய அணிக்கு 11 பேர் கொண்ட உதை பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு திக்கம் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதிப் போட்டியில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

காட்சிப் போட்டியாக றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விண்மீன் விளையாட்டுக் கழகம் போட்டியிடவுள்ளது. (க-60)

## உலக கிண்ண தூதுவராக சங்கக்கார நியமனம்



2015 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி தூதுவர்களில் ஒருவராக இலங்கையின் சங்கக்காரவை சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டிகள் அடுத்த வருடம் அவுஸ்திரேலியா- நியூசிலாந்தில் நடக்க இருக்கிறது. இதனைப் பிரபல்யப்படுத்தும் நோக்கில் சர்வதேச கிரிக்கெட் சபையான ஐ.சி.சி.தூதுவர்களை நியமித்துள்ளது.

இதில் இலங்கை அணியின் முன்னணி நட்சத்திர ஆட்டக்காரர் குமார் சங்கக்காரவும் இம்பெற்றுள்ளார். இவர் தவிர இந்தியாவின் விராட் கோலி, அவுஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர் மிற்சல் ஜோன்சன், நியூசிலாந்து அணித்தலைவர் பிரண்டன் மக்கலம், அவுஸ்திரேலியாவின் ஷேன் வற்சன் ஆகியோரும் தெரிவாகினர். (க)

## ஆளுநர் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டிகள்





வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் ஆளுநர் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. இப் போட்டிகளில் வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட 24 அணிகள் பங்குபற்றுகின்றன. நடைபெற்ற காலிறுதியில் வெற்றிபெற்ற அணிகள் அரையிறுதிச் சுற்றில் மோதின.

இதில் வெற்றிபெற்று வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும் வதிரி டயமன்ட்ஸ் விளையாட்டுக்கழகமும் இறுதிப் போட்டியில் மோத தகுதி பெற்றுள்ளன. முன்னதாக இடம்பெற்ற காலிறுதிப் போடிகளின்படி வதிரி பொம்மர்ஸ் அணியும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் முதலாவது அரையிறுதிப் போட்டியில் மோதின.

ஆரம்பம் முதலே இரு அணிகளும் எதிரணிகளின் கோல் பரப்பை ஆக்கிரமித்தன. எனினும் பின்கள வீரர்களின் சாதுரியத்தால் இரு அணிகளினது கோல் போடும வாயப்புக்கள் தடுக்கப்பட்டன. இதனால் போட்டி நேரம் நிறைவடைகையில் 0:0 என போட்டி சமநிலையிலிருந்தது.

சமநிலை உடைப்பு தண்ட உதை வழங்கப்பட்டபோது அதனை சாதகமாக்கிய வதிரி பொம்மர்ஸ் அணி 3:1 என்னும் கோல் கணக்கில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை வென்று இறுதிக்கு தகுதி பெற்றது.

மற்றைய அரையிறுதியில் வதிரி டயமன்ட்ஸ் அணியும் நவிண்டில் கலைமதி அணிகள் மோதின. இதில் ஆரம்பம் முதலே வதிரி டயமன்ட்ஸ் அணி எதிரணியின் கோல்பரப்பை ஆக்கிரமித்த வண்ணமிருந்தது. இதன் காரணமாக போட்டியில் 38ஆவது நிமிடத்தில் வதிரி டயமன்ட்ஸ் அணியின் வீரன் பிரேம்குமார் கிடைத்த சந்தர்ப்பத்தை சாதகமாக்கி கோலொன்றினைப் பெற்றார். தொடர்ந்து இரு அணிகளும் கோல் போட முயற்சித்தும் கோல்களெதனையும் பெற முடியவில்லை.

இதனால் போட்டியில் 1:0 என்னும் கோல் கணக்கில் வதிரி டயமன்ட்ஸ் அணி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றுள்ளது . (க-23)

## இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து சென்னை-கொல்கத்தா ஆட்டம் சமநிலை



இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து போட்டியில் சென்னையின் எப்.சி.- அட்லெடிகோ டீ கொல்கத்தா அணிகளுக்கு இடையிலான ஆட்டம் கோல் எதுவுமின்றி சமநிலையில் முடிந்தது.

இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து போட்டி (ஐ.எஸ்.எல்.) இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. 8 அணிகள் பங்கேற்றுள்ள இந்த போட்டியில் ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் உள்ளூர் மற்றும். வெளியூர் அடிப்படையில் இரண்டு முறை மோத வேண்டும். புள்ளிகள் அடிப்படையில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரை இறுதிக்கு தகுதி பெறும்.

இந்த நிலையில் கொல்கத்தாவில் நேற்று முன்தினம் இரவு நடந்த 31 ஆவது லீக் ஆட்டத்தில் சென்னையின் எப்.சி.-அட்லெடிகோ டீ கொல்கத்தா அணிகள் மோதின.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் தாக்குதல் ஆட்டத்தில் அதிக கவனம் செலுத்தின. 21ஆவது நிமிடத்தில் கொலகத்தா அணியின் நட்சத்திர வீரர் பிக்ரு பந்தை கோல் கம்பத்துக்கு வெளியே அடித்து அருமையான வாய்ப்பை நழுவவிட்டார். இதேபோல் அதிக கோல் அடித்துள்ள சென்னை அணியின் நட்சத்திர வீரர் இலனோவின் கோல் அடிக்கும் முயற்சியை எதிரணி தடுப்பு ஆட்டக்காரர்கள் தகர்த்தனர்.

37ஆவது நிமிடத்தில் மைதானத்தின் ஒரு பகுதியில் உள்ள மின் விளக்குகளின் வெளிச்சம் குறைந்தது. இதனால் ஆட்டம் 11 நிமிடம் தடைப்பட்டு மீண்டும் தொடங்கியது. முதல் பாதியில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை. முரட்டு ஆட்டம் காரணமாக சென்னை அணி வீரர்கள் டான் பெரீரா, பல்வந்த் சிங் மற்றும் கொல்கத்தா அணி வீரர் பல்ஜித் சாக்னி ஆகியோர் நடுவரால் மஞ்சள் அட்டை காட்டி எச்சரிக்கப்பட்டனர்.

பின்பாதி ஆட்டத்திலும் இரு அணிகளும் கோல் அடிக்க பகீரத முயற்சி மேற்கொண்டன. ஆனால் கடைசி வரை அது பலிக்கவில்லை. முடிவில் ஆட்டம் கோல் எதுவுமின்றி சமநிலையில் முடிந்தது. 8ஆவது லீக்கில் ஆடிய சென்னை அணி 3 வெற்றி, 4 சமநிலை, ஒரு தோல்வி என்று 13 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் உள்ளது. கொல்கத்தா அணி அதே 13 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறது. (க)

## சீன ஓபன் பட்மின்டன் இறுதிப் போட்டியில் சாய்னா




சீன ஓபன் பட்மின்டன் தொடரின் பைனலுக்கு இந்தியாவின் சாய்னா நேவால் முன்னேறினார்.

சீனாவில் உள்ள புஜோவு நகரில் சீன ஓபன் சுப்பர் சீரிஸ் பிரிமியர் பட்மின்டன் தொடர் நடக்கிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் இந்தியாவின் சாய்னா நேவால் சீனாவின் லியு சென்னை எதிர்கொண்டார். முதல் செட்டை 21:17 என கைப்பற்றிய சாய்னா இரண்டாவது செட்டையும் 21:17 என வென்றார். முடிவில் சாய்னா 21:17, 21:17 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று பைனலுக்குள் நுழைந்தார். ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் காஷ்யப் 21:18, 13:21, 13:21 என ஜேர்மனியின் மார்க் வெய்ப்பரிடம் வீழ்ந்தார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய மீன...

களை விடுவிக்கக்கோரி கடந்த மாதம் 30ஆம் திகதி முதல் நடந்த போராட்டங்களுக்கு ஆதரவு கொடுத்து போராட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து கட்சியினர், அனைத்து தரப்பினருக்கும் மீனவர்களை மீட்டுத்தரக்கோரி தமிழகம் முழுவதும் போராட்டம் நடத்திய அனைத்து அமைப்புகளுக்கும், வழக்குரைஞர்கள், வர்த்தக சங்கங்கள், ஊடகங்கள், வாழும் கலை நிறுவுனர் ரவி சங்கர் ஜிக்கும் நன்றி தெரிவிக்கிறோம்.

தொடர்ந்து போராடிவரும் நிலையில், மத்திய, மாநில அரசுகள் மீனவர்களை மீட்கும் நடவடிக்கையில் நம்பிக்கை ஏற்பட்டதாலும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை கருத்திற் கொண்டும் காலவரையற்ற வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்று 15ஆம் திகதி மீன் பிடிக்கச் செல்வது என முடிவு செய்யப்படுகிறது.

இலங்கையில் உள்ள 82 படகுகளையும் 24 மீனவர்களையும் விரைவில் விடுவிக்க மத்திய-மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதில் காலதாமதமானால் மீண்டும் ஆலோசனை நடத்தி போராட்டம் அறிவிக்கப்படும். இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் மீனவ சங்கத் தலைவர்கள் போஸ், ஜேசுராஜா, சகாயம், எமரிட், தட்சிணாமூர்த்தி உட்பட மீனவர்கள் பலர் கலந்து கொண்டனர். (எ-11)

## புலிகளுக்கு...

வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

விடுதலைப் புலிகளை தோற்கடிக்க முடியாது என எரிக் சொல்ஹெய்ம் அரசாங்கத்திடம் தெரிவித்திருந்தார், எனினும் இது பிழையான கருத்து என்பதை அரசாங்கத்தால் நிரூபிக்க முடிந்தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தொடர்பாக ஐ.நா விசாரணை குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்க தயார் என சொல்ஹெய்ம் குறிப்பிட்டுள்ளார் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (எ-11)

## இந்.பாதுகா...

ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 1ஆம், 2ஆம் திகதிகளில் இலங்கை கடற்படையின் ஏற்பாட்டில் காலியில் இடம்பெறவுள்ள காலி கலந்துரையாடல் என்ற கடல்சார் பாதுகாப்பு மாநாட்டில் அவர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்று முன்தினம் சந்தித்த இந்தியத் தூதுவர் வைகே. சின்ஹா இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலின் கொழும்பு வருகை தொடர்பாக உறுதிப்படுத்தியுள்ளதாக பீரிஸ் மேலும் தெரிவித்தார். (எ-11)

## தேர்தல் தோல்...

முன்னர் இருந்தே அது தொடர்பான பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்கும். எனினும் இந்த மாநாடு திடீரென்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாநாடு தொடர்பான சுவரொட்டிகள் பாதுகாப்புத் தரப்பினர் மூலம் இன்று காலை தொடக்கம் நாட்டின் முக்கிய நகரங்கள் தோறும் ஒட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொது பல சேனா அமைப்பின் உறுப்பினர்கள் மிகக் குறைவாக இருந்த போதிலும் அதன் இளைஞர்கள் பிரிவு சமூக வலைத்தளங்கள் ஊடாக பெரும் பிரசாரத்தை முன்னெடுத்திருந்தது.

அதன் காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் பொது பல சேனா அமைப்பின் கொள்கைகள் இலகுவாக எடுத்துச் செல்லப்பட்டிருந்தன.

இந்த உத்தியை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பயன்படுத்திக் கொள்ள ஜனாதிபதி தரப்பு தீர்மானித்துள்ளது. இதற்காக நில் பலகாயவின் இளைஞர்களுக்கு பொது பல சேனாவின் பிரசார உத்திகள் கற்றுக் கொடுக்கப்படவுள்ளது. இது தொடர்பாக இன்று நடைபெறவுள்ள இளைஞர் மாநாட்டில் விளக்கமளிக்கப்படவுள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.

இதன் பின்னர் எதிர்வரும் நாட்களில் சமூக வலைத்தளங்கள் ஊடாக ஜனாதிபதிக்கு ஆதரவாகவும், எதிர்க்கட்சிகளின் தொடர்பில் புலிகளுடன் தொடர்புடையவர்கள், நாட்டை காட்டிக் கொடுத்தவர்கள் என்ற ரீதியிலும் சமூக வலைத்தளங்கள் ஊடான பிரசாரம் பரந்தளவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

எனினும் பொது பல சேனாவின் சுயரூபம் அறிந்த பின்னர் ஏராளமான இளைஞர்கள் அந்த அமைப்பை விட்டு விலகத் தொடங்கியுள்ளனர். அதன்காரணமாக ஜனாதிபதி தரப்பு எதிர்பார்க்கும் பலன் கிடைக்குமா என்பது சந்தேகமே என்று சிங்கள ஊடகங்கள் கருத்து வெளியிட்டுள்ளன. (எ-11)

## சாட்சி வழ...

அறிவித்துள்ளது.

ஐ.நா மனிதவுரிமை ஆணையாளர் பணியகத்தின் விசாரணைக் குழுவுக்கு எழுத்து மூலம் சாட்சியங்களை சமர்ப்பிப்பதற்கான கால எல்லை கடந்த ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதியுடன் முடிவடையும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆயினும், இந்தக் கால எல்லை முடிவுக்கு வந்தாலும், சூழ்நிலை கருதி தாமதமாக வரும் சாட்சியங்களை ஐ.நா விசாரணைக் குழு ஏற்றுக்கொள்ளும் என்று ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் பேச்சாளர் ருபேர்ட் கொல்வில் தெரிவித்திருந்தார்.

இதற்கு அரசாங்கத்தின் தரப்பில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருந்தது. நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உரையாற்றிய இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், ஐ.நா விசாரணைக்குழு பின்கதவு வழியாக சாட்சியங்களைப் பெற முனைவதாக குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்நிலையில், ஐ.நா மனிதவுரிமை ஆணையாளர் பணியகத்தின் இணையத் தளத்தில், சாட்சியங்களைச் சமர்ப்பிப்பதற்கான கால எல்லை முடிவுக்கு வந்துள்ளதாகவும், இனிமேல் சாட்சியங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## எதிர்க்கட்சி...

ஆகிய கட்சிகள் இதுவரை இணையவில்லை.

இதனிடையில், ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கின்ற ஜாதிக ஹெல உறுமய எதிர்வரும் 19 ஆம் திகதி அரசாங்கத்திலிருந்து வெளியேறி எதிரணியுடன் இணைந்து கொள்ளும் என எதிர்பார்க்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-11)

# மக்களின் காணிகளை இராணுவம் எடுக்கக் கூடாது

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இராணுவத்தை இருக்க வேண்டாம் என்று நாம் கூறவில்லை. பாதுகாப்புக்காக அவர்கள் இருக்க வேண்டும். ஆனால் மக்களுடைய காணிகளை இராணுவத்தினர் அபகரிக்கக்கூடாது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

தேசத்தின் மகுடம் செயல் திட்டத்தின் கீழ் தேசிய மர நடுகைத் திட்டம் நேற்று சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்துக்கு அண்மையாகவுள்ள கீரிமலை தச்சன்காடு பகுதியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ். மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவையும் அவசியமும் காணப்படுகின்றன. இதற்கான திட்டம் இந்த வருடத்துக்குள் நடைமுறைப்படுத்தப்படும்.

இதற்கான நிதியுதவியும் கிடைக்கப்பெற்றுள்ளது. மக்கள் தமது சொந்த இடங்களில் குடியிருத்தல், மீளக்குடியேறுதல் சம்பந்தமாக நாம் ஜனாதிபதியை சந்திக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் வலியுறுத்தி வருகின்றோம்.

ஏற்கெனவே படிப்படியாக மக்கள் மீள் குடியேற்றப்பட்டுள்ளனர். இதேபோன்று ஏனைய இடங்களிலும் மக்களை குடியேற்றுவது சம்பந்தமாக நாம் அரசுடனும் ஜனாதிபதியுடனும் தொடர்ந்து கலந்துரையாடி வருகின்றோம். விரைவில் மீதிப்பேரையும் மீள்குடியமர்த்த அரசு அனுமதியளிக்கும் என்றார். (எ-11)

## முதலமைச்சர்...

தெரியுமா?

விக்னேஸ்வரன் இந்தியாவுக்கு வந்திருந்த போது இந்திய மக்கள் செய்யும் நடவடிக்கைகள் காரணமாக தங்களுக்கு நெருக்கடி வந்துள்ளதாக தெரிவித்திருக்கும் கருத்து வேதனை அளிக்கின்றது.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக 60 வருடங்களாக போராட்டம் நடந்து வருகின்றது. இதில் எதிலாவது இவருக்கு பங்கு உண்டா? உதாரணமாக சொல்லப் போனால அரசியல் போராட்டமாக இருக்கட்டும் இல்லை, ஆயுதப் போராட்டமாக இருக் கட்டும். அப்போது எங்கே போய் இருந்தார் விக்னேஸ்வரன்?

இறுதிக் கட்டப் போரில் கூட எந்தவிதமான நன்மைகளும் தமிழ் மக்களுக்கு செய்யவில்லை. ஒரு கடிதம் கூட வெளிநாடுகளுக்கு இவர் எழுதவில்லை. இவருக்கு எப்படி தெரியும் போராட்டம் என்றால் என்ன என்று?

ஐயாவிற்கு தெரிந்தது கோவில் வாசலும், நீதிமன்ற வாசலும்தான் வேறு ஒன்றும் இவருக்கு தெரியாது.

இதில் உண்மை என்னவென்றால் இலங்கையில் தனது மண்ணுக்காக போராடிய போராளிகளுக்கு அதிகபட்ச தண்டனை கொடுத்தது, ஐயா மட்டும்தான். அதுபோன்று அதிக பேரை சிறையில் தள்ளியதும் ஐயா தான் என தெரிவித்துள்ளார். (எ-11).


சாமியே சரணம் ஐயப்பா





வடமராட்சி துன்னையூர் கோவிற் கடவை

திருவருள்மிகு ஹரிஹரபுத்திர தர்ம சாஸ்தா ஆலய

ஜய வருட மகர ஜோதிப் பெருவிழா

கார்த்திகை மாதம் 1ம் திகதி (17.11.2014) முதல் தை மாதம் 1ம் திகதி (15.01.2015) வரை தினமும் காலை 5 மணிக்கு கணபதிஹோமம் ஐயப்ப சுவாமி ஹோமமும் மாலை 5 மணிமுதல் 8 மணிவரை தர்மசாஸ்தாசுவாமிக்கு அபிஷேகம், பூசை 18ம் படி விஷேடபூசை, ஐயப்பன் பஜனை என்பன இடம்பெறும்.

கணபதி ஹோமம் உபயம் - திரு. தங்கராஜா குடும்பம் [முன்னைநாள் கல்விப் பணிப்பாளர் கோவிற்கடவை]

திரு. துவராசா குடும்பம் [கோவிற்கடவை]

ஐயப்ப சுவாமி படிப்பூசைகள் யாவும் பல தடவைகள் சபரிமலை யாத்திரை சென்று வந்த

குருசாமி சேவாரத்னா வித்வான் சாஸ்தாதாசன்

சிவஸ்ரீ நாகரட்ண கலாதர சிவாச்சாரியார் BA (Hons) MA JP அவர்கள் தலைமையில் நடைபெறும்.

அனைவரும் வருக தர்மசாஸ்தா அருள்பெறுக

குறிப்பு - 60 நாட்களும் உபயகாரர் தேவையாக உள்ளது உபயம் செய்யவிரும்புபவர்கள் ஆலய தர்மகர்த்தாவுடன் தொடர்பு கொள்ளவும்.

**சபரிமலை யாத்திரை செல்ல விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்**

T.P 077 9690990
021-2056333

இங்ஙனம்
ஆதின கர்த்தா நா.கலாதர சிவாச்சாரியார்
[illegible]

(சி-9101)


## இன்றைய போட்டி

இந்திய-இலங்கை கிரிக்கெட் அணிகள் மோதும் 5-வது கடைசி ஒருநாள் போட்டி ராஞ்சியில் இன்று நடைபெறவிருக்கிறது.

இதுவரை நடந்த 4 ஆட்டத்திலும் இந்திய அணி வெற்றி பெற்று 4-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இன்று நடைபெறும் கடைசி ஆட்டத்திலும் இந்தியா வெற்றி பெற்று இலங்கையை துவசம் செய்யுமா என்று ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

**இரு அணி வீரர்கள் விவரம்:**

இந்தியா: விராட் கோலி (அணித்தலைவர்), ரோகித்சர்மா, ரகானே, அம்பதி ராயுடு, ரெய்னா, ரொபின் உத்தப்பா, அஸ்வின், அக்ஷர் பட்டேல், ஸ்டுவர்ட் பின்னி, குல்கர்னி, உமேஷ் யாதவ், வினய்குமார், கரண்சர்மா, கேதர் யாதவ்.

இலங்கை: மத்யூஸ் (அணித்தலைவர்), டில்சான், சண்டிமால், ஜெயவர்தன, திரிமானே, திசர பெரேரா, குலசேகர, மெண்டீஸ், குஷால் பெரேரா, பிரசன்னா, பிரியஞ்சன், காமகே, எரங்கா, சதுரங்க டி சில்வா, நிரோஷன். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்க்கட்சி...

தவிசாளர் மலிக் சமரவிக்கிரம தலைமையிலான பல முக்கியஸ்தர்கள் சந்திரிகா பண்டாரநாயக்கவுடன் பேச்சுக்களை நடத்தியிருந்த போதிலும், எதுவித உறுதிப்பாட்டையும் அவர வெளியிடவில்லை என அறியமுடிகின்றது.

அதேவேளை, பொதுவேட்பாளர் தெரிவு இறுதிக் கட்டத்தை அடைந்துள்ள நிலையில், அது குறித்த புரிந்துணர்வு உடன்படிக்கை நாளை திங்கட்கிழமை கொழும்பில் எதிர்க் கட்சிகளால் கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் ஜனவரி மாத முதற்பகுதியில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், இத்தேர்தலில் எதிரணியின் பொதுவேட்பாளர் வெற்றி பெறும் பட்சத்தில் தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கும், அதில் ஆளும் கட்சியிலிருந்து 15 பேரும் எதிர்க்கட்சியிலிருந்து 5 பேரும் அமைச்சர்களாக நியமிக்கப்படவும் இணக்கம் காணப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இந்த பொது எதிரணியில் ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி

23ஆம் பக்கம் பார்க்க....


## வீடு வாடகைக்கு உண்டு

மருதனார்மடம் உரும்பிராய் வீதியில் யாழ்.பல்கலைக்கழக நுண்கலை பீடத்திற்கு முன்பாக ஓரளவு வசதியுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-0773450644 (8343)

## எடிசன் அக்கடமி

27வது ஆண்டு நிறைவுப் பரிசளிப்பு விழா அழைப்பு-2014

காலம்:16.11.2014 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00
இடம்:சரஸ்வதி மண்டபம் (ராஜா கிறீம் ஹவுஸ்)
இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

**பிரதம விருந்தினர்**
பேராசிரியர் தி.வேல்நம்பி
பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள், வணிகபீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**பரிசில் வழங்கல்**
திருமதி சஜிதா வேல்நம்பி B.A

**சிறப்பு விருந்தினர்**
Dr.R.கஜானனன் (பழைய மாணவர், எடிசன் அக்கடமி)
யாழ்.போதனா வைத்தியசாலை

**தலைமை**
திரு.B.P.பாஸ்கரன் (நிர்வாகி)
எடிசன் அக்கடமி சமூகம்
(யாழ்ப்பாணம், கலட்டி, நல்லூர், கொக்குவில், சுன்னாகம்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் (சி-9096)

## கஜமுகன் டென்ரல் கிளினிக்

ம.ம. வீதி, நெல்லியடி.
தொடர்பு: 0213203772, 0212262888



Dr.A.செந்தில்குமரன் அவர்களினால் வாய்/பல் சம்பந்தமான எல்லா பிரச்சினைகளுக்கும் அதிநவீன முறையினால் சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

நிரந்தரமாக பல் கட்டுதலும்
நிரந்தரமாக கிளிப் போடுதலும்
நடைபெறும்



(C-9083) - நிர்வாகம்

கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலையின்
அதிபர்
உயர்திரு. சி. திரவியம்
அவர்களின்
தன்னலமற்ற சேவைக்கு மதிப்பளித்துக்
கௌரவிக்கும் வண்ணம் பாடசாலைச்
சமூகத்தினர் ஒன்றிணைந்தெடுக்கும்

## 60 மணிவிழா

காலம் : 17.11.2014 திங்கட்கிழமை மு.ப. 10.00 மணி
இடம் : பாடசாலைப் பிரதான மண்டபம்



பாடசாலையின் பழைய மாணவர்கள்,
பெற்றோர், நலன்விரும்பிகள்
அனைவரையும்
இந்நிகழ்வில் கலந்து கொண்டு
சிறப்பிக்குமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம். (சி-9094)

## மீசாலையில் காணி விற்பனைக்கு உண்டு

4 பரப்பு காணி மீசாலையில் உடனடியாக விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பிரித்து தரப்படும்.

தொடர்புகளுக்கு 0775796516, 0774561356 (சி-9108)

## CIMA-UK, ENGINEERING,BIT

**புலமைப்பரிசிலிற்கான விண்ணப்பங்கள்**

கோரப்பட்டுள்ளன. தொழில் தேடுவோர். பாடசாலைக்கல்வியை நிறைவு செய்தோர். பல்கலைக்கழக மாணவர்கள் பதவி உயர்வுக்கு விண்ணப்பிப்போர் வெளிநாடுகளில் தொழில் தேடுவோர் ஆகியோருக்கு ஏற்றது. கற்கைநெறி முடிவில் அரசவேலையிலும்.வங்கிகளிலும் மென்பொருள் நிறுவனங்களிலும் அதிக சம்பளத்துடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்வாங்கப்படுவர். ஆகக் குறைந்த கல்வித் தகைமை க.பொ.த சா.த சித்தி. விண்ணப்ப முடிவு திகதி 19 நவம்பர். புலமைப்பரிசிலிற்கும் மேலதிக விபரங்களிற்கும் உங்கள் பெயர்.கற்கைநெறி என்பவற்றை **772 395 895** ற்கு **sms** செய்யவும். பதிவுக்கட்டணம், வருடாந்தக்கட்டணம், கற்கைநெறிக் கட்டணம், பரீட்சைக்கட்டணம் என்பன புலமைப்பரிசிலாக வழங்கப்படவுள்ளன. மேலதிக விபரங்களை யாழ்ப்பாணபல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள **MCS** நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம். (சி-9092)

## தேவை

போட்டோக் கொப்பி தெரிந்த அல்லது பயிற்சி பெற விரும்பும் பெண் பிள்ளை தேவை.

(யாழ்.மாநகர சபைக்குட்பட்டது) (8345)

**தொடர்பு:0771771729**

## தேவை

வியாபாரநிலையத்திற்கு அனுபவம் உள்ள பெண் பிள்ளையும், அலுவலகம் ஒன்றிற்கு கணக்கு வேலை தெரிந்த பெண் பிள்ளையும் தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:0776237956

(யாழ்.நகரை அண்மித்தவர் விரும்பத்தக்கது) (8344)

## After O/L, A/L...

கணனி வல்லுநராவதற்கு
இன்றே எம்முடன் இணையுங்கள்

**Diploma Courses**
* Hardware + Basic Networking
* Advanced Networking

**Advanced Certifications**

Microsoft Certifications
* MCSA : Windows Server 2012
* MCSA : Windows 8
* MCSE : Desktop Infrastructure
* MCSE : Server Infrastructure (2012)

Cisco Certifications
* CCNA
* CCNP

Linux Administration
PHP, MySQL

*** Unlimited Practical Hours

Next Batch Starts On 1st Dec.

WinSYS NETWORKS

Network Security Training Provider in Jaffna

iCS International Academy
77,மணிக்கூட்டு கோபுர வீதி,
(பெருமாள்கோவில் அருகில்)
யாழ்ப்பாணம்.
Tel: 021 7306000 , 076 7013060 (சி-9093)

* மலேசியாவில் படிக்க பகுதிநேரமாக 60,000/- வரை உழைக்க O/L மட்டும் போதும்.
* சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, இத்தாலி, ஜேர்மனி உட்பட 26 நாடுகள் பறக்க 100% விசா உறுதிப்பாடு.
* அனைத்து நாடுகளுக்கும் Visit visa, மறுக்கப்பட்ட விசா, Student visa ஆலோசனை.
* ஆஸ்திரேலியா குடும்ப விசா ஆலோசனை.

## திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090 (சி-9099)



## சிங்கர் தளபாட கண்காட்சியும் மலிவு விற்பனையும்

இடம்: இல. 374, பிரதான வீதி, பருத்தித்துறை / கண்டி வீதி, கொடிகாமம்
காலம்: 2014 நவம்பர் 17 – 30 வரை




அனைத்து தளபாடங்களுக்கும் விசேட விலைக்கழிவுகள் மற்றும் இலகு கொடுப்பனவுத் திட்டங்கள்

தொடர்புகளுக்கு: 0777 910218 (பருத்தித்துறை) / 0776 433888 (கொடிகாமம்)

(சி-9087) SLMO


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.